# உதயன்

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012
இன்றைய ஆட்டம்
பங்களாதேஷ் | ஆப்கானிஸ்தான்
நியூஸிலாந்து | இங்கிலாந்து
பல்லேகல பிற்பகல் 3.30 | பிரேமதாஸ இரவு 7.30
உதயனின் தினம் ஒரு பரிசு பக்கம் 23

www.onlineuthayan.com

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 300 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 05 வெள்ளிக்கிழமை (21/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# ஐ.நாவின் அழுத்தம் அரசு மீது போதாது

## இலங்கை வந்த குழுவிடம் கூட்டமைப்பு முறையீடு

யாழ்ப்பாணம்,செப் 21
ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரே, தமிழர்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகள் இங்கே அதிகரித்துள்ளன. ஐ.நா. தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் அழுத்தம் போதாது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஒரு வாரகாலம் பயணம் மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு வடஅமெரிக்க பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியான ஹன்னி மெஹாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சோலர்ஸ் அடங்கிய 4 பேர் கொண்ட குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்றுக் கொழும்பில் சந்தித்துப் பேசியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், செல்வராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இராணுவத்தினரால் தொடர்ந்தும் காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் ஐ.நா. அதிகாரிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பார்க்க பக்கம் 4

## 25 இலங்கையரை நாடு கடத்தியது பிரிட்டன்

கொழும்பு,செப் 21
பிரிட்டனில் புகலிடம் நிராகரிக்கப்பட்ட மற்றும் விசா காலாவதியான நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் 25 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

காலை கொழும்பை வந்தடைந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தவர்க்ளில் 21 ஆண்களும் 4 பெண்களும் அடங்குகின்றனர். விசேட விமானத்தின் மூலம் வந்த இவர்களில் 13 தமிழர்களும் 8 முஸ்லிம்களும் 4 சிங்களவர்களும் உள்ளடங்குவர்.

இவர்கள் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா, நீர்கொழும்பு, கல்முனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத்

பார்க்க பக்கம் 4

**7** 12 வருடங்களின் பின்னர் சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய வருடாந்தத் திருவிழா இம்முறை நடைபெறவுள்ளது.

**8** பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதியில் சீன இராணுவத்தினர் முகாமிட்டு இருப்பது குறித்து இந்திய இராணுவத் தளபதி பிக்ராம் சிங் கவலை வெளியிட்டுள்ளார்.

**9** அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலில் மைக்ரோ சொப்ற் நிறுவனத்தின் அதிபர் பில் கேட்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

**10** சர்ச்சைக்குரிய திரைப்படம் குறித்து உலக நாடுகளிடம்ஆலோசித்து அந்நாடுகளின் கருத்தை அறிவோம் என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலாண்ட் தெரிவித்தார்.

## மஹிந்தவின் பயணத்துக்கு எதிராக தமிழகத்தில் வெடித்தது போராட்டம்

### ஆயிரக்கணக்கானோர் கைது

கொழும்பு, செப்.21
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் நேற்று பொங்கியெழுந்து போராட்டங்களில் குதித்தன.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைக் கண்டித்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை தமிழகப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் காஞ்சிபுரம், திருச்சி மற்றும் கரூர் பிரதேசங்களில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 1000பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## முல்லை நகரினில் இன்று போராட்டம்

### நில ஆக்கிரமிப்பைக் கண்டித்து

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நண்பகல் 12 மணிக்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

வவுனியா செப், 21
முல்லைத்தீவு, மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பைக் கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள கவனவீர்ப்புப் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக இடம் பெறவுள்ளது.

போர் நிறைவடைந்து 3 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் அவர்களுடைய சொந்த இடங்களில் முழுமையாக மீளக் குடியமர்த்தப்படவில்லை. அப்பகுதி மக்களின் பெரும்பகுதி நிலம் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அதில் இராணுவத் தலைமையகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை இப்பகுதியைச்சேர்ந்த பெருமளவான மக்கள் அடிப்படை வசதிகள் எவையும் அற்ற நிலையில் நலன்புரி முகாம்களில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஆனால் அம்மக்களின் நிலங்களை வழங்காது நில ஆக்கிரமிப்பை அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. இச்செயலைக் கண்டித்தே இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற உள்ளது.

பார்க்க பக்கம் 4

## வைகோவும் போர்க்கொடி



சென்னை, செப்.21
மத்தியப் பிரதேச மாநிலம் சாஞ்சியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்லும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தச் சென்னையில் இருந்து சென்ற வைகோ உள்ளிட்ட ஆயிரக்கணக்கான ம.தி.மு.கவினர் சென்ற வாகனத்தை சிந்துலாரா மாவட்டம்

பார்க்க பக்கம் 4

## பிரணாப்பை சந்தித்தார் மஹிந்த

புதுடில்லி, செப்.21
இந்தியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைசந்தித்துப் பேசினார்.

புதுடில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை - இந்தியா இடையேயான இராணுவப் பாதுகாப்பு ஒத்துழைப்புகள்,

பார்க்க பக்கம் 4

## ஐந்து வருடங்களுக்கும் நஜீப்பே முதலமைச்சர்

### ஹக்கீமின் பித்தலாட்டம் அம்பலம்

கொழும்பு, செப்.21
கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் நஜீப் அப்துல் மஜீத்தே தொடர்ந்து 5 வருடங்களுக்கும் முதலமைச்சராகப் பதவி வகிப்பாரென அரசின் அதிஉயர் மட்டமொன்று நேற்று உறுதிப்படுத்தியது.

கிழக்கு முதலமைச்சர் பதவி எக்காரணம் கொண்டும் பங்கீடு செய்யப்படமாட்டாதென்றும் அவ்வுயர் மட்டம் சுட்டிக்காட்டியது.

கிழக்கு முதலமைச்சர் பதவிக்கு, முதல் இரண்டரை வருடங்களுக்குத் தற்போதைய முதலமைச்சர் நஜீப்பும், மீதி இரண்டரை வருடங்களுக்கு மு.கா. உறுப்பினர் ஒருவரும் நியமிக்

பார்க்க பக்கம் 4

## இனத் துரோகிகளின் பட்டியலில் ஹக்கீமும்

### இடதுசாரிகள் கடும் தாக்கு

கொழும்பு, செப்.21
சுகபோக அரசியலுக்காகத் தனது இனத்தைக் காட்டிக்கொடுத்தது மட்டுமல்லாது, இனத்தின் தனித்துவத்தையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இனவாத - கொடுங்கோல் மஹிந்த [illegible] என்று இடதுசாரிக் கட்சிகள் குமுறிச் சீறிப்பாய்ந்துள்ளன.

அத்துடன், இலங்கை வரலாற்றில் இனத்துரோகிகளின் பட்டியலில் கருணா, பிள்ளையான் ஆகியோருக்கு அடுத்தபடியாக சலு[illegible] அடிபணிந்து [illegible] அமைச்சர் ஹக்கீமும் இணைந்துகொண்டுள்ளார் என்றும் இடதுசாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதேவேளை, புனித குர்ஆனில் போதிக்கப்பட்டுள்ள சிந்தனைகளைப் புறந்தள்ளி விட்டு, மஹிந்த சிந்தனையில் போதிக்கப்பட்டுள்ள மோசடிகளைக் கட்டிப்பிடித்

பார்க்க பக்கம் 4

## காணொலிக்கும் எமக்கும் தொடர்பில்லை

### அமெ. அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.21
முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வெளியிடப்பட்ட திரைப்படத்துக்கும் அமெரிக்க அரசுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனவும் சமய நம்பிக்கைகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் செயற்பாடுகளையும் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

நபிகள்நாயகம் முஹம்மதுவை மிகவும் கீழ்த்தரமாக சித்திரிப்பதோடு இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' என்ற அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் தொடர்பில் பல எதிர்ப்பு நடவடிக்கைகளில் முஸ்லிம்கள்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலித்தின் தந்தை, குகனின் மனைவி யாழ். நீதிமன்றத்தில் நேற்று சாட்சியம்

யாழ்ப்பாணம், செப்.21

மக்கள் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்த லலித், குகன் இருவரும் கடந்த டிசம்பர் மாதம் காணாமல் போனமை தொடர்பான வழக்கில் லலித்தின் தந்தையும், குகனின் மனைவியும் யாழ். நீதிமன்றில் நேற்றுச் சாட்சியமளித்தனர். இதனையடுத்து சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இவர்களது சாட்சியங்கள் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

லலித் என்று அழைக்கப்படும் வீரராஜ் லலித்குமார், குகன் என்று அழைக்கப்படும் கிட்ணன் முருகானந்தன் ஆகிய இருவரும் கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி காணாமல் போனார்கள். இது தொடர்பாக ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த குகனின் மனைவியான ஜனதா, அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலும், லலித்தின் தந்தையான ஆறுமுகம் வீரராஜ் கொஸ்கம பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக ஜனதா, வீரராஜ் இருவரும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தனித்தனியே 2011ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இரண்டு நீதிபதிகள் முன்னிலையில் இந்த இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன்போது இந்த இரண்டு வழக்குகளையும் யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து சாட்சியங்களைப் பதிவு செய்யும்படி மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் யாழ். நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர். இதன்படி கடந்த மே 14ஆம் திகதி இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் கடந்த ஜூலை 24ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சிகளின் சாட்சியங்களை இந்த மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் பதிவு செய்வதென உத்தரவிடப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

இரண்டாம் நாளான நேற்று லலித்தின் தந்தையான வீரராஜ்ஜும் குகனின் மனைவியான ஜனதாவும் நீதிமன்றில் சாட்சியமளித்தனர்.

ஜனதா சாட்சியமளிக்கையில்,

காணாமல் போன குகன் சில வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார். நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் கையெழுத்திடும் நடைமுறை இருந்துவந்தது. போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதோடு கையெழுத்திடும் நிபந்தனை நீக்கப்பட்டது. அவர் லொறி வாகனம் வைத்து மணல் ஏற்றும் வேலையில் ஈடுபட்டு வந்தார். இவர் மக்கள் போராட்ட இயக்கத்திலும் உறுப்பினராக இருக்கிறார். லலித்குமாரும் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களின் விவரங்களைப் பெற்றுக்கொண்டிருந்தார்.

2011 டிசெம்பர் 9ஆம் திகதி அன்று இரவு 9 மணி ஆகியும் குகன் வீடு வந்து சேரவில்லை. அன்று இரவு 11 மணியளவில் குகனின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு மேற்கொண்ட போது அவரது கைத்தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தது.

மறுநாளும் அவர் வராததனால் அன்று பிற்பகல் பொலிஸில் முறைப்பாடு செய்தேன். சிங்கள மொழியில் எனது முறைப்பாட்டை பொலிஸார் பதிவு செய்தனர் என்றார்.

இதனையடுத்து லலித்குமாரின் தந்தையான வீரராஜ் சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தில்,

தனது நான்கு பிள்ளைகளில் மூத்தவர் லலித். அவர் அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். 2011 டிசெம்பர் 9ஆம் திகதியன்று லலித்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதும் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் பல அழைப்புக்கள் தனது கையடக்கத் தொலைபேசிக்கு வந்தது. சில அழைப்புக்களில் இருந்து அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

எந்த இலக்கத்திலிருந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்பதை பார்க்குமளவுக்கு எனக்கு கைத்தொலைபேசியில் பரீட்சயம் இல்லை என்றார்.

அரசியல் காரணங்களுக்காக தற்போது சாட்சியமளிப்பதாக எதிரி தரப்பு சட்டத்தரணி கூறிய கூற்றை வீரராஜ் மறுத்தார்.

இந்த வழக்குத் தொடர் விசாரணைக்காக எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் மக்கள் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்த உதுல் பிரேமரட்ண சாட்சியமளிக்கவுள்ளார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் மா அதிபர், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி, இராணுவத் தளபதி, சட்ட மா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், கு.குருபரன், நுவான் போபகே ஆகியோரது அனுசரணையில் சட்டத்தரணி நிரான் அங்கிடல் முன்னிலையாகியிருந்தார். பிரதிவாதிகள் சார்பில் மகேஸ் ஜயவிக்கிரம, அரச சட்டத்தரணி செகான் டீ சில்வா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (த-4)

# உயர்தர மாணவருக்கான நாடகக் களப்பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 21

நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்குத் தோற்றிய மாணவர்களை செய்முறைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடனான நாடகக் களப்பயிற்சி நாளை சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் இயங்கிவரும் நாடக நிறுவனமான செயல்திறன் அரங்க இயக்கம் இந்தக் களப்பயிற்சியை நடத்த உள்ளது. மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இரண்டு அல்லது மூன்று தொகுதிகளாக இந்தக் களப்பயிற்சிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

"செய்முறைப் பரீட்சைக்கு முன்னதாக மாணவர்களை நாடக உருவாக்கம் மற்றும் நடிப்பு என்பவற்றில் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் இந்தக் களப்பயிற்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது" என்று செயல்திறன் அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

**யாழ். குடாநாட்டில் இயங்கிவரும் நாடக நிறுவனமான செயல்திறன் அரங்க இயக்கம் இக்களப்பயிற்சியை நடத்த உள்ளது**

பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் துறைசார் ஆசிரியர்கள் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 0773112692 அல்லது 0770366445 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-01)

# முதலமைச்சர் பதவி இல்லையேல் 120 உறுப்பினர்கள் ராஜினாமா

## பேர்டி பிரேமலால் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,செப் 21

வடமத்திய மாகாணத்தின் முதலமைச்சர் பதவி தமக்கு வழங்கப்படாவிடின் அநுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 120 பிரதேச சபை உறுப்பினர்கள் தங்களின் பதவிகளை இராஜினாமா செய்யத் தயாராக இருக்கின்றனர் என முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 154 பிரதேச சபை உறுப்பினர்களில் சுமார் 120 பேர் வடமத்திய மாகாண முதலமைச்சராக தாம் நியமிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தெரிவித்துத் தமக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதேச சபைத் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட அந்த குழுவினர் தம்மைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களின் வெளியாகியுள்ள விடயம் தவறான தீர்மானம் என்றும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற பட்சத்தில் இந்த உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்யத் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

# சஞ்சீவ பண்டாரவுக்கு விளக்கமறியல்

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டாரவை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சஞ்சீவ பண்டார கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பு நகரப் பகுதிகளில் மக்களுக்கு அசௌகரியங்களை எற்படுத்தாத வகையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் சஞ்சீவ பண்டார ஆர்ப்பாட்டம் ஒன்றில் சென்ற நிலையில் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)




யாழ்ப்பாணத்துக்கான பயணம் ஒன்றை மேற்கொண்ட இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் நேற்றுமுன்தினம் உதயன் அலுவலகத்துக்கும் வருகை தந்தார். அங்கு உதயன் பிரதம ஆசிரியரைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் அடங்கிய குழுவினர் யாழ். குடாநாட்டில் ஊடக சுதந்திரத்தின் நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

# நல்லிணக்கம், மீள்கட்டுமானம் ஆகியவற்றில் முன்னேற்றம்

## ரஷ்ய அதிகாரி இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,செப் 21

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானம் தொடர்பான விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக ரஷ்யாவின் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி விவகார ஆணையாளரான கொன்ஸ்டான்டின் டோல்கோவ் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு மேற்கொண்ட இரு நாள் பயணத்தின் நிறைவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''நிலைமை முன்னேற்றமடைகிறது. மிக வெற்றிகரமான நல்லிணக்க மற்றும் மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது பெரும் பெறுபேறாகும்'' என அவர் கூறினார். உள்ளூராட்சிச் செயன் முறையை மீள ஸ்தாபித்தல் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக டோல்கோவ் கூறினார்.

இலங்கையின் இறையாண்மை வரம்புக்குள், வினைத்திறனான பொறுப்புடைமை செயன்முறை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், மனிதாபிமான விவகாரங்களில் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால், இது குறித்து அவர் விபரிக்கவில்லை.

சர்வதேச அரங்கிலும் ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் இலங்கைக்கு ரஷ்யா தொடர்ந்து ஆதரவ ளிக்கும் எனவும் அவர் தெரி வித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையானது இரட்டைநிலைப்பாடு, சில நாடுகளை இலக்கு வைத்தல், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளித்தல் என்பவற்றைத் தொடர்ந்தால் அது பொருத்தமற்றவையாகிவிடும் எனவும் அவர் கூறினார். (த)

# மாலக்க சில்வாவை இன்று முன்னிலையாகப் பணிப்பு

கொழும்பு,செப் 21

இராணுவ மேஜர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா, றொஹான் விஜயரட்ன மற்றும் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இராணுவ மேஜரையும் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ மேஜர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்பட்டு தொடரப்பட்ட வழக்குத் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காகவே இவர்களை இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு இவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையை நாளை முன்னெடுக்குமாறு இரு தரப்பினரும் வேண்டுகோள் விடுத்தனர். இந்த நிலையிலேயே இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# உள்ளூராட்சித் தேர்தல் குறித்த இரு சட்டமூலங்கள் ஒக்ரோபரில்

கொழும்பு,செப் 21

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய தேர்தல் முறைமை குறித்த இரு சட்டமூலங்கள் ஒக்ரோபர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் என அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டமூலம் மற்றும் உள் ளூராட்சி அதிகார சபைகள் சட்டம் ஆகிய இரு சட்ட மூலங்களையும் நிறைவேற்றுவதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

உத்தேச சட்டத்தின்படி, உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான 70 சதவீத பிரதிநிதிகள் தொகுதிவாரி முறைமை மூலம் தெரிவு செய்யப்படுவர். 30 சதவீதமான பிரதிநிதிகள், விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் மூலம் தெரிவுசெய்யப்படுவர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரைப் பகுதிகளில் சவுக்குத் திட்டம்

## வட்ட வன அதிகாரி தகவல்

கடற்கரைப் பகுதிகளில் யாழ்.குடாநாட்டின் சவுக்கு மரக் கன்றுகள் நடுவதற்கு திட்டம் உள்ளது. இந்தத் திட்டங்கள் அடுத்த ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என யாழ். மாவட்ட வட்ட வன அதிகாரி ஆர்.ரஜீ ராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மணற்காட்டில் கடந்த 18 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் 2.5 ஹெக்ரேயர் பரப்பில் உள்ள சவுக்கு மரங்கள் எரிந்துள்ளன.

கடுமையான தீ பரவிய போதும் இராணுவத்தினரும் அந்தப் பகுதி பொதுமக்களும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் பெரும் அழிவு தடுக்கப்பட்டுள்ளது.

சவுக்கு மரங்களில் உள்ள சருகுகள் உதிர்ந்து விழுந்துள்ளதும் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பமும் தீ பரவக் காரணம் என்று கூறப்படுகின்றது.

மரங்கள் அடிப்பகுதி மட்டுமே தீயால் எரிந்துள்ளன. இருந்தபோதும் அடுத்து வரும் மழை காலத்துக்கு துளிர்த்து விடும் என்ற நம்பிக்கை உண்டு.

நெருப்பு,வறட்சி இரண்டுக்குமே தேக்கு மற்றும் சவுக்கு ஆகிய இரு மரங்களும் தாக்குப்பிடிக்கக் கூடியன. அந்த வகையில் இந்தச் சவுக்கு மரங்களும் துளிர்த்து விடும் என்று நம்பப்படுகிறது.

மணற்பாட்டுப் பகுதியில் 161.26 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் முழுதாக சவுக்கு மரங்கள் உள்ளன. அவற்றில் தற்போது ஓரளவு பகுதி மட்டுமே அழிந்துள்ளது. இவற்றுக்கான மீள் நடுகை மற்றும் மாற்றியமைக்கும் திட்டங்கள் அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும். கடந்த 5 ஆம் திகதி மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதன்போது சவுக்கு மரம் மீள்நடுகை மற்றும் புதிதாக மரம் நடுகை பற்றி தெரிவித்ததாகவும் கூறினார். (ம-13)

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு தென்மராட்சியில் வாழ்வாதார உதவி

தென்மராட்சி, செப். 21

பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 23 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

**சமூக சேவைகள் அமைச்சால் தலா 25 ஆயிரம் ரூபா இரு தடவைகளில் வழங்கப்படவுள்ளது.**

சமூக சேவைகள் அமைச்சால் தலா 25 ஆயிரம் ரூபா இரு தடவைகளில் வழங்கப்படவுள்ளது. சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவார்.

கந்தசாமி காந்தி-கச்சாய், அமிர்தலிங்கம் அருந்ததி-மறவன்புலோ மேற்கு, றொனால்ட் பெர்னாண்டோ கவிதா-வீரசிங்கம் வீதி சாவகச்சேரி, எஸ்.ஜெயநந்தினி-குடமியன் வரணி, ராமஜெயம் அமிர்தசுலோசனா-மருதடி வீதி சாவகச்சேரி, சற்குணராசா நந்தினிதேவி -கைதடி மேற்கு, அன்ரன் யோகவதனி- கல்வயல் சாவகச்சேரி, ஏகாம்பரம் சறோஜினிதேவி-விடத்தற்பளை, தவகுலசிங்கம் உதயரஜனி-மறவன்புலோ கிழக்கு, கதிர்காமநாதன் நாகேஸ்வரி-கெற்பேலி மிருசுவில், பிரகாஸ் மலர்விழி-தணங்களப்பு, அருந்தவராசா சுகந்தி-சரசாலை வடக்கு, சசிகுமார் செல்வராணி-கெற்பேலி மத்தி, வினாசித்தம்பி இராசமலர்- மீசாலை கிழக்கு, ஜெயக்குமார் கௌசலா-சரசாலை வடக்கு, பரமநாதன் கல்பனா தேவி-கைதடி மேற்கு, கருணாகரன் தங்கமணி-மறவன்புலோ மத்தி, ஸ்ரீஸ்குணபாலன் ஜெயகலா-விடத்தற்பளை, ஜெகேந்திரன் சந்திரகலா-பாலாவி, பன்னீர்ச்செல்வம் சற்குண சோதி-பாலாவி ஆகியோருக்கு இந்தக் கொடுப்பனவு நாளை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# சமூகசேவை அமைச்சின் வேலைத் திட்டங்கள் வடக்கு, கிழக்கில் சரியாக இல்லை

## அமைச்சின் செயலாளர் இமெல்டா தெரிவிப்பு





*யாழ்ப்பாணம், செப்.21*

*சமூக சேவைகள் அமைச்சின் வேலைத்திட்டங்கள் வடக்கு, கிழக்கில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அத்துடன் சமூக சேவைகள் அமைச்சின் வேலைத்திட்டங்கள் என்ன என்பது கூட வடக்கு, கிழக்கில் பலருக்குத் தெரியாது.*

இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூக சேவைகள் அமைச்சின் வேலைத் திட்டங்கள் என்ன என்பது தெரியாமலே பலர் இருக்கின்றனர். அதனால் எமது வேலைத் திட்டங்களை வடக்கு, கிழக்கில் முன்னெடுப்பதில் பல சிரமங்கள் காணப்படுகின்றன.

போதிய உத்தியோகத்தர்கள் எமக்கு இந்தப் பிரதேசங்களில் கடமையில் இல்லை. இதுவும் எங்களது வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குப் பாதிப்பாக அமைகின்றன.

70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் 2 லட்சத்து 29 ஆயிரம் பேர் பயன்பெறுகின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவுகள் வங்கியூடாக வழங்கப்படுகின்றன.

இதனைவிட முக்கியமாக விசேட தேவையுடையோருக்கும் எமது அமைச்சால் பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. விசேட தேவையுடையவர்கள் நமது இயலாமை தொடர்பில் எண்ணாத வகையில் நாம் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

சமூக சேவை அமைச்சால் விசேட தேவையுடையவர்களுக்கு வீடு அமைப்பதற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் வரையிலும் சுயதொழில் முயற்சிகள் மேற்கொள்வதற்காக 25 ஆயிரம் ரூபா வரையிலும் வழங்கப்படுகின்றது.

இதனைவிட ஒவ்வொரு அரச திணைக்களத்திலும் விசேட தேவை உடையவர்கள் தமது பணிகளைப் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்து கொடுப்பட வேண்டும். விசேட தேவை உடையவர்களை அதிகாரிகள் பாதுகாக்க வேண்டும்- என்றார். (ம-5)

# நெடுந்தீவில் தொழில் பயிற்சிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.21

மாகாண இளைஞர் சேவை மன்றம் நெடுந்தீவு இளைஞர் யுவதிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு தொழில் பயிற்சிகளை இங்கு ஆரம்பிக்கவுள்ளது என்று மாகாண இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரி தெரிவித்தார்.

இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐம்பது இளைஞர், யுவதிகள் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்து இங்குள்ள இளைஞர் யுவதிகளுடன் தங்கிநின்று சிரமதானப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

அடுத்த மாதத்தில் நெடுந்தீவு இளைஞர் யுவதிகள் குறிப்பிட்ட பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்துக்குச் செல்லவுள்ளனர் என்றும் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாள் எஸ்.ஈஸ்வரராஜா தெரிவித்தார். (ம-7)

# குதிரைகளுக்கு குறியிடத் தடை

நெடுந்தீவில் உள்ள குதிரைகள் யாவும் அரச சொத்து எனவும் குதிரைகளுக்கு குறியிடுதல் போன்ற நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன என்றும் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் தெரிவித்துள்ளார்.

குதிரைகளைப் பயன்படுத்தும் மக்கள் அதற்கென வருடம் ஒன்றுக்கு ரூபா ஐயாயிரம் பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடைமுறையை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# அந்தோனியார் ஆலய புனரமைப்பு

நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலய புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

இதன் புனரமைப்புப் பணிகளுக்கென மதபேதமின்றி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# அமைச்சர் டக்ளஸுக்கு நேரம் இல்லையாம் பாடசாலைக் கட்டடத் திறப்பு நிகழ்வு ரத்து

யாழ்ப்பாணம், செப்.21

வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதியில் திறக்கப்பட்ட இரு பாடசாலைகளின் புதிய கட்டடத் தொகுதிகள் நேற்று முன்தினம் திறந்து வைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், கடைசி நேரத்தில் நிகழ்வு பிற்போடப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேரமில்லை என்பதனாலேயே இப்படி நடந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் புதிய கட்டடங்களில் பாடசாலைகள் தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**கடந்த 13 ஆம் திகதி அமைச்சர் வருவதாக தெரிவிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப் பட்டிருந்தது.**

வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் பல வருடங்களாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

கீரிமலை, நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் மற்றும் பளை வீமன்காமம் பாடசாலை இரண்டிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் புதிய வகுப்பறை கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் 7.7 மில்லியன் ரூபா செலவில் வகுப்பறைக் கட்டடமும், பளை வீமன் காமம் பாடசாலையில் 5 மில்லியன் ரூபா செலவில் ஆய்வுகூடம், வகுப்பறை கட்டடம் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. [illegible] திறந்து வைப்பதற்கு கடந்த 13 ஆம் திகதி அமைச்சர் வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமைச்சரிடம் நேரம் கேட்கப்பட்டு, நேற்று முன்தினம் திறப்பு விழாவுக்கு ஏற்பாடுகளை செய்யுமாறு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால் திடீரென தவிர்க்க முடியாத காரணங்களால் அமைச்சர் வரமாட்டார் என்று பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இதனால் கட்டடம் திறக்கப்படவில்லை. மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் புதிய கட்டடத்தில் மேற்கொள்ளப் படவுமில்லை.

இதேவேளை, குறித்த திறப்பு விழாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை அழைத்ததன் காரணத்தாலேயே அமைச்சர் திறப்பு விழாவைப் பிற் [illegible] சொன்னார் என்று அறியவந்தது. (ம-5)

*நிகழ்வுகள்*

# இன்று

**ஆண்டு நிறைவு**

சங்கானை மத்தி ஸ்ரீ பாரதி சனசமூக நிலையத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழா பிற்பகல் 2 மணிக்கு நிலையத்தில் இடம்பெறவுள்ளது. நிலையத் தலைவர் மா.சற்குணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச சபை தலைவர் திருமதி நா.ஐங்கரன் கலந்து கொள்வார். இந்த நிகழ்வில் இடமாற்றம் பெற்று வந்த கிராம அலுவலர்களுக்கான வரவேற்பும் இடமாற்றம் பெற்றுச் சென்ற கிராம அலுவலருக்கான பிரிவு உபசாரமும் இடம்பெறும். (ம-29)

**மாவட்ட மாநாடு**

யாழ்.மாவட்ட யெகோவாவின் சாட்சிகள் ஏற்பாட்டில் 'இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்' எனும் தலைப்பிலான மாவட்ட மாநாடு இன்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து 3 தினங்கள் காலை 9.20 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இடம்பெறும் மாநாட்டில் முதல் நிகழ்வான இன்று வெள்ளிக் கிழமை 'நம் இருதயத்தை ஏன் காத்துக் கொள்ள வேண்டும்', 'ஆபத்தான இருதய நிலையைக் குறித்து ஜாக்கிரதை', 'உங்கள் இருதயத்தின் உள்நோக்கத்தைக் கடவுளுடைய வார்த்தை வெளிப்படுத்தட்டும்', 'உங்கள் இருதயத்தில் கடவுளைப் பரீட்சை பார்க்காதீர்கள்' எனும் தலைப்பில் பேச்சுக்கள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நாளை சனிக்கிழமை இடம்பெறும் நிகழ்வில் 'பாவ இயல்புக்குரிய செயல்களிலிருந்து உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்', 'உங்கள் இருதயத்தை யெகோவாவிற்குக் கொடுங்கள்' எனும் தலைப்புக்களில் பேச்சுக்கள் இடம்பெறும். தொடர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் நிகழ்வுகளில் காவற்கோபுரச் சுருக்கம், 'எது உண்மையான அன்பு' எனும் நாடகமும் இடம்பெறும். (ம-14)

**ஊக்குவிப்பு வழங்கல்**

யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தால் நடைமுறைப்படுத்திவரும் யாழ்ப்பாண இளைஞர் வர்த்தக வேலைத் திட்டத்தில் சுய தொழில் முயற்சி ஊக்குவிப்பு நிதியுதவி வழங்கும் நிகழ்வு முற்பகல் 10.30 மணிக்கு இல.175 பருத்தித்துறை வீதி, ஆணைப்பந்தியில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணொலிக்கும்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஈடுபட்டுவருகின்றனர்.இது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முஸ்லிம் மக்களை அவமதிக்கும் வகையில் சமீபத்தில் வெளிவந்த காணொலி தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் இராஜாங்க செயலர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

இவர்கள் தெரிவித்ததற்கிணங்க நாமும் முஸ்லிம் மக்களுக்கு தெளிவாகத் தெரிவிக்கவிரும்புவது யாதெனில் இந்தக் காணொலியில் உள்ளடங்கும் விவரங்களையும், கருத்துகளையும் நாம் ஆணித்தரமாக நிராகரிப்பதோடு எமது அரசுக்கும் இக்காணொலிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

இன்னொருவரின் சமய நம்பிக்கைக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலான திட்டமிட்ட செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். என்றுள்ளது. (16)

## முல்லை நகரினில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இன்று இந்தப் போராட்டத்தில் தென்பகுதியைச் சேர்ந்த பல அரசியல் தலைவர்கள் கட்சிபேதமின்றி கலந்துகொள்ளவுள்ள இதே வேளை- தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் எதிர்வரும் திங்கட்கிழமை முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனவீர்ப்புப் போராட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்போராட்டத்துக்கு காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. (க-400)

## 25 இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வந்தடைந்த இவர்களிடம் விமான நிலையத்தில் வைத்துக் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனிலிருந்து இலங்கை அகதிகள் 60 பேர் நாடு கடத்த திட்டமிடப்பட்டிருந்தனர். எனினும் இறுதி நேரத்தில் 25 பேர் மட்டுமே விசேட விமானம் மூலம் நேற்று இலங்கை வந்துள்ளனர். (த)

## பிரணாப்பை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இந்தியா செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்பு ஆகியன குறித்து ஜனாதிபதி மஹிந்த இந்திய ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியதாக தெரியவருகிறது.

இலங்கையில் தமிழர் இனப் பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு இந்திய ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது கோரிக்கை விடுத்ததாகவும் புதுடில்லி வட்டாரங்கள் கூறின. (த)

## மஹிந்தவின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இதேவேளை, மஹிந்த வரவைக் கண்டித்து சட்டக் கல்லூரி மாணவர்கள் இருவர் மதுரை மாவட்ட நீதிமன்றத்தின் மீது ஏறி நின்று தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ள முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால்நீதிமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பாக மாணவர்களிடம் பேச்சு நடத்தப்பட்டது.

அதேபோல், மஹிந்தவின் வருகைக்கு எதிராக நேற்றுமுன்தினம் வைகோ தலைமையிலான ம.தி.மு.கவினர் மத்தியப்பிரதேசம் சென்று கறுப்புக்கொடிப்போராட்டம் நடத்தினர்.

## வைகோவும்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பந்துர்ணா என்ற இடத்தில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.இதனை அடுத்து வைகோவும் அவரது ஆதரவாளர்களும் அங்கேயே வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்துகின்றனர்.

கடந்த 17ஆம் திகதி சென்னையில் இருந்து வாகனங்களில் புறப்பட்ட ம.தி.மு.கவினர், நேற்று முன்தினம் இரவு பந்துர்ணா என்ற இடத்தை அடைந்தனர். அப்போது அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், போராட்டத்தைக் கைவிட்டுத் திரும்பிச் செல்லுமாறு கூறினர்.

இதனை ஏற்காத வைகோ, அங்கேயே உட்கார்ந்து போராட்டம் நடத்தினார். இரவு அங்கேயே சமைத்து சாப்பிட்டு, சாலையோரத்தில் படுத்துறங்கினர். நேற்றுக் காலையும் உயர் அதிகாரிகள் வந்து வைகோவைச் சந்தித்து பேச்சு நடத்தினர். ஆனால் வைகோ திரும்பிச் செல்வதில்லை என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

இதற்கிடையே மத்தியப்பிரதேச முதலமைச்சர் ஷிவ்ராஜ் சிங் சௌஹான், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவைத் தொடர்பு கொண்டு, போராட்ட முடிவைக் கைவிட்டுத் திரும்பிச் செல்லுமாறு கோரிக்கை விடுத்தார். மேலும், இது முழுக்க முழுக்க அரசியல் விவகாரமாகும், ஆசிய நாடுகளுடன் இந்தியா நட்புணர்வை மேம்படுத்தவே விரும்புகிறது என்று குறிப்பிட்டார்.

தற்போது சாஞ்சிக்கு செல்லும் அனைத்து வீதிகளும் அடைக்கப்பட்டுள்ளன. பலத்த சோதனைக்குப் பிறகே வாகனங்கள் அனுமதிக்கப்படுகின்றன. சுமார் 11 ரயில்கள் இன்று போபாலில் இருந்து விதிஷா வரை எங்கும் நிற்காமல் செல்ல ரயில்வே நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (த)

## ஐ.நாவின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியது.

தமிழர் பிரதேசங்களில் இராணுமுகாம்கள் அமைப்பதற்கும் அவற்றுடன் இணைந்ததாக அவர்களது குடியிருப்புகள் அமைப்பதற்கும் என பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அபகரிக்கப்படுகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐ.நா. அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாமல் அகதிகளாக உள்ளனர். ஆனால் மறுபுறத்தில் இராணுவம் தமது குடியிருப்புக்களை அமைத்து தமிழர் இனப் பரம்பலை மாற்றியமைக்க முயற்சிக்கின்றது என்பதையும் அவர் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

தமிழர் பகுதிகளில் காணிப் பிரச்சினை பெரும் பூதாகரமாக எழுந்துள்ளது. இதனைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறு இலங்கை அரசினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது எனவும் சம்பந்தன் ஐ.நா. குழுவினரிடம் கூறினார்.

இலங்கை அரசு தமிழர்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. எமக்கும், அரசுக்குமிடையிலான பேச்சுக்கள் ஒரு வருடமாக நடந்து ஒரு அங்குலம் கூட முன்னேற்றம் இல்லை. அரசு அபிவிருத்தியைச் செய்தால் எல்லாப் பிரச்சினையும் சரியாகிவிடும் என்ற நினைக்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு பின்னடிக்கிறது. காணாமற்போனோர் தொடர்பில் கண்டறிவதற்கு குழு நியமனம் செய்யப்பட வேண்டும் என்று அறிவிறுத்தப்பட்ட நிலையில் அரசு காணாமற் போனவர்களுக்கு மரண சான்றிதழ் கொடுக்கின்றது என்பதையும் சம்பந்தன் இந்தப் பேச்சில் எடுத்துரைத்தார்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே, தமிழர்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறை அதிகரித்திருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் போதாமல் உள்ளது. அது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் சம்பந்தன் வலியுறுத்தினார்.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை ஐ.நா. குழுவுக்கு எழுத்தில் சமர்ப்பித்ததாகவும் அவர் கூறினார். (த-5)

## ஐந்து...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கப்படுவர் என வெளிவரும் தகவல்கள் இந்த அறிவிப்பையடுத்து முடிவுக்கு வருகின்றன.

கிழக்கு முதல்வராக மீதி இரண்டரை வருடங்களும், மு.கா. தனது கட்சி மாகாணசபை உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமதை முன்மொழிந்திருந்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இது தொடர்பில் ஏற்கனவே மு.கா. தலைவருக்கு உத்தியோக பூர்வமாக அரசு எடுத்துக்கூறியிருப்பதாகவும், அதனை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் அந்த அரச உயர்மட்டம் 'உதய'னிடம் பிரத்தியேகமாகச் சுட்டிக்காட்டியது.

கிழக்கு மாகாணசபையில் மு.காவுக்கு இரண்டு அமைச்சுப் பதவிகளை மட்டும் வழங்குவது குறித்தே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதை விடுத்து வேறு எந்தவொரு இணக்கப்பாடும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் அந்த உயர்மட்டம் குறிப்பிட்டுக்காட்டியது.

மாகாண முதலமைச்சர்களாக சு.க. சார்பானவர்களே நியமிக்கப்படுவர் என்பது சு.கவின் கொள்கை என்றும் இது அனைத்துத் தரப்பினருக்கும் தெரிந்த விடயமென்றும் அந்த உயர்மட்டம் மேலும் சுட்டிக்காட்டியது.

அதேவேளை, கிழக்கு அமைச்சரவையில் தமிழர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக அரசு அதி தீவிரமாக ஆராய்ந்துவருகின்றது எனத் தெரியவருகின்றது.

தமிழர் சார்பில் அமைச்சரவையில் ஒருவர் அங்கம் வகிப்பதன் அவசியத்தை கிழக்கு முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், அரசிடம் வலியுறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும், அமைச்சுப் பதவியை தான் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையென முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் உறுதியாக அரசிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

## இனத் துரோகிகளின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

துக்கொண்டு கொள்கையிழந்த கட்சியாகத் தற்போது அரசியல் களத்தில் மு.கா. வலம் வருகின்றது எனவும் அந்தக் கட்சிகள் மேலும் தெரிவித்தன.

கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இரண்டு போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 14 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தாலும், ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப்பெரும்பான்மையை அது கொண்டிருக்கவில்லை.

அதேவேளை, கிழக்குத் தேர்தலில் 11 ஆசனங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஐ.தே.கவும் தனது நான்கு ஆசனங்களைஎதுவித நிபந்தனையுமின்றி வழங்குவதற்கு முன்வந்ததால் கிழக்கில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் உருவெடுத்தது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட மு.கா. ஏழு ஆசனங்களைப் பெற்றிருந்தமை தெரிந்ததே. இந்நிலையில், ஆட்சியைத் தீர்மானிக்கும் அஸ்திரம் மு.காவிடம் இருந்ததால், அக்கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டன. இரு தரப்புகளும் மாறி மாறி மு.காவுடன் பேச்சு நடத்தின.

இச்சந்திப்புகளின்போது முதலமைச்சர் பதவி உட்பட தாராள விட்டுக்கொடுப்புக்கு தமது தரப்பு தயார் என்று கூட்டமைப்பு மு.காவிடம் உறுதியளித்தது. அதுமட்டுமன்றி, அதற்கு ஒரு படி மேலே சென்று வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறுகையில் அங்கு ஒரு போனஸ் ஆசனத்தைத் தருவதாகவும் அது மு.காவிடம் கூறியது.

எனினும், மு.கா. தலைமை, கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்று சாதகமானதொரு பதிலை வழங்காமல் காலத்தை இழுத்தடித்துவந்தது.

இந்நிலையில், திடீரென அந்தக் கட்சி தமது ஆதரவை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வழங்கியது. இதனையடுத்து, கிழக்கு மாகாணத்தில் அரசு மீண்டும் தமது ஆட்சியை அமைத்தது.

எனினும், முஸ்லிம் காங்கிரஸுக்கு அரசு முதலமைச்சர் பதவியை வழங்காமல், தனது கட்சியின் உறுப்பினர் நஜீப் அப்துல் மஜீத்துக்கு அந்தப் பதவியை வழங்கியது. பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருந்த மு.கா. ஏமாற்றமடைந்தது டன், இரண்டு அமைச்சுப் பதவிகளையும் மன்றாடிப் பெற்றது.

எந்தவித விட்டுக்கொடுப்பையும் செய்வதற்குத் தயார் எனக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தபோதிலும், அவர்களுடன் இணையாமல் மு.கா. ஏன் அரசுடன் இணைந்தது என்ற கேள்விக்கு அக்கட்சி பணத்திற்காக சோரம் போய்விட்டது என்றே அநேகமானோர் பதிலளிக்கின்றனர்.

அத்துடன், மு.காவின் இந்த முடிவு வரலாற்றுத் துரோகம் என விமர்சனங்கள் எழுந்துள்ள அதே வேளை, கிழக்குவாழ் முஸ்லிம் மக்களும் அவர்களின் முடிவை அங்கீகரிக்கவில்லை என்றே கூறப்படுகின்றது.

இந்நிலையில், அரசுக்கு மு.கா. தமது ஆதரவை வழங்கியதைக் கடுமையாக விமர்சித்துள்ள இடதுசாரித் தலைவர்கள் வரலாற்றுச் சந்தர்ப்பத்தை மு.கா. வரலாற்றுத் துரோகமாக மாற்றியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மு.காவின் இறுதிநேர முடிவு குறித்து கருத்து வெளியிட்ட இடதுசாரிக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கூறியவை வருமாறு:-

**சிறிதுங்க ஜயசூரிய**

சலுகைகளுக்காகவும், வெறும் பணத்துக்காகவும் மு.கா. தனது இனத்தைக் காட்டிக்கொடுத்துள்ளது. அத்துடன், முஸ்லிம்களின் [illegible] அரசின் காலடியில் அடைவுவைத்துள்ளது.

மரச்சின்னத்தையும், மறைந்த தலைவர் அஷ்ரப்பின் நாமத்தையும் வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் ஹக்கீமுக்கு இனத்தின் மீது எந்தப் பற்றுமில்லை என்பதுடன், பதவி, பட்டம் ஆகியனவே அவரின் முதல் இலக்காகும்.

தமிழ் பேசும் மக்களின் விடியலுக்காகத் தமக்கு கிடைக்கப்பெற்ற சக்தியை மு.கா. பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், பணம் அவர்களின் கண்களை மறைத்து விட்டது. மு.காவின் செயல் வரலாற்றுத் துரோகமாகும்; இதை மன்னிக்கமுடியாது; இதற்கு மன்னிப்பும் கிடையாது என்று குறிப்பிட்டார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய.

**கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண**

முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் தம்மால் பெறமுடியாது என்பது மஹிந்த அரசுக்கு நன்கு தெரியும். இதனால், சிறுபான்மையின மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே அமைச்சர் ஹக்கீமை ஜனாதிபதி ஒப்பந்தத் தரகராக - கைக்கூலியாகப் பயன்படுத்தினார். இது தற்போது அம்பலமாகியுள்ளது.

குறிப்பாக, முஸ்லிம் மக்கள் குர்ஆனை புனித நூலாக மதிக்கின்றனர். ஆனால், அந்த மதத்தைச் சார்ந்த அமைச்சர் ஹக்கீம், புனித குர்ஆனைப் புறந்தள்ளிவிட்டு மஹிந்த சிந்தனையிலுள்ள மோசடி - திருட்டுத்தனமான சிந்தனைகளைப் பின்பற்றி வருகின்றார். இது வெட்கக்கேடான செயலாகும்.

இலங்கை வரலாற்றில் தமது இனத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் சிலர் உள்ளனர். கருணா, பிள்ளையான் ஆகியோரின் பட்டியலில் தற்போது அமைச்சர் ஹக்கீமும் இணைந்துகொண்டுள்ளார். இது வரலாற்றுத் துரோகமாகும்.

தமிழ் பேசும் சமூகத்தின் அந்தஸ்தை உயர்த்துவதற்குக் கிடைக்கப்பெற்ற அருமையான சந்தர்ப்பத்தை ஹக்கீம் தனது அந்தஸ்தைப் பணரீதியில் உயர்த்துவதற்குப் பயன்படுத்திக்கொண்டுள்ளார்.

அவரை வரலாறுகூட மன்னிக்காது. ஏன், முஸ்லிம் மக்களும்கூட மன்னிக்கமாட்டார்கள். இனிமேல் மு.காவுக்கு அரசியல் களம் அக்கினிப் பரீட்சையாகவே அமையும் - என்று கூறினார் நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

**மஹிந்த கமகே**

ஹக்கீம் மு.காவின் தலைமைப் பொறுப்பையேற்றபின்னர் முஸ்லிம் மக்களைத் தொடர்ந்தும் காட்டிக்கொடுப்பதையே அவர் தனது தொழிலாகக் கொண்டுள்ளார்.

மஹிந்த அரசின் ஏகாதிபத்திய பொறிக்குள் அவர் தனது இனத்தைச் சிக்கவைத்துள்ளார் - என்றார் சோஷலிஸக் கட்சியின் செயலாளர் மஹிந்த கமகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ்மொழிப் பயன்பாட்டில் அரச துறையின் வெற்றுவேட்டுக்கள்!

இலங்கையில்,தமிழ்மொழியை நலிவுறச் செய்து, அதனை சிதைத்துவிடும் நோக்கில், அதற்கேற்ற போக்கில், இந்நாட்டு அரசு செயற்பட்டு வருகிறது. இந்த அபாயத்தை தமிழ் மக்கள் ஊன்றி உணர்ந்து, தமது மொழிக்கான உரிமைகளையும், மொழியையும் பாதுகாப்பதற்குக் குரல் கொடுக்க வேண்டியது அவசியமும் அவசரமானதுமாகும்.

இந்தக் கருத்தை-அபாய அறிவிப்பை- வெளிப்படுத்தியிருப்பவர், விடுத்திருப்பவர் தமிழ் அரசியல்வாதி எவருமோ அன்றி தமிழ் உணர்வாளர் எவருமோ அல்லர். சிங்கள மக்கள் மத்தியில் மாற்றுக்கொள்கைகளைப் பலப் படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள பிரபல வழக்கறிஞரும் முன்னேற்றவாதியுமான சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவாவே அவராவார்.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமும் சுகவாழ்வுக்கான நிலையமும் இணைந்து நடத்திய மும்மொழிக் கொள்கைக்கான செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வில் கருத்துரை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இப்போது தமிழ் மொழியைப் படிப்படியாக அடக்கி, ஒடுக்கி, அதனைச் சிதைக்கும் நடவடிக்கைகள் தாராளமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.--

சிங்களம், தமிழ் ஆகியன சட்டரீதியாக அரசகரும மொழியாக இருந்த போதிலும், சிங்களமொழி மட்டுமே அரச கரும மொழி என்ற போக்கில் அரச செயலகங்கள் செயற்படுகின்றன.--

அதுமட்டுமன்றி, காலாதி காலமாக தமிழ்மொழியில் வழங்கப்பட்ட கிராமங்களின் பெயர்கள், வீதிகளின் பெயர்கள் கூட, திடீர் திடீரென சிங்களமொழிக்கு மாற்றப் பட்டு வருகின்றன- இதேவேளை, தமிழை அரச கரும மொழியாகச் செயற்படுத்தத் தேவையான பணிகளுக்கு நிதிவளம் இல்லை என்று அரச உயர் அதிகாரிகள் காரணம் கற்பிக்கின்றனர்.--

இவ்வாறாக, அரச தரப்புத் தனது அலுவலகங்களில் தமிழ்மொழியைத் திட்டமிட்ட முறையில், வேண்டுமென்றே புறக்கணித்து வருவதனைச் சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சி ஹேவா தமிழ் மக்களுக்குத் தொட்டுக்காட்டியுள்ளார்.

நாட்டின் அரச கரும மொழிகளாக சிங்களமும், தமிழும் 1987 ஆம் ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அரசமைப்புச் சட்டத்தின் மூலம் இது உறுதிசெய்யப்பட்ட போதிலும், தமிழர் பிரதேசங்களில் தமிழ்ப் பகுதிகளில் அரசின் சிவில் நடவடிக்கைகளில், நிர்வாக அலுவல்களில் பெரும்பலானவை,சிங்கள மொழியில் மட்டுமே என்ற அடிப்படையிலேயே முன்னெடுக்கப் படுகின்றன. சிங்கள மொழிதெரியாத தமிழ்ப் பொதுமக்கள் மட்டுமன்றி, அரச அலுவலர்களும் இதனால் மிகவும் சிரமமுறுகிறார்கள்.

இதனால் அரச அலுவலகங்களில் தமிழ்ப் பொதுமக்கள் தமது தேவைகளை விரைந்து நிறைவேற்ற முடியாத நிலை நீண்டு செல்கிறது.

தமிழ் மக்களுடன் அவர்களது மொழியில் தொடர்புகளை மேற்கொள்வதற்கு தமிழ்மொழித் திறன்மிக்க அலுவலர்கள் இல்லை என்று கூறிக்கொண்டே, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாகப் பதவிக்கு வந்த அத்தனை அரசாங்கங்களும் பேரினவாதச் சிந்தனை கொண்டே மேலோங்கிச் செயற்பட்டன, செயற்படுகின்றன என்பதே உண்மை.

தமிழ் மக்களுடன் அவர்களது தாய்மொழியில் தொடர்பு கொள்வதற்கு ஆளணி இல்லை என்பதெல்லாம் வெற்று வேட்டுக் காரணங்கள் எனக் கொள்ளப்பட வேண்டியவையே. அதற்கு வகைசெய்து சிங்களத்துக்கு சமதையாகத் தமிழை அரச அலுவல்களில் பயன்படுத்த இன்றைய அரசுக்கும் விருப்பமில்லை என்பது மற்றொரு உண்மை.

இவற்றை உள்ளே புதைத்துக்கொண்டு, தேசிய மொழிகள் அமைச்சு என்ற பெயரில் புதிய அரச கூறு ஒன்றை இப்போதைய அரசு சுமார் ஒருவருடத்துக்கு முன்னர் உருவாக்கியது. இலங்கையில் இனநல்லிணக்கத்தின் அவசியம் குறித்து அனைத்துலக மட்டத்தில் பேசப்படத் தொடங்கியதும், திடீரென உதித்த ஒருவகை வியூகமே குறிப்பிட்ட அமைச்சாகும்.

அதற்கு வர்ணம் பூசி மெருகூட்டும் வகையில், இடதுசாரித் தலைவரும், முன்னர் ஒரு காலத்தில் சிங்க ளத் துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்த்து கேட்ட சமசமாஜக் கட்சியின் முன்னாள் உறுப்பினரும், நீண்டகாலமாக நாடாளுமன்றில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவருமான இடதுசாரித் தலைவர் வாசுதேவ நாணயக்காராவை அமைச்சராகக் கொண்ட தேசிய மொழிகள் அமைச்சு உருவாக்கப்பட்டது.

இன்னும் ஐந்து ஆண்டுகளில், இலங்கையில் இரு மொழிக் கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் வாசுதேவ அறிவித்திருந்தார். அது அரசின் இலக்கா அல்லது அமைச்சரின் விருப்பம் மட்டுந்தானா என்று கேட்கும் நிலை மாறுவதற்கான அசுகை கூட இன்னமும் புலப்படவில்லை. ஆம், அதற்கான செயற்கூறு எதுவும் இதுவரை தென்படவில்லை!

அரச அலுவலகங்கள் மற்றும் அமைப்புகளில் தமிழ் மொழிப் பாவனைக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்படாதிருப்பதைத் தான் நேரில் அவதானித்துள்ளதாக அமைச்சர் வாசுதேவவே ஒரு சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

நிலைமை இவ்வாறிருக்க மொழி விவகாரம் நீறு பூத்த நெருப்பாக மாறிவரும் காலம் நீடிக்கும் அதேவேளை-

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை, சிங்களப் பிரதேசங்கள் என்று காட்டுவதற்காக தமிழ்ப் பிரதேசங்களில் கௌதம புத்தரின் சிலைகளை அமைக்கும் திட்டமிட்ட செயற்பாடுகள் அதிவேகமாக நடைபெற்று வருகின்றன. தமிழ் பகுதிகளில் இனப் பரம்பலை மாற்றி, அவர்கள் தமக்கொரு தாயகம் அமைந்திருந்தது என்று உரிமை கோரவோ, சொல்வதற்கோ இடம் வைக்காத விதத்தில் காரியங்கள் அரச அனுசரணையோடு நடைபெறுகின்றன!

இவற்றை நியாய சிந்தையுடன் சுட்டிக்காட்டக்கூடிய சிங்களப் புலமையாளர்கள் ஒரு சதவீதத்தினரும் இல்லையே என்றே கூறலாம். அத்தகைய பின்புலத்தில், புஞ்சிஹேவா போன்ற மனிதாபிமானமும் மனித நேயமும் உள்ள புத்திஜீவிகள் இன்னும் பலர், எத்தனை பறைசாற்றினாலும் இனவாதம் அதனைச் சீரணித்துக்கொள்ளாது என்பதே இந் நாட்டின் அனுபவம்; இல்லை இல்லை; சாபக்கேடு!

# மொழிப் பிரச்சினையைத் தீர்க்க கிராம ரீதியாக சங்கங்கள் தேவை

## வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்பாணம், செப்.21

வடக்கு, கிழக்கில் நிலவுகின்ற மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கிராம ரீதியாக மொழிச் சங்கங்களை உருவாக்கி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மாற்றுக் கொள்கை நிலையத்தில் இணைப்பதிகாரி லயனல் குருகே.

மாற்றுக் கொள்கை நிலையத்தின் அனுசரணையுடன் சுகவாழ்வுக்கான நிலையமும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமும் இணைந்து நடத்திய மும்மொழிக் கொள்கை தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் யாழ். தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியையும் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு பிரகடனப் படுத்தியபோதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழிப் பயண்பாடு குறைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் தெளிவு படுத்தப்படுகின்ற போதும் பொது மக்கள் மத்தியில் வெளியிடப்படுகின்ற தகவல்கள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமே வெளியிடப்படுகின்றன.

குறிப்பாக மேலைத்தேய மருந்துகள் பாவிக்கும் முறை, ஆங்கில மொழியில் மட்டுமே வெளியிடப்படுகின்றது. இதனால் மொழி புரியாமல் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக பல்வேறு வழக்குகள் எமது அமைப்பால் தொடரப்பட்டுள்ளன. எனினும் கிராம ரீதியாக ஒரு மொழிச் சங்கம் இருக்குமானால் மக்கள் மொழி ரீதியாக ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.-என்றார். (ம-14)

# அஞ்சல் தின நிகழ்வு இம்முறை மன்னாரில்

கொழும்புத்துறை, செப்.21

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடமாகாண அஞ்சல் பகுதியினர் ஏற்பாடு செய்துள்ள அஞ்சல் தினவிழா இந்த முறை மன்னாரில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என்.இரட்ணசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

பிரதமவிருந்தினராக இலங்கை அஞ்சல்மா அதிபர் நாயகம் றோகண அபய ரட்ண கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம், மன்னார் பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் ஐ.சின்னப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளின் அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன், விளையாட்டு இணைப்பதிகாரி எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

அஞ்சல் தின ஊர்வலம், கலை நிகழ்வுகள், பாடல், பேச்சுப் போட்டிகள், சிறந்த ஆளணித் தெரிவுப் போட்டி, கிரிக்கெட், உதை பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும். (ம-135)

# இலங்கை வங்கியின் கடன் திட்டம் எதுவும் இங்கு நிறுத்தப்படவில்லை

## வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்பாணம், செப்.21

இலங்கை வங்கியால் வழங்கப் படும் கடன் திட்டங்கள் எவையும் இடைநிறுத்தப்படவில்லை. தற்போதும் வழங்கப்பட்டு வரு கின்றன என்று இலங்கை வங்கி யின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.எஸ்.மகேந் திரசிங்கி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் வர்த்தகர்கள் உட்பட சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தற்போது கடன் சுமைக்கு உள்வாங்கப்பட்டுள்ளாங்கள்.

இதற்குக் காரணம் சரியான திட்டமிடல் இல்லாமல் போனமையே. வங்கிகளில் நிதிப்பற்றாக்குறை நிலவுகின்ற போதும் இலங்கை வங்கியால் வழங்கப்படும் கடன் திட்டம், சேமிப்பு, கொடுக்கல் வாங்கல் எதுவும் மாற்றப்படவில்லை.

குறைந்தது நான்கு வீத வட்டியிலிருந்து அதிகூடிய 19.5 வீத வட்டிவரை தேவைக்கு ஏற்ப கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

புனர்வாழ்வு அமைச்சால் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு 4 வீத வட்டியுடனும், சிறிய நடுத்தர கைத்தொழில் தொழில் முயற்சியாளர்களுக்கு 12.5 வீத வட்டியுடனும், ஏனைய வியாபாரக் கடன், விவசாயக்கடன், வீட்டுக்கடன் என குறிக்கப்பட்ட வட்டிகளுடனும் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், பொதுமக்கள் வங்கிகளில் கடன் நிறுத்தப்பட்டுவிட்டதாக சில தவறான கருத்துக்களைக் கொண்டு 'மீற்றர்' வட்டிக்கு கடன்களைப் பெற்று அதிகளவு தொகையை மீளச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே பொதுமக்கள் கடன் உதவிகளையோ, பணக்கொடுக்கல் வாங்கல்களையோ மேற்கொள்ளும் போது இலங்கை மத்திய வங்கியால் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் உதவிகளைப் பெற வேண்டும். -எனத் தெரிவித்தார். (ம-14)

# முதியோருக்கான 1000 ரூபா கொடுப்பனவு நிலுவையுடன்

தென்மராட்சி, செப். 21

அரசால் அறிவிக்கப்பட்ட 70 வயதுக்கு மேற்பட்டவருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு நிலுவையுடன் அந்தந்த பிரதேச செயலகங்களால் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பயன்பெறவுள்ளனர்.

கொடுப்பனவுகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 250 பேருக்கு கொடுப்பனவு வழங்கி இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 100 பேரும் ஏனைய பிரதேச செயலகங்களிலிருந்து தலா 10 பேர் வீதமும் அழைக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி என்.கே.அபேரத்ன அறிவித்துள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் நிலையம் அமைக்கவும் பாதுகாப்பு தரப்பினர் தடை

## புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் ஏமாற்றம்

புதுக்குடியிருப்பு, செப்.21

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட விருந்த பஸ் நிலையத்திற்குப் பாதுகாப்புப் படையினர் தடைவிதித்ததால் அதனை அமைக்கும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

போர் காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, படிப்படியாகச் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டு வருகின்றன.

இப்பிரதேசத்தில் இயங்கி வந்த பஸ் நிலையம் சேதமடைந்துள்ளது. இதனால் மக்கள் பஸ் நிலையம் இன்றிப் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர் .

மக்களின் கோரிக்கைக் கமையப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பஸ் நிலையம் அமைப்பதற்காக ஏ-36 பிரதான வீதியிலுள்ள கைவேலி என்ற இடத்தில் 2 ஏக்கர் காணியைப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு வழங்கியுள்ளார்.

இதைத் தொடர்ந்து மேற்படி காணியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதிலியிருந்து 10 இலட்சம் ரூபா செலவில் பஸ் நிலையம் அமைப்பதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் மேற்படி காணியில் பஸ் நிலையம் அமைப்பதற்குத் தடைவிதித்த பாதுகாப்புப் படையினர் போர்க் காலச் சூழ்நிலையில் பஸ்நிலையம் இருந்த இடத்திலேயே மீண்டும் பஸ் நிலையம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள்.

முன்பு பஸ் நிலையம் இயங்கி வந்த காணி தனியாருக்குச் சொந்தமாக இருப்பதால் மீண்டும் அந்த இடத்தில் பஸ் நிலையம் அமைப்பதற்குப் பிரதேச சபை மறுத்து விட்டது. இதனால் பஸ் நிலையம் அமைக்கும் பணியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் இந்த நடவடிக்கை குறித்து விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள் பொது நலன் கருதி, பஸ் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியில் விரைவாக பஸ்நிலையத்தை அமைத்துக் தருமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

(க-115)



மன்னார் பாடசாலை ஒன்றின் முன்னால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி ஒருவர் மாணவர்கள் வீதியைக் கடப்பதற்கு உதவி புரிகின்றனர். (க-12)

## வாழ்வாதாரக் கொடுப்பனவு

முல்லைத்தீவு, செப்.20

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பண்டார வன்னிக் கிராமத்தில் வசிக்கும் 15 வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.விஜயந்தி இவற்றை வழங்கி வைத்தார். வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

(க-415)

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேராளர் மாநாடு வவுனியாவில்

### இன்று 10 மணிக்கு ஆரம்பம்

வவுனியா செப், 21

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55ஆவது பேராளர் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணி முதல் வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

''ஆசிரியர்கள், மாணவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடுவோம்'' என்ற தொனிப்பொருளில் நடத்தப்படவுள்ள இந்த மாநாட்டுக்கு இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் சங்கத்தின் புதிய தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கடமை விடுப்பு பெறுவதற்கான உரிமை உண்டு என்றும் -

தூர இடங்களில் இருந்து வருகை தரும் ஆசிரியர்கள் ஒருசோடி ரயில் ஆணைச்சீட்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும்:-

இதில் சகல ஆசிரியர்களும் கலந்து கொண்டு தமக்குரிய பிரச்சினைகள்தொடர்பாக எடுத்துக் கூறுவதோடு சங்கத்தின் எதிர்காலச் செயற்பாட்டிற்குரிய முன் மொழிவுகளை முன் வைக்குமாறும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

(க-400)

# அனுமதி பெறாத நடைபாதை கடைகளை உடன் அகற்றிவிடுங்கள்

## மன்னார் நகரசபைத் தலைவர் அறிவிப்பு

மன்னார், செப்.21

மன்னார் நகரப் பகுதிக்குள் அனுமதி பெறாது அமைக்கப்பட்டுள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களையும் உடனடியாக அகற்றுமாறு மன்னார் நகரசபைத் தலைவர் பொது அறிவித்தலொன்றை விடுத்துள்ளார்.

மன்னார் பஸார் பகுதி உட்பட மன்னார் நகரப் பகுதிக்குள் அனுமதியற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களும் உடனடியாக அகற்றப்படல் வேண்டும். இதனை மீறித் தொடர்ந்தும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் இத்தகைய நிலையங்கள் மன்னார் நகர சபையினரால் உடனடியாக அகற்றப் படுவதோடு பொருள்களும் பறிமுதல் செய்யப்படும்.

**மன்னார் பஸார் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள கடைகளின் பெயர்ப் பலகைகள் மற்றும் விளம்பரப் பலகைகள் என்பன அந்தந்தக் கடைகளின் எல்லைக்குள் அமைத்திருத்தல் வேண்டும்.**

மேலும் குறித்த வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

மேலும் தனியார் வாகனங்கள் அரச பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்க முடியாது. இதற்கான தடை ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை மன்னார் பஸார் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள கடைகளின் பெயர்ப் பலகைகள் மற்றும் விளம்பரப் பலகைகள் என்பன அந்தந்தக் கடைகளின் எல்லைக்குள் அமைதிருத்தல் வேண்டும். எல்லையை விட்டு வெளியிலிருக்கும் கடைத் தொகுதிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் நகர சபையால் உடனடியாகவே அகற்றப்படவுள்ளன.

மன்னார் நகர வர்த்தகர்கள் அனைவரும் இந்தச் செயற்பாடுகளில் நகர சபைக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் நகரசபைத் தலைவர் எஸ் . ஞானப்பிரகாசம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க-12)

## பெருமழை பெய்ததால் மகிழ்ச்சியும் கவலையும்

முல்லைத்தீவு,செப்.21

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே நீண்ட வறட்சியின் பின்னர் பெய்த பெருமழை ஒரு சாராரிடம் மகிழ்ச்சியையும், பிறிதொரு சாராரிடம் கவலையையும் ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

நீண்டகாலமாக மழையைக் காணாத இந்தப் பிரதேசம் கடுமையான வறட்சியினால் மோசமாகப் பாதிக்கப் பட்டிருந்தது. இங்குள்ள குளங்கள் யாவும் வற்றிய நிலையில் கிணறுகளின் நீர் மட்டமும் வெகுவாகக் குறைந்ததால் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இங்கு வாழுகின்ற மக்களுக்கும் மட்டுமல்ல மிருகங்களும் குடிதண்ணீரின்றிப் பெரும் அவல நிலையை எதிர்கொண்டன.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி இங்கு பெருமழை பெய்தது. இதனால் வறட்சியின் பிடியிலிருந்த இந்தப் பிரதேசம் ஓரளவு குளிர்ந்தது.

மழையைக் கண்டு மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் கால போக நெற்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு நிலப் பண்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

**மழையினால் இங்கு மீள்குடியமர்ந்து தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.**

இதேவேளை இந்த மழையினால் இங்கு மீள் குடியமர்ந்து தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

மழைநீர் ஒழுக்கு மற்றும் தூவானத்தால் வீடுகளுக்குள் இருந்த பொருள்கள் நனைந்தன. அத்துடன் நிலமும் ஈரமாகியதால் வீட்டிலிருப்பவர்கள் படுக்கக்கூட முடியாத நிலையில் இருந்ததைக் காண முடிந்தது.

(க-500)

## சிரமதானப் பணிகளில் மல்லாவி இராணுவத்தினர்



துணுக்காய், செப்.21

மல்லாவி நகரை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

கடந்த 16 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் பாலையடி 615ஆம் படைப்பிரிவின் இராணுவ உயரதிகாரி மேஜர் விஜேரத்ன தலைமையில் 100 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மல்லாவி நகரப் பகுதியில் காணப்பட்ட குப்பை கூளங்களை அகற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இவர்களின் சிரமதானப் பணிகள் வேறு இடங்களிலும் இடம்பெறும் எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-415)

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்காவிடில் நடவடிக்கை

நெடுங்கேணி, செப்.21

நெடுங்கேணியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தின் பண்பாட்டு மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

பிரதேச செயலாளரான க.பரந்தாமன் இதற்குத் தலைமை வகித்தார்.

இதில் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் வி.சுரேந்திரன், சுகாதாரப் பரிசோதகர் நக்கீரன், நெடுங்கேணி பிரதேச சபைச் செயலாளர் சி.மனோகரன், பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.பி.சுமித் முனசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

வர்த்தக நிலையங்கள், மக்கள் குடியிருப்புக்கள் ஆகிய இடங்களில் சுகாதாரத்தைப் பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இங்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

மேலும் ஒத்துழைப்பு நல்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தக் கருத்தரங்கின் முக்கிய நோக்கமெனத் தெரிவிக்கபட்டது.

(க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 வருடங்களுக்குப் பின்னர் இம்முறை நாகர் கோயில் நாகதம்பிரான் திருவிழா

## முன்னாயத்தப் பணிகள் துரிதம்

வடமராட்சி, செப்.21

சுமார் 12 வருடகால இடைவெளிக்குப் பின்னர் நடைபெறவுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்தத் திருவிழாவுக்குத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் வருடாந்தத் திருவிழா ஒழுங்குகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் மற்றும் இராணுவ பொலிஸ், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், ஆலய நிர்வாகத்தினர், திருவிழா உபயகாரர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண் டனர்.

திருவிழாக் காலத்துக்கான தற்காலிக மலசல கூடங்களை அமைத்து கோவில் சுற்றுச்சூழலை சுத்தமாகப் பேண சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கைகளை எடுப்பதுடன் குடிதண்ணீர் வசதிகளை பிரதேச சபை செய்து கொடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதேச செயலகம், பொலிஸ் நிலையங்களுக்கான தற்காலிக இடம் ஒன்றை ஆலய சூழலில் அமைப்பதுடன் தற்காலிகக் கடைகளைப் போடுவோர் பிரதேச சபையினரின் உரி மத்தையும், கோவில் தர்ம கர்த்தா சபையின் அனும தியையும் பெற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இது தவிர 7 ஆம் திரு விழாவான பிரசித்தி பெற்ற கப்பல் திருவிழாவும் 10 ஆம் திருவிழாவான சமுத்திரத் திருவிழாவும் இரவு பகலாக நடத்துவ தற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-8)

# நிவாரண விநியோக காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

உலக உணவுத் திட்டத்தின் கீழ் செப்ரெம்பர் மாதத்துக்கான உலர் உணவுப் பொருள்கள் விநியோகக் காலம் நீடிப்புச் செய்யப் பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை விநியோகக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் மறுநாள் 24 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்பாக நிவாரண விநியோகம் சம்பந்தமான அறிக்கையை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த நிவாரண விநியோகத்தைத் திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழு சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகின் றது.

இந்த நிவாரணத்துக்கு இந்த முறை 21 வகையான பொருள்கள் விநியோகிக் கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஆரம்பிக் கப்பட்ட இந்த பரீட்சார்த்தமான 21 வகையான பொருள்கள் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட்டு பெரு வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

(ம-17)

## அனுமதிப் பத்திரமில்லை; செலுத்தினார் ரூ.25 ஆயிரம்

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன இன்றியும் மது போதையிலும் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் மொத்தம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின் போது ஒருவர் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமையும் மற்றொருவர் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் இன்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமையும் இனங்காணப்பட்டது.

இந்த இருவர் மீதும் வழக்குகளைத்தாக்கல் செய்யப்பட்டது. பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. விசாரணையின் போது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து பத்திரங்கள் இன்றிச் சென்றவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், பத்திரங்கள் இன்றி மது போதையில் சென்றவருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

ெ (ம-8)

# டெங்கு பரவும் சூழலை அழிக்காவிடில் அபராதம்

வல்வெட்டித்துறைப் பகுதியில் டெங்கு நோய் பரவக்கூடிய விதத்தில் குப்பை கூளங்களைத் தேக்கி வைத்திருந்த மூவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுகாதாரப் பகுதியினரும், வல்வெட்டித் துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுற் றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸாரும் இணைந்து நடத்திய சோதனையின் போது வீடு மற்றும் வளவுகளில் டெங்கு நுளம்பு பரவும் வகையில் குப்பை கூளங்களை வைத்திருந்த மூவருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த மூவர் மீதான வழக்குகளை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து மூவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பு வழங்கினார். மூவரும் மொத்த அபராதத் தொகையான 12 ஆயிரம் ரூபாவை நீதி மன்றில் செலுத்தினார்கள்.

(ம-8)

# குடாக்கடலில் கணக்கு வழக்கின்றி வலையில் சிக்கும் சூரை மீன்கள்

## இதனால் கடல் தொழிலாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். குடாக்கடலில் கடந்த சில நாள்களாக மீனவர்களின் வலையில் பெருமளவில் சிக்கும் சூரை மீன்களால் மீனவர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களின் பின்னர் இந்த முறை சூரை மீன்கள் அதிகளவில் மீனவர்களின் வலையில் பிடிக்கப் படுகின்றன என்று வடமாகாண கடற்றொழில் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மீன்கள் தசைப் பிடிப்பானதும் உடல் பருமன் கூடியதுமாகும். உடல் பருமன் கூடிய தால் இந்த மீன்கள் சில மணி நேரத்தில் பழுதடைந்து விடுகின்றன.

இதனால் இந்த மீன்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் படகுகளில் கூலர் வசதி இன்மையால் பிடிக்கப்படும் இந்த மீன்களை உரிய முறையில் பாதுகாக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

தீவுப் பகுதி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இருந்து நேற்று பெருமளவு மீன்கள் கொட்டடி சந்தைக்கு கொண்டு வரப்பட்டு கிலோ 100 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (ம-17)

# புதிய பாணியில் சைக்கிள் திருட்டு

வலி.தென்மேற்கு,செப்.21

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் பழைய சைக்கிளை நிறுத்திவிட்டு புதிய சைக்கிளைத் திருடிச் செல்பவர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப் படுகிறது.

இதனால் மக்கள் தங்கள் சைக்கிள்களைப் பொது இடங்களிலோ, வர்த்தக நிலையங்களிலோ நிறுத்தி வைப்பதற்கு அஞ்சுகிறார்கள்.

சுதுமலையைச் சேர்ந்த 15 வயதுடைய மாணவர் ஒருவர் இரவு 8 மணியளவில் தனது புத்தம் புதிய சைக்கிளை சுதுமலையிலுள்ள கடைக்கு முன்பாக நிறுத்தி விட்டுப் பொருள்கள் வாங்கச் சென்றவேளை குறித்த சைக்கிளைத் திருட முற்பட்டுள்ளனர்.

இதை அவதானித்த மாணவன், என்னுடைய சைக்கிளை ஏன் எடுக்கிறாய் என்று கேட்ட போதும் திருடன் ஒன்றும் பேசாமல் மாணவனின் சைக்கிளுடன் வேகமாக மறைந்து விட்டான்.

கடந்த வாரமும் இதே பாணியில் சுதுமலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் இரு சைக்கிள்கள் திருட்டுப் போனமை குறிப் பிடத் தக்கது.

இதே வேளை, சுதுமலை தெற்கிலுள்ள ஒரு வீட்டுக்குப் பட்டப்பகல் சென்ற ஒருவர் அங்கு பூட்டி நின்ற புதிய சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-115)



இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மிக்செல் ஜே சிசன் யாழ். வர்த்தகத் தொழில்துறை வேளாண் மகளிர் ஒன்றியத்தினரை நேற்றுச் சந்தித்தார். இதன்போது ஒன்றியத் தொழில் முயற்சிகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் பெண்கள் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. (ம)

# சனசமூக நிலையங்கள் ஒத்துழைத்தால் அபிவிருத்தியைப் பிரதேசங்கள் காணும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இடர் முகாமைத்துவத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கு அந்தந்தப் பகுதி சனசமூக நிலையங்கள் ஒத்துழைப்பு வழங்கினால் உடனடியாக திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் என யாழ். பிரதேச செயலக ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டது.

இடர் முகாமைத்துவ திட்டத்தினால் 4.05 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வடிகால், மதகு, வாய்க்கால் என்பன குறிக்கப்பட்ட இடங்களில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக வில்லூன்றி கோயில் வீதி வடிகால் 0.5 மில்லியன் ரூபா செலவிலும், மண்பிட்டி ஒழுங்கை வடிகால் 0.4 மில்லியன் ரூபா செலவிலும், கலைவாணி மைதானத்துக்கு அருகிலுள்ள வடிகால் 0.5 மில்லியன் ரூபா செலவிலும் வில்லூன்றி கோயில் பெட்டி மதகு 0.15 மில்லி யன் ரூபா செலவிலும், நாவாந்துறை சென். மேரிஸ் வீதி வடிகால் ஒரு மில்லியன் ரூபா செலவிலும், இராசாளி குளத்திலிருந்து கடற்கரை வரையான வடிகால் 1.5 மில்லியன் ரூபா செலவிலும் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பணிகளுக்கு அந்தந்த பகுதி சனசமூக நிலையங்கள் முன் வந்தால் உடனடியாக பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

# தாவரக் குழைகள் போட்டு கணவாய் பிடிக்கத் தடை

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். குடாக்கடலில் தாவர குழைகளைப் போட்டு கணவாய் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிலர் கடலில் தாவரக் குழைகளைப் போட்டு கணவாய் பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

அரசினால் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்திக் கடற்றொழிலில் ஈடுபடுவதைப் போன்றே தாவரக் குழைகளைக் கடலில் போட்டு கணவாய் பிடிப்பதும் தடை செய்யப்பட்டவற்றில் அடங்கும்.

இவ்வாறு தாவரக் குழைகளைப் போட்டு கணவாய் பிடிப்போர் இனங் காணப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடுதலாக வடமராட்சி கிழக்கு தாளையடி, ஆழியவளை போன்ற கடற் பகுதிகளிலேயே இவ்வாறு தாவரக் குழைகள் போட்டு கணவாய் பிடிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்தத் தாவரக் குழைகளைக் கடலில் போடுவதால் மீன்பிடி வலைகள் சேதமடைகின்றன என்றும் கடற்றொழிலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம-17)

# பெண் சாரதி ஓட்டோக்கள் தரிக்க யாழ். நகரில் இடம்

## மின்சார நிலைய வீதியில்

யாழ்ப்பாணம், செப்.21

பெண்கள் சாரதிகளாக உள்ள ஓட்டோக்களை நிறுத்துவதற்காக விசேட இடமொன்று நேற்றுமுன்தினம் முதல் யாழ். நகரில் மின்சார நிலைய வீதியில் யாழ். வைத்தியசாலைக்குப் பின்புறமாக ஒதுக்கப் பட்டுள்ளது.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தால் பெண்கள் சாரதிகள் 30 பேருக்கு ஓட்டோ கடந்த ஜனவரி மாதம் வழங்கப்பட்டது.

எனினும் ஓட்டோ சாரதிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிலையிலும் ஓட்டோ தரித்து நிறுத்துவதற்கு யாழ். நகரில் இடம் ஒதுக்கப்படாத காரணத்தால் பிரதேச ரீதியாகப் பெண்கள்சாரதிகளாக இருந்து ஓட்டோ சேவையை வழங்கி வந்தனர்.

இந்த நிலையில் யாழ். பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.உதயனி ஓட்டோக்களை நிறுத்துவதற்கான விசேட இடத்தை யாழ். மாநகர சபையின் அனுமதியுடன் பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு தழுவிய ரீதியில் கடையடைப்பு

## மத்திய அரசுக்கு எதிராக



டில்லி, செப்.21

டீசல் விலை உயர்வு, சிலிண்டர்களுக்கு கட்டுப்பாடு, அன்னிய முதலீட்டுக்கு அனுமதி உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கண்டித்து நேற்று நாடு முழுவதும் முழு அடைப்பு நடத்தப்பட்டது.

மத்திய அரசின் முடிவுகளைத் திரும்பப் பெற வலியுறுத்தி இடதுசாரி அமைப்புகளும், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளும், பல்வேறு தொழிற்சங்கங்களும் நேற்றைய முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தன.

இந்த போராட்டத்துக்கு முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாடி கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தக் கட்சியின் ஆட்சி நடைபெறும் உத்தரப் பிரதேசத்தில் பல இடங்களில் நேற்றுக் காலை ரயில் மறியல் செய்யப்பட்டது. அலகாபாத்தில் நிரஞ்சன் ரயில்வே பாலத்தில் 100 இற்கும் மேற்பட்ட சமாஜ்வாடி தொண்டர்கள் தண்டவாளத்தில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் அந்த வழியாக வந்த திரிவேணி எக்ஸ்பிரஸ் நிறுத்தப்பட்டது. ஹசரத்கன்ச்சில் கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சுல்தான்பூரில் வால் மார்ட் கடை எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங், சோனியா உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன. ஆக்ராவிலும் ரயில்கள் நிறுத்தப்பட்டன.

பீகார் தலைநகர் பாட்னாவில் பாரதீய ஜனதாக் கட்சி இளைஞர் அணியினர் பல இடங்களில் ரயில்களை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ரயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஒரிசா தலைநகர் புவனேஷ்வரிலும் பல இடங்களில் ரயில்கள் நிறுத்தப்பட்டன. கொல்கத் தாவில் ஹவுரா அருகே பா.ஜ. தொண்டர்கள் ரயிலை மறிக்க முற்பட்டனர். அப்போது திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் பா.ஜ. தொண்டர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பொலிஸார் தலையிட்டு அவர்களை சமாதானப்படுத் தினர். கடையடைப்புப் போராட்டத்துக்கு இடது சாரிகள் அழைப்பு விட்டிருந்தும், மம்தா எதிர்ப்புக் காரணமாக மேற்கு வங்கத்தில் பந்த் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இதே போல் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களிலும் போராட்டம் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

மும்பையில் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களை முன்னிட்டு பந்த் போராட்டத்தில் பங்கேற்க போவதில்லை என்று சிவசேனா மற்றும் ராஜ்தாக்கரே கட்சி அறிவித்திருந்தது. இதனால் எனவே அங்கும் எந்தப் பாதிப் பையும் ஏற்படுத்தவில்லை. கர்நாடகாவில் பஸ்கள் ஓடவில்லை. ஊழி யர்கள் வராததால் அரசு அலுவலகங்கள் வெறிச் சோடின.

பெங்களூரில் கடை கள், வர்த்தக நிறுவனங்கள் திறக்கவில்லை. பெற்றோல் நிலையங்கள் மூடப்படிருந்ததால், வாகனச் சாரதிகள் அவதிப்பட்டனர். அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பா.ஜ. மற்றும் இடது சாரி கட்சிகள் ஆர்பாட்டம் நடத்தின. ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். (வ)

## காஷ்மீரில் சீன இராணுவத்தினர்

### தளபதி சிங் கவலை



டில்லி, செப்.21

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதியில் சீன இராணுவத்தினர் முகாமிட்டு இருப்பது குறித்து இந்திய இராணுவத் தளபதி பிக்ராம் சிங் கவலை வெளியிட்டுள்ளார்.

டில்லியில் இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சீன இராணுவத்தினர் 4 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். இந்தப்பகுதியில் சீனாவால் அமைக்கப்படும் ரயில், வீதி மற்றும் நீர்மின் திட்டப் பணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக இவர்கள் அங்கு உள்ளனர். ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு இந்தியா சொந்தம் கொண்டாடி வருவதால், தனது நாட்டு இராணுவத்தினரை இந்தப் பகுதியில் நிறுத்தி இருப்பதற்காக சீனாவிடம் கவலை தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இருப்பினும், சீன இராணுவத்தினர் அங்கு இருப்பதால் இந்திய எல்லை யின் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. 1962 போரின் போது நடந்தது போன்ற சம்பவம் இப்போது நடக்க வாய்ப்பில்லை- இவ்வாறு பிக்ராம் சிங் கூறினார். (வ)

## மஹிந்த வருகையைக் கண்டித்து அரசிலிருந்து தி.மு.க. விலகுக

### பா.ஜ.க. தலைவர் வேண்டுகோள்



சென்னை, செப்.21

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து மத்திய அரசுக்கான ஆதரவை தி.மு.க. விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழக பாரதீய ஜனதாக் கட்சி தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்திய வருகையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார். மத்தியில் ஆட்சியில் உள்ள ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசில் தி.மு.கவும் அங்கம் வகிக்கிறது.

தி.மு.கவைப் போல மத்திய அரசில் அங்கம் வகித்து வந்த மற்றொரு கட்சியான திரிணமூல் காங் கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, டீசல் விலை உயர்வு, சமையல் எரிவாயு மீதான கட்டுப்பாட்டை கண் டித்து மத்திய அரசுக்கான ஆதரவை விலக்கி கொண் டுள்ளார்.

மத்திய அரசின் அழைப்பை ஏற்றுதான் ராஜபக்ஷ இந்தியாவுக்கு வருகிறார். ராஜபக் ஷ வின் வருகையைத் தடுத்து நிறுத்த முடியாததால், மத்திய அரசில் இருந்து தி.மு.க. விலக வேண்டும்- என்றுள்ளது.



இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து தீக்குளித்து இறந்த சேலம் ஓட்டோச் சாரதி விஜயராஜ் உடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, நண்பகல் போஸ் மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன் பின்னர் பொதுமக்கள் அஞ் சலிக்காக உடல் வைக்கப் பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

## மத்திய அரசின் நிகழ்வுகள் புறக்கணிக்கப்படும்

### கருணாநிதி தெரிவிப்பு

மத்திய அரசின் நிகழ்ச்சிகளை புறக்கணிக்க இருப்பதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கட்சியின் அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி, இந்திய ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

எனினும் இது காங்கிரஸ் கூட்டணியில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலகிக் கொண்டுள்ளது என்று அர்த்தப்படாது என்றும், கட்சியின் தலைவர் கருணாநிதி சுட்டிக்காட்டி யுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அதி ருப்தி இருக்கிறது. இதனை வெளிப்படுத்தவே இந்த புறக் கணிப்பு தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளதாக மேற்படி ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## அரசியலுக்காக இலங்கை விவகாரத்தை தளமாகப் பயன்படுத்தும் தமிழகக் கட்சிகள்

### துக்ளக் பத்திரிகை ஆசிரியர் சோ



தமிழக அரசியல் கட்சிகள் தமது வாக்குப் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இலங்கைப் பிரச்சினையை ஒரு தளமாகப் பயன்படுத்துவதாக, துக்ளக் பத்திரிகையின் ஆசிரியர் சோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற அரசியல் கட்சிகள் அனைத்தும், தமிழகத்தில் வாக்குப் பலத்தை இழந்த கட்சிகள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்களில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள கட்சிகள் தமது அரசியல் பலத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளும் நோக்கில், பல்வேறு எத்தனிப்புகளை மேற்கொள்கின்றன.

இதற்கு இலங்கை அரசுக்கு எதிரான ஆர்பாட்டங்களை தளமாகப் பயன்படுத்துகின்றன.

இதன் அடிப்படையிலேயே வை.கோ போன்றவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகைக்கும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தனி ஈழம் அமைக்கும் தமிழக அரசியல் வாதிகளின் கனவு, பகல் கனவு என்றும், இது உண்மை யானது இல்லை என்றும் தமிழத்தில் உள்ள ஒவ்வொரு தமிழனும் இலங்கையரின் நிலை கண்டு கவலையடைகின்ற போதும், அரசியல் கட்சிகள் அதனைக் கொண்டு அரசியல் நடத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (வ)

# உடைந்தது அன்னா ஹசாரே அணி



ஊழலுக்கு எதிராக, நானும், அரவிந்த் கெஜ்ரிவாலும், தனித்தனி வழிகளில் போராட்டம் நடத்துவோம் என்று அன்னா ஹசாரே தெரிவித்தார்.

லோக்பால் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக, சமூக சேவகர் அன்னா ஹசாரே, தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறார். அவரது குழுவில் அங்கம் வகித்த, அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்ட சிலர், அரசியல் கட்சி ஆரம்பிக்கப் போவ தாக அறிவித்தனர்.

ஹசாரே குழுவைச் சேர்ந்த, மற்றொரு தரப்பினர், இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, ஹசாரே, தன் குழுவைக் கலைத்தார். அரசியல் கட்சி ஆரம்பிப்பதிலோ, தேர்தலில் போட்டியிடுவதிலோ, எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஏற்கனவே திட்டவட்டமாகத் தெரிவித்து விட்ட அன்னா ஹசாரே, தன் அடுத்த கட்டப் போராட்டம் குறித்து ஆலோசிப்பதற்காக, நேற்று முன்தினம் டில்லிக்குச் சென்றார்.

ஆலோசனைக் கூட்டத்தில், அரவிந்த் கெஜ்ரிவால், கிரன் பேடி, பிரசாந்த் பூஷன், சந்தோஷ் ஹெக்டே, மனிஷ் சிசோ டியா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கூட்டம் முடிவடைந்த பின், அன்னா ஹசாரே தெரிவிக்கையில்:

ஊழலுக்கு எதிராக, என் வழியில் போராட்டங்களைத் தொடர்வேன். நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்வேன். அர விந்த் கெஜ்ரிவால், அரசியல் கட்சி ஆரம்பிக்கப் போவதாகத் தெரி வித்துள்ளார். எனவே, ஊழலுக்கு எதிரான, அவரது போரட்டம், அரசியல் வழியில் நடக்கும்.

ஹசாரே குழு இரண்டாகப் பிரிந்தது, துரதிர்ஷ் டவசமானது. அரவிந்த் கெஜ்ரிவால் கட்சி சார்பில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், ஊழல் பின்னணி இல்லாதவர்களாக இருந்தால், அவர்களை ஆதரிப்பேன். அரசியல் ஆதாயம் கருதியோ, தேர்தல் பிரசாரத்துக்காகவோ, என்னுடைய புகைப்படங்களையோ, பெயரையோ, பயன்படுத்தக் கூடாது என்று கெஜ் ரிவாலிடம் அறிவுறுத்தியுள்ளேன்-என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் குண்டுத் தாக்குதல்

## 10 பாக். விமானப்படையினர் சாவு

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியான பெஷாவர் பகுதியில் விமானப் படைக்குச் சொந்தமான வாகனத்தின்மீது நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் சுமார் 10 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் படாபர் நகரில் இந்தச்சம்பவம் நடைபெற்றுள்ளது. மிகுந்த சேதத்தை விளைவிக்கக் கூடிய வெடி பொருள்கள் நிரப்பிய கார் ஒன்று விமானப் படைக்குச் சொந்தமான வானுடன் மோதியது.




இந்த விபத்தில் அருகில் இருந்த இரு வான்கள் மற்றும் ஒரு பஸ்ஸும் சிக்கியது. இதில் சம்பவ இடத்திலேயே 10 பேர் வரை உயிரிழந்தனர். 35இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். விபத்தில் காயமடைந்த விமானப் படை அதிகாரிகள் உடனடியாக இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மற்றவர்கள் பெஷாவர் நகரில் உள்ள லேடி ரீடிங் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு எந்தவித தீவிரவாதக் குழுக்களும் பொறுப்பேற்காத நிலையில் தாலிபான்கள் நடத்தியிருக்கக்கூடும் என கருத்தப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் பாகிஸ்தானின் அரச படைக்கு எதிராக நடத்தப்படும் தீவிரவாதச் செயல்கள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பெஷாவர் பழங்குடி இனத்தவர்களின் பகுதிக்கு நுழைவு வாயிலாக இருப்பதாலும் இந்நகரம் மட்டுமே தாக்குதலுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. மேலும் தற்போது நடைபெற்றுள்ள படாபெர் நகரம் 1958-1970 வரையில் ரஷ்ய இராணுவத்தின் ரகசிய இடமாகச் செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (வ)

## சீனாவில் மீன்களுக்கான கண்கவர் அழகுப் போட்டி



உலகில் முதன் முதலாக கோல்ட் பிஷ் ரக மீன்களுக்கான அழகுப் போட்டி சீனாவில் நடத்தப்பட்டுள்ளது.

சீனாவின் புஸோ பகுதியில் நடத்தப்பட்ட மேற்படி மீன்களுக்கான சர்வதேச அழகுப் போட்டியில் 14 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3000 மீன்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

மீன் வளர்ப்பாளர்கள் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் தமது மீன்களை இந்தப் போட்டியில் பங்கேற்கச் செய்தனர்.

மேசைகளின் நீண்ட வரிசையில் காணப்பட்ட குவளைகளில் மேற்படி மீன்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நீளமான மீன்கள், பாரம் கூடிய மீன்கள் போன்ற 12 பிரிவுகளின் கீழ் இந்த அலங்கார மீன்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டன.

''நாங்கள் பிரதானமாக 5 உள்ளடக்கங்களை கொண்டு உலகில் அழகிய தங்க மீனை தெரிவு செய்தோம். இனம், உடல் கட்டமைப்பு, நீந்தும் விதம், நிறம் மற்றும் ஒட்டு மொத்தமான ஈர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மீன்களை மதிப்பிட்டோம்'' என்று இப் போட்டியின் நடுவர் குழாமைச் சேர்ந்த யே குய் சாங் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் பங்குபற்றிய 1.75 கிலோ கிராம் நிறையுடன் கோல்ட் பிஷ் மீன் பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ளது.

நான் கடந்த 40, 50 வருடங்களாக கோல்ட் பிஷ்களை வளர்த்து வருகின்றேன். ஆனால் இப்படியொரு மீனை இன்றுதான் கண்டேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சிரியா பிரச்சினைக்கு பேச்சு மூலம்தான் தீர்வு

### பான் கீ மூன் கருத்து

டமாஸ்கஸ், செப்.21

சிரியா பிரச்சினைக்கு பேச்சு நடத்துவதன் மூலம் தான் தீர்வு காண முடியும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்தார்.

சிரியா நாட்டை தங்கள் வசம் கொண்டு வரும் பொருட்டு அரசுப் படைக்கும் போராளிக் குழுக்களுக்கும் இடையே தீவிர மோதல் நடைபெற்று வருகிறது. இந்தச் சண்டையில் முக்கிய நகரங்களான டமாஸ்கஸ் மற்றும் அலெப்போ தரை மட்டமாகின.

இதில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் சொந்தங்களையும் உடைமைகளையும் இழந்து பரிதவித்து வருகின்றனர். இரு தரப்புகளும் தீவிர மோதலில் ஈடுபட்டுள்ள நிலையில், மோதல் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வாகாது பேச்சுக்கு வரவேண்டும் என்று ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை 20 ஆயிரம் சிரியா மக்கள் இறந்துள்ளனர் என்று ஐ.நா அமைப்பினர் எச்சரித்துள்ளனர். (வ)


## நேட்டோவின் செயற்பாடுகள் ஆப்கனில் நிறுத்தம்

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புத் தரப்பினருடனான இணை நடவடிக்கைகளை நேட்டோ அமைப்பு இடைநிறுத்தியுள்ளது. நேட்டோப் படையினரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றமை அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இதுவொரு தற்காலிக நடவடிக்கை என நேட்டோஅமைப்பின் சிரேஷ்ட பேச்சாளர் கேணல் டொம் கொலின் குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. உள்ளகத் தாக்குதல்கள் காரணமாகக் கொல்லப்படும் நேட்டோப் படையினரின் எண்ணிக்கை 40 வீதத்தால் அதிகரித்துள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், மதத்தை இழிவுபடுத்தும் அமெரிக்கத் திரைப்படத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றுள்ளதைக் கவனத்தில் கொண்டும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சூகிக்கு அமெரிக்கா உயர் விருது



வொஷிங்டன், செப்.21

அமெரிக்காவின் உயரிய விருது மியன்மார் எதிர்க் கட்சித் தலைவர் ஆங்சாங் சூகிக்கு வழங்கப்பட்டது.

வீட்டுக்காவலில் இருந்து விடுதலையானபின் மியன்மார் எதிர்க்கட்சித்தலைவர் ஆங்சாங்சூகி, அந்நாட்டு அரசியலில் முக்கியத்துவம் பெற்று வருகிறார். இந்த நிலையில் முதன்முறையாக அவர் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி ஒபாமா, கிளின்டன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இந்நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில், அமெரிக்காவின் தங்கப் பதக்கத்துடன் கூடிய உயரிய விருது ஆங்சாங் சூகிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. (வ)

## அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் பில்கேட்ஸ்



அமெரிக்க பணக்காரர்கள் பட்டியலில் மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் அதிபர் பில் கேட்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

'பார்ப்ஸ் மகஸின்' என்ற பத்திரிகை, உலகம் மற்றும் அமெரிக்காவில் பல்வேறு துறைகளில் முதலிடத்தில் இருப்பவர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

அந்தப் பத்திரிகை தற்பொழுது அமெரிக்கப் பணக்காரர்களில் முதல் பத்து பேரின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் அமெரிக்காவின் மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் அதிபர் பில் கேட்ஸ் இந்த வருடமும் முதலிடத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

சொப்ற்வெயர் தொழில் நுட்பத்தில் ஜாம்பவானாக இருந்து வரும் அவரின் சொத்து மதிப்பு 66 பில்லியன் டொலர் என்று அது கூறியுள்ளது. அதாவது இந்திய மதிப்புக்கு மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ஆகும்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் அவரின் சொத்து மதிப்பு ரூபா 700 கோடியாக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து 46 பில்லியன் டொலருடன் பெர்க்சைர் ஹாத்வே நிறுவனத்தின் அதிபர் வாரன் பப்பெட் இரண்டாம் இடத்திலும், 41 பில்லியன் டொலர் மதிப்புடன் ஆராக்ல் நிறுவனத்தின் அதிபர் லார்ரி எல்லிசன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (வ)

## தென்னாபிரிக்க சுரங்கத் தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திருப்பினர்

தென்னாபிரிக்காவில் வன்முறைகள் இடம்பெற்ற மரிக்கானா பகுதி சுரங்கத் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

குறித்த சுரங்கத் தொழிலாளர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பை அடுத்து ஏற்பட்ட வன்முறைகளில் 44 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

22 வீத சம்பள உயர்வு வழங்குவதற்கு சுரங்க உரிமையாளர் சம்மதித்ததை அடுத்து ஆறு வார கால பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் 34 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டமை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உலகில் முன்னணி பெறுமதிமிக்க உலோகங்களின் உற்பத்தி நாடான தென்னாபிரிக்காவின் ஏனைய சுரங்க தொழிலாளர்களும் இதன்பின்னர் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## எடை அதிகரிப்பால் தூக்கிலிருந்து தப்பிவரும் கொலையாளி

அமெரிக்காவில் உடல் எடை அதிகமாக இருப்பதால் ரொனால்ட் போஸ்ட் என்பவர் தூக்குத்தண்டனையிலிருந்து தப்பி வருகிறார்.

அமெரிக்காவின் வடக்கு ஒகியோவைச் சேர்ந்தவர் ரொனால்ட் போஸ்ட் (வயது 53). இவரது உடல் எடை 218 கிலோ. இவர் கடந்த 1983 ஆம் ஆண்டு ஒகியோவில் உள்ள விடுதியில் கொள்ளையடிக்க முயன்றார்.



அப்போது அதைத் தடுத்த விடுதிப்பெண் ஊழியர் ஹெலன் வான்ட்ஷ் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். அவரைக் கைது செய்த பொலிஸார் அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

அதையடுத்து அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அமெரிக்காவில் விஷ ஊசி போட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

கடந்த ஜனவரி 16 ஆம் திகதி மரண தண்டனையை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அவரது உடல் எடை அதிகமாக இருப்பதால் அதை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.

அதை தொடர்ந்து அவர் உடல் எடையை குறைத்த பின்பு தண்டனையை நிறைவேற்றவும் என்று தள்ளி வைக்கப்பட்டது. இதற்கிடையே அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார்.

அதில், ரொனால்ட் உடல் நலம் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. அவரது உடலில் கொழுப்புச் சத்து அதிகரித்து விட்டதால் எடை கூடிக் கொண்டே வருகிறது. எடையை குறைக்க அவரால் குனிந்து நிமிர்ந்து உடற் பயிற்சி செய்ய முடியவில்லை.

முட்டி, முதுகு பகுதியில் வலி ஏற்பட்டுள்ளது. அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. எனவே அவரது உடல் எடையை குறைக்க மருத்துவ சிகிச்சை தேவைப்படுவதால் மரண தண்டனையை இன்னும் ஒரு வருடத்துக்கு தள்ளி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. ஏவுகணைத் திட்டம் சீனாவுக்கு எதிரானது அல்ல

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

**ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், சீனாவுடனான உறவை மேம்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படும்.**

அமெரிக்க ஏவுகணை திட்டம் சீனாவுக்கு எதிரானது அல்ல என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜாய் கார்னி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் ஏவுகணைத் திட்டம் சீனாவுக்கு எதிரானது அல்ல. அந்தப் பிராந்தியத்தில் வட கொரியாவின் ஏவுகணை மிரட்டலை சமாளிக்கவே ரேடார் கண்காணிப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

ஏவுகணைகளை எந்த நாட்டையும் மிரட்டுவதற்காகப் பயன்படுத்த வில்லை. தற்காப்புக்காகவே அவை பயன்படுத்தப்படு கின்றன. சீனாவுடன் உறுதியான கூட்டு உறவையே அமெரிக்கா விரும்புகிறது.

இருநாடுகளுக்கு இடையே கவலையளிக்கும் பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பான பேச்சுகள் தொடர்ந்து நடத்தப்படும்.

அமெரிக்க பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் அமெரிக்க மக்களின் விருப்பத்தின் பேரிலேயே ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் சீனாவுடனான உறவைக் கடைப்பிடிக்கிறது.

பல்வேறு நிலைகளில் சீனாவுடன் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கூட்டுறவை மேம்படுத்துவது இருநாடுகளுக்கும் பயனளிக்கும்.

அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் நேர்மையற்ற வர்த்தக நடைமுறைக்கு எதிராகச் செயற்படும். இதனை உலக வர்த்தக மையத்தின் பார்வைக்குக் கொண்டு செல்வோம்.

ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், சீனாவுடனான உறவை மேம்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படும்.

சீனாவும், ஜப்பானும் தங்களது பிரச்சினைகள் பற்றி நேரடியாகப் பேசித் தீர்வு காண வேண்டும் - என்றார். (வ)

# பிரான்ஸ் வார இதழில் நபி குறித்த கேலிச்சித்திரம்

உலக ரீதியில் முஸ்லிம்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய அமெரிக்க திரைப்படத்தைத் தொடர்ந்து இப்போது பிரான்ஸ் வாரப்பத்திரிகை ஒன்று முகமது நபி தொடர்பான கேலிச் சித்திரத்தை வெளியிட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கேலிச்சித்திரம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்பதால், இது குறித்து அமைதிகாக்குமாறு இஸ்லாமிய நாடுகளை பிரான்ஸ் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அத்துடன் அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்துவிடாமலிருக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளது.

இஸ்லாமிய நாடுகளில் உள்ள பிரான்ஸ் தூதரகங்கள் மற்றும் அந்நாட்டு நிறுவனங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. 20 நாடுகளில் உள்ள தூதரகங்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை விடப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் வெள்ளிக்கிழமை சிறப்புத் தொழுகை நடத்துவது வழக்கம். இந்த நாளில் தூதரகங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்பதால் விடு முறை விடப்பட்டுள்ளதாக பரிஸிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

**கேலிச்சித்திரம் வெளியிட்ட பத்திரிகையான சார்லி ஹெப்டோவுக்கு கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.**

கேலிச்சித்திரம் வெளியிட்ட பத்திரிகையான சார்லி ஹெப்டோவுக்கு கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு இதேபோல சிறப்புப் பதிப்பு வெளியிட்ட இடதுசாரி பத்திரிகை அலுவலகம் மீது நெருப்புக் குண்டுகள் வீசப்பட்டன.

நான்கு கேலிச் சித்திரங்களை அந்த வார இதழ் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பிரான்ஸ் பிரதமர் ஜீன் மார்க் அரால்ட், இந்த கேலிச் சித்திரம் வெளியிட்டதற்கு பொறுப்பானவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

# முஸ்லிம்களுக்கு எதிரான படம்; நாடுகளின் கருத்தறிவோம்

## அமெரிக்கா தெரிவிப்பு

சர்ச்சைக்குரிய திரைப்படம் குறித்து உலக நாடுகளிடம் ஆலோசித்து அந்த நாடுகளின் கருத்தை அறிவோம் என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலாண்ட் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது:-

சகோதரத்துவ நாடுகளுடன், முஸ்லிம் மதத்துக்கு எதிராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள திரைப் படம் குறித்து நாம் (அமெரிக்கா) கலந்தாலோசிப்போம்.

அமெரிக்கத் தூதரகம் உள்ள நாடுகளிடம் மட்டும் என்றில்லாமல் அனைத்து நாடுகளுடனும் இது குறித்து விவாதித்து அவர்களின் கருத்தை அறிவோம்.



திரைப்படம் குறித்து மதத் தலைவர்கள் அல்லது அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவிப்பதை அமெரிக்கா வரவேற்கிறது. திரைப்படம் குறித்து அமெரிக்காவும் கண்டனம் தெரிவிக்கிறது. ஆனால், வன்முறையைத்தூண்டும் விதமாக முஸ்லிம் மதத் தலைவர்கள் பேசக் கூடாது.

முஸ்லிம் நாடுகளில் நடைபெறும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த இருவழிகள் உண்டு. முதலாவது, பாதுகாப்பை அதிகரித்து போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவது. இல்லையெனில், அமைதியான வழியில் போராட வேண்டும் என்று போராட்டக்காரர்களைக் கேட்டுக் கொள்வது. வன்முறையினால் மற்றவர்களின் உயிரை எடுப்பதற்கு இங்கு யாருக்கும் உரிமையில்லை-என்றார். (வ)

## சீனாவில் அமெ. தூதரகம் மீது தாக்குதல்

சீனாவில் உள்ள அமெரிக்கத் தூதகரம் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளது.

தூதரகத்தின் கதவுகள் மற்றும் வாகனங்கள் என்பன சேதமாக்கப்பட்டன என்று, சீனாவில் உள்ள அமெரிக்கத் தூதகரத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சீனாவுக்கான தூதுவர் கெரிலோகேவை பாதுகாப்பதற்காக, சீனாவின் பாதுகாப்பு அதிகாரிகள் பெரும் முயற்சியை மேற்கொண்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீனாவில் உள்ள அமெரிக்கத் தூதுரகத்தையும், தூதரகத்தின் அதிகாரிகளையும் பாதுகாப்பதற்கு உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமெ[illegible] கேட்டுள்ளது. (வ)


# 64ஆவது அகவையில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21.09.1948

ஆண்டவன் அடியில் 21.09.2011

அமரர்

## அ.தவநாதன்

நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும்......
ஆடியபாதம் வீதி திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அமரர் அருமைநாதன் தவநாதன்அவர்களின் 'அகவை 64இல் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி' - இன்றாகும் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.
'ஆண்டவர் அழைப்பிதழ் கிடைத்தது எனக்கு- அதன்படி பூமியில் முடிந்தது என் கணக்கு'

நாரந்தனை வடக்கு.

(23063)(5-6-7)

மரணத்திலும் மறவா நட்புடன்
கஸ்பார் பத்திநாதன் (சிறில்)



உ
சிவமயம்

## அனைத்து நோய்களிலிருந்தும் விடுதலை பெற உலகப் பிரசித்திபெற்ற செவிவழி தொடு சிகிச்சை நிபுணர் ஹீலர் பாஸ்கர்

அவர்களின் அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை விளக்கமும் பயிற்சிப் பட்டறையும்

# மருத்துவ முகாம்

(சுயசிகிச்சைக் கலை)



"பசியின்றி எதையும் உண்ணாதீர், உண்ணும் போது உணவைத்தவிர வேறு எதையும் எண்ணாதீர்"

இடம்: ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், 345, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம்: 23.09.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 முதல் மாலை 4.00 மணிவரை
மதிய உணவு நேரம் 12.00 - 12.30 வரை
மதிய உணவு வழங்கப்படும்

**செயல் விளக்கம்: ஹீலர் பாஸ்கர்**

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அனைவரையும் நலமுடன் வாழ அழைக்கின்றோம்.
மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்களே இருப்பதனால் உங்கள் ஆசனங்களை இப்பொழுதே பதிவு செய்துகொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 021 2221413, 077 7821896, 075 5979432, 071 1250365, 072 6011512.

(23060)(5-7)



# யாழ்.மண்ணில் இலவச காது பரிசோதனை

உலக செவிப்புலனற்றோர் தினத்தை முன்னிட்டு கொழும்பிலிருந்து யாழ். மண்ணிற்கு வருகை தரும் விசேட குழுவினர் 22 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஜெ.எம்.விக்கிரமாராச்சி அன்ட் கம்பனியில் இலவசமாக காது பரிசோதனைகளை (audiogram (PTA), Tympanometry, Reflexometry, ABR, OAE) மேற்கொள்ளவுள்ளனர். இதில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

TGA TRÄGERGEMEINSCHAFT FÜR AKKREDITIERUNG GERMAN ASSOCIATION FOR ACCREDITATION GMBH
wish
Cochlear™
LANKA COLLEGE OF AUDIOLOGY

**தொடர்புகளுக்கு:**
**இல.229, 231, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல. 021 221 9288, 0777511260**

(23052)(7-8)



# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 06.11.1918

மறைவு 24.08.2012

அமரர்

## கதிரவேலு சின்னப்பிள்ளை

கடந்த 24.08.2012 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று(21.09.2012) வெள்ளிக்கிழமை காலை 7.00மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] மத்தி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(23001)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(14)

தோல்வியைப் பற்றிய எண்ணம் வந்தவுடனே ஒரு வகைப் பயம் ஆட்கொண்டு விடுகிறது. தோல்வி என்கிற எண்ணம் ஆக்கபூர்வ சிந்தனையாகாது. அது ஓர் எதிர் மறைச் சிந்தனையாகும். எதிர்மறைச் சிந்தனைகள் பய உணர்ச்சியின் விளைவாகத் தோன்றுகின்றன. இந்த பயத்தை தவிர்க்க வேண்டுமானால் ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு நம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். மாவீரன் நெப்போலியன் ''மனிதர்களுடைய பெரும்பான்மையான தோல்விகளுக்கு அவர்களிடம் குடி கொண்டுள்ள பயமே காரணம்'' என்று குறிப்பிடுகிறார். பயத்தை விட்டொழித்தால் தான் வெற்றியைத் தரிசிக்க முடியும்.



சிலருக்கு பெண்களோடு பேசுவது என்றால் பயம். ஆண்களுக்குத் தான் இந்தப் பயம் என்று இல்லை. ஆண்களிடம் ஒரு விஷயத்தை பேசப் பயப்படும் பெண்களும் இருக்கிறார்கள்.

நடைமுறையில் இதைக் கூச்சமென்று சொல்லி விடுகிறார்கள். இது உண்மையில் கூச்சமல்ல. மனிதன் பல்வேறு பயங்களுக்கு ஆளாகிப் போவதைப் போலவே, பால் வேற்றுமையின் காரணமாகப் பேசுவதற்கும், பழகுவதற்கும் அச்சப்படுவது உண்டு.

ஆண்களுக்கான பள்ளியில் சில சந்தர்ப்பங்களில் பெண் ஆசிரியைகள் நியமிக்கப்படுவது உண்டு. அதைப்போல பெண்கள் மட்டுமே படிக்கும் பள்ளியில் ஆண் ஆசிரியர்களும் நியமிக்கப்படுவதுமுண்டு. இவர்களுடைய ஆரம்பக்கால அனுபவங்களை கேட்டால் வேடிக்கையாக இருக்கும். பால் வேறுபாடே இவர்களுடைய திறமை வெளிப்படுவதற்கு ஒரு தடையாக இருந்திருப்பதைப் பார்க்கலாம்.

ஆகவே தான் வளர்ச்சி அடைந்துள்ள மேல் நாடுகளில் பெண்களுக்கென்று தனியாகவும் ஆண்களுக்கென்று தனியாகவும் பள்ளிகள் அமைவதை ஒப்புக்கொள்ளுவதில்லை. கல்வி பயிலும் நிலையிலேயே ஆண்களும் பெண்களும் பழகுகின்ற வாய்ப்பு இருக்க வேண்டும் என அந்த நாடுகளில் பெற்றோர்களே விரும்புகிறார்கள். தனித் தனிப் பள்ளிகள் அமைவதை சில நாடுகளில் உள்ள சட்டங்களே அனுமதிப்பதில்லை.

நம்முடைய நாட்டில் ஆண்களும், பெண்களும் கலந்து பழகுவதை ஓர் ஒழுக்கப் பிரச்சினையாக அணுகுவதால் சிறுவயதில் இருந்து ஒருவரோடு ஒருவர் பேசுவதில் அச்சமும் தயக்கமும் ஏற்பட்டு விடுகிறது. இது ஆரோக்கியமான சூழ்நிலைக்கு அடையாளம் அல்ல.

இதனால் பெண்களிடம் பேச ஆணுக்குப் பயம். ஆணிடம் பேச பெண்ணுக்குப் பயம். ஆனால் இவர்களே உத்தியோகப் பொறுப்புக்களுக்கு வரும் பொழுது ஒருவரோடு ஒருவர் பேச வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

அந்தச் சந்தர்ப்பங்களில் தயங்குகிறார்கள், தவிர்க்கிறார்கள், தடுமாறுகிறார்கள். முறையாகப் பழகி வேலைகளை சரியானபடி செய்வதற்கே அவர்களுக்கு அவகாசம் தேவைப்படுகிறது.

இந்தப் பயம் சுலபத்தில் போக்கிடக் கூடியது. இதன் ஏனைய விளைவுகளை நான் சொல்லியிருப்பதால் இங்கு விரிவாக எழுதுவது அவசியம் இல்லை என்று இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

இவ்வாறு சமூகச் செயல் முறையில் பல கட்டங்களிலும் பயம் குறுக்கிட்டு மனிதனைச் செயற்பட விடாமல் தடுத்து விடுகிறது. இந்தப் பயம் நீங்கும் பொழுது மனிதன் செயல் ஊக்கம் பெறுகிறான். காரியங்களும் துரிதமாக நடைபெறத் தொடங்குகின்றன. அதன் விளைவாக வெற்றிகளையும் அவன் சுலபத்தில் எட்டிப் பிடிக்கிறான்.

**சில சம்பவங்கள்**

சில பெரியவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படிக்கும் பொழுது அவர்கள் காட்டும் அசாத்தியத் துணிச்சல் நமக்கு பிரமிப்பு ஊட்டுகிறது. சிறு பிராயம் முதற்கொண்டே அவர்கள் பயத்தை விரட்டியவர்களாகவும், துணிச்சலைத் துணையாகக் கொண்டவர்களாகவும் இருப்பதைப் பார்க்கிறோம்.

-பி.சி.கணேசன்- (தொடரும்)

# போர் முடிந்து மூன்று வருடங்கள் கடந்தும் சுபீட்சம் இல்லை தமிழர்கள் வாழ்வில்

## யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவிப்பு

குருநகர்,செப்.21

போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் தமிழர்களின் வாழ்வில் சுபீட்சம் ஏற்படவில்லை என்று யாழ்.ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம்தெரிவித்தார்.

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத் திருவிழாத் திருப்பலி அண்மையில் நடைபெற்றது. இந்தத் திருவிழாத் திருப்பலியை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, அமலமரி தியாகிகள் சபையின் மாகாணத் தலைவர் வண.பிதா.போல் நட்சத்திரம் அடிகளார், மறைக்கோட்ட முதல்வர் வண.பிதா. யூஜின் அடிகளார், யாழ்.மரியன்னை பேராலயத்தின் பங்குத்தந்தை வண.பிதா.எஸ்.எச். சகாயநாயகம் அடிகளார், வண. பிதா.வேதநாயகம் அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டாக ஒப்புக் கொடுத்தனர்.

இந்தத் திருப்பலியில் மறையுரையாற்றும்போதே தோமஸ் சௌந்தரநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு பல வழிகளிலும் நெருக்கடி உருவாக்கப்படுகிறது. இந்த நெருக்கடி போர்க் காலத்தின் போதும் பல்வேறு வழிகளில் இருந்தது. அந்தக் காலத்தில் எமது மக்கள் பய பீதியுடன் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள். 1992 இல் நான் யாழ்.ஆயராகப் பொறுப்பேற்றேன். மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து பல கஷ்டங்கள், நெருக்கடிகள் மத்தியில் எனது பணியைப் பொறுப்பேற்றேன்.

எமக்கு எத்தகைய கஷ்டங்கள் துன்பங்கள் ஏற்பட்டாலும், நாம் இறைவன் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ வேண்டும். எமது எதிர்காலத்தைப் பற்றிய பயம் எமக்கு உள்ளது. மரியன்னையின் திருத்தலத்துக்கு நாம் இன்று யாத்திரையாக வந்துள்ளோம். மரியன்னை தனது வாழ்வில் பல துன்பங்கள், துயரங்களை எதிர்கொண்ட போதும் இறைவன் மீது கொண்ட பக்தியை நம்பிக்கையை கைவிடாமல் வாழ்ந்தவர். இறைவன் அவரை உயர்த்தினார்.

எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு எவ்வாறு அமையப் போகிறது. எமது அரசியலில் என்ன மாற்றம் நிகழவுள்ளது என்ற கவலை எமக்கு உள்ளது. தாய் எப்போதும் தனது பிள்ளைகளைக் கைவிடமாட்டார். மரியாள் இறைவனைக் கெட்டியாகப் பற்றிப் பிடித்தவர்.

நாங்கள் விடுதலைபெற ஆண்டவர் சொல்கிற வழியில் செல்ல வேண்டும். ''அஞ்சாதே, கவலைப் படாதே நான் உன்னோடு உள்ளேன்'' என்று இறைவன் அருளினார். எந்தவித நெருக்கடி எமக்கு ஏற்பட்டாலும் கடவுள் எம்முடன் உள்ளார் என்ற உறுதிப்பாடு எமக்கு இருக்க வேண்டும்-என்றார். (எ-51)




யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற விழாவின் ஆங்கிலப் பாட நிகழ்வில் நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவிகள். (எ-7)

# வலிமைமிக்க இளம் சமுதாயத்தை இந்தத் தீவில் கட்டியெழுப்ப முடியும்

## நெடுந்தீவு விழாவில் இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.21

வலிமை மிக்க இளம் சமுதாயம் ஒன்றை இந்தத் தீவில் கட்டியெழுப்ப முடியும். அந்த நம்பிக்கையுடன்தான் இளைஞர் சேவை மன்றம் இந்த விழாவை நெடுந்தீவில் நடத்த இளைஞர் சேவைகள் மன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் மற்றும் அதிகாரிகள் முடிவெடுத்தனர் என இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரி தெரிவித்தார்.

இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்டப் பணிப்பாளர் எஸ். ஈஸ்வரராசா தலைமையில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட விழா நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாகாணப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவு ஒரு பின் தங்கிய பிரதேசம் எனக் கூறிக்கொண்டிருந்தால் பின் தங்கிய பிரதேசமாகவே தொடர்ந்து கொண்டிருக்கும். இப்போது இங்கு முன்னேற்றகரமான பல விடயங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் இளம் சமூகம் வளர்ந்து கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய ஆற்றல்களை வலுப்படுத்தி ஒரு சிறந்த பகுதியாக இதனை மாற்ற வேண்டும் என்பதே எமது கருத்து. அதற்குத் தேவையானவற்றை இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்படுத்தும் என்றார்.

நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி பேசும்போது; இளைஞர் சேவை மன்றம் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு வலுவூட்டி அவர்கள் ஊடாக இந்தத் தீவகத்தில் சமூகம் வளர்ச்சியடையக் கூடியதான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (எ-7)

# விசேட கல்வி மன்ற சித்திரப் போட்டி முடிவுகள்

விசேட கல்வி நூற்றாண்டை முன்னிட்டு வடமாகாண பாடசாலை மாணவர்களின் ஓவியத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்வி மன்றத்தினால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

விபரம் வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டம்

ஆரம்பப் பிரிவு 1-5

முதலாமிடம்-சி.கமல்ராஜ்-மல்லாவி ம.க, இரண்டாமிடம்-தே.திருசயன்- மல்லாவி ம.க.

இடைநிலைப் பிரிவு

முதலாமிடம்-ஆ.அன்டனி விதுர்சன்- முல்லைத்தீவு ம.வி, இரண்டாமிடம்-அன்டனி சியாந்-முல்லைத்தீவு ம.வி, மூன்றாமிடம்-ம.திசாந்த்-மல்லாவி ம.க.

மேற்பிரிவு

முதலாமிடம்-வீ.டமருகா-புதுக்குடியிருப்பு ம.வி.

கிளிநொச்சி மாவட்டம்

ஆரம்பப் பிரிவு 1-5

முதலாமிடம்-சி.துவிபன்-கனகபுரம் ம.வி, இரண்டாமிடம்-ர.அபிசர்-கனகபுரம் ம.வி, மூன்றாமிடம்-ஜீ.சாருஜன்-கனகபுரம் ம.வி.

இடைநிலைப் பிரிவு

முதலாமிடம்-சி.ஜெகஸ்ரிகா-கனகபுரம் ம.வி, இரண்டாமிடம்-நி.துலக்சிகன் -கனகபுரம் ம.வி, மூன்றாமிடம்-கே.திருமகன்-கனகபுரம் ம.வி. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தமிழர்கள் விரும்பும் அமெரிக்க அணுகுமுறை

அமெரிக்காவுக்கான புதிய தூதுவராக மிச்சேல் ஜே.சிசன் பதவியேற்றுள்ளார். கொழும்பில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட சூட்டோடு சூட்டாக வடக்குக்கான தனது முதல் பயணத்தை அவர் மேற்கொண்டார். கடந்த மூன்று தினங்களாக அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

இலங்கையின் அரசியல் நிலைமை பற்றி எதையும் கதைப்பதற்கு முன்பாக வடபகுதிக்குச் சென்று பார்வையிட்டு வாருங்கள் என இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்திருந்ததை அடுத்து, தான் இந்தப் பயணத்தைத் திட்டமிட்டிருந்தார் என்று சிசன் தெரிவிக்கிறார்.

இதற்கு முன்னர் இருந்த அமெரிக்கத் தூதர்களின் அணுகுமுறையிலிருந்து சிசனுடைய அணுகுமுறை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சற்று வேறுபட்டதாக இருப்பதை அவரது யாழ்ப்பாணப் பயணத்தின்போது உணரமுடிந்தது. அதனைத் தமிழ் மக்கள் மனதார வரவேற்கவும் செய்கிறார்கள். இதற்கு முன்னர் வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணம் வந்தால், தெரிந்தெடுக்கப்பட்ட சில அமைப்புக்கள், மதத் தலைவர்களைச் சந்தித்துச் செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். அமெரிக்கத் தூதுவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.


யாழ்ப்பாணத்துக்கான சிசனுடைய முதல் பயணம் அப்படியானதாக அமையவில்லை. இதுவரைக்கும் இங்கு வந்த தூதுவர்கள் அனைவரிலும் வித்தியாசமாக, ஆழமாக, தெளிவாக அவரது பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. அவர் பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரில் சென்று பேசினார். அமைப்புக்களின் பிரதிநிதிகளிடமிருந்து நேரில் விவரங்களைப் பெற்றுக்கொண்டார். இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சமயப் பிரதிநிதிகளைத் தனித் தனியே சந்தித்துப் பேசினார் [இதற்கு முன்னர் அமெரிக்கத் தூதர்கள் எவரும் இப்படி நடந்துகொண்டதில்லை].

சிசன் இப்படி அக்கறை எடுத்திருப்பது, அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உண்மையாகப் புரிந்து கொள்ள முயற்சிப்பதன் அறிகுறி என்று புரிந்துகொள்ளலாம். இந்தச் சந்திப்புக்களின் பின்னர் சில இடங்களில் கருத்துத் தெரிவித்தபோது யாழ்ப்பாணத்தில் அரசால் செய்யப்பட வேண்டியவைகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன எனத் தான் உணர்ந்துள்ளார் என்பதை சிசன் வெளிப்படுத்தினார். குறிப்பாக இன்று இருபதுகளுக்கும் முப்பதுகளுக்கும் இடைப்பட்ட வயதுகளில் வாழும் இளைஞர்கள் தொழில்வாய்ப்பு இன்றி இருப்பது குறித்த தனது கவலையை ஆழமாகப் பதிவு செய்தார். அந்த விடயத்தில் அரசு இன்னும் காத்திரமான பணிகளை ஆற்ற வேண்டும் என்ற கருத்துக்களை அவர் ஏற்றுக்கொண்டார். அரசியல் தீர்வு விடயத்திலும் தமிழர்களின் கருத்தை அவர் ஆமோதிக்கிறார்.

அமெரிக்கத் தூதுவரின் இந்த நடவடிக்கைகளைத் தமிழர்கள் தொடர்பான அவரது நியாயபூர்வமான அணுகுமுறை என்று கொள்ள முடியும். முன்னைய தூதுவர்களைப் போலன்றி சிசனின் அணுகுமுறை மாற்றமானது வோஷிங்டனின் கொள்கை மாற்றமாகவும் கொள்ளத்தக்கது. மறுவளத்தில் தமிழர்கள் தொடர்பிலான அமெரிக்கக் கொள்கைகள் சிசனுடையதைப் போன்ற அணுகுமுறைகளுடன் கூடியதாக இருக்க வேண்டும் என்றுதான் ஈழத் தமிழர்கள் விரும்புகிறார்கள் என்றும் சொல்லலாம்.

# இலங்கையை விழுங்குமா சீனா?

மூலம் - மவ்பிம
தமிழில்-வீ எஸ் ரீ.



யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடு கள் அங்கோலாவில் மனித உரிமைகளையும், ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தையும் உறுதி செய்யுமாறு ஜனாதிபதி டொஸ் சான்டொஸ்ஸை வற்புறுத்தின.
மனித உரிமைகளைப் பேணுவதால் மட்டும் பொது மக்களது வயிறுகள் நிரம்பிவிட மாட்டா எனக் கூறி டொஸ் சான்டொஸ் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப சீனாவின் உதவியை நாடினார்.

சீனப் பிரஜை ஒருவர் கொழும்பில் இடம்பெற்ற ஆபரணக் கண்காட்சி ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த வைரக்கல் ஒன்றைக் களவாடும் நோக்குடன் எடுத்து விழுங்கிய செய்தி சில நாள்களாக நாட்டு மக்கள் மத்தியில் பேசுபொருளாக அமைந்தது. அதே விதத்தில் சீனா இலங்கையை விழுங்கி ஏப்பம் விட்டு விடுமா என்ற அச்சம் அண்மைக்காலமாக நாட்டு மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

சீனா குறித்து இத்தகைய அச்சம் இலங்கை மக்களிடம் மட்டும் நிலவுவதாகக் கூறிவிட இயலாது. சீனாவின் உதவியைப் பெற்று வரும் பெரும்பாலான நாடுகள் மத்தியிலும் இத்தகைய அச்சம் நிலவி வருகின்றது. அவ்விதத்தில் சீனாவைச் சந்தேகத்துடன் நோக்கும் ஒரு நாடு அங்கோலா ஆகும்.

அங்கோலாவின் ஜனாதிபதி டொஸ் சான்டோஸ், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்று தேர்தல்களை நடத்துவதில் அதிக விருப்புக் கொண்ட ஒருவராவார். கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதியன்று அங்கோலாவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், வாக்குகள் பூரணமாக எண்ணிக் கணக்கிடப்படுவதற்கு முன்னரே, அந்தத் தேர்தலில் தான் மீண்டும் ஒருமுறை வெற்றியீட்டியுள்ளதாக இம்மாதம் 3 ஆம் திகதி அவர் பகிரங்கமாக பிரகடனப்படுத்தியிருந்தார். ஜனநாயகம் நாட்டு மக்களது பசியைப் போக்கப் போவதில்லை எனவும் அவர் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார். இலங்கையைப் போன்று அங்கோலாவிலும் முப்பது ஆண்டுகள் காலமாக உள்நாட்டுப் போர் இடம்பெற்றது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் அங்கோலாவில் மனித உரிமைகளையும், ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தையும் உறுதி செய்யுமாறு ஜனாதிபதி டொஸ் சான்டொஸ்ஸை வற்புறுத்தின. மனித உரிமைகளைப் பேணுவதால் மட்டும் பொது மக்களது வயிறுகள் நிரம்பிவிட மாட்டா எனக் கூறி டொஸ் சான்டொஸ் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப சீனாவின் உதவியை நாடினார். சீனாவும் பெரு விருப்புடன் அங்கோலாவுக்கு உதவிட முன் வந்தது.

முப்பது ஆண்டுகால போரின் பின்னடைவிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப சீனா முன்வந்துள்ளதாக டொஸ் சான்டொஸ் நாட்டு மக்களுக்கு பெருமெடுப்பில் தெரிவித்தார். சீனாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவியால் நாடு விரைவில் அபிவிருத்தி காணுமெனவும், நாடு பூராவும் வேலை வாய்ப்புக்களால் அங்கோலா மக்கள் நன்மையடைவர் எனவும் டொஸ் சான்டொஸ் நம்பினார். ஆனால் சீனாவோ அங்கோலாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி உதவியை கடன் அடிப்படையிலேயே வழங்க முடியும் எனவும் அதற்காக அங்கோலா உயர்ந்த வட்டி வீதத்தைச் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தது.

சீனாவின் இத்தகைய நிபந்தனை காரணமாக , தயங்கிய டொஸ் சான்டொஸ்ஸிடம் 'பயப்பட வேண்டாம் கடனுக்கான வட்டியை நீங்கள் உங்களது சொந்தப் பணத்தில் செலுத்தப் போவதில்லையே. நாட்டு மக்கள் செலுத்தும் வரியில் இருந்து தானே செலுத்தப் போகிறீர்கள். [illegible] செலுத்தும் வட்டியில் ஒரு பகுதியை உங்களுக்கு தந்து விடுகின்றோம். அதுமட்டுமல்லாது உங்களது அரசைக் கவிழ்க்க மேற்குலக நாடுகள் முயன்றால், அதை நாம் பார்த்துக் கொள்கிறோம்' என்றெல்லாம் ஆசை வார்த்தை கூறியது சீனா.

சீனாவின் ஆசைவார்த்தைகளை நம்பினார் டொஸ் சான்டொஸ். அங்கோலாவில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான மனித வலுவை, ஆளணியினரைக் கூட சீனா, தனது நாட்டிலிருந்தே கொண்டுவர இருப்பதை அவ்வேளையில் டொஸ் சான்டொஸ் அறிந்திருக்கவில்லை. அபிவிருத்தித் திட்டங்களுக்காக கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய சீனா 2 இலட்சத்து 50 ஆயிரம் சீனத் தொழிலாளர்களை அங்கோலாவுக்கு கொண்டு வந்தது. தமக்கு கிட்ட வேண்டிய வேலை வாய்ப்புகள் சீன நாட்டவர்களுக்கு வழங்கப்பட்டதால் கொதிப்படைந்த அங்கோலாப் பொதுமக்கள், அரசுக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமது நாட்டு மக்களை அமைதிப்படுத்தும் முகமாக டொஸ் சான்டொஸ் ''சீன நாட்டவர்கள் புதுமை படைப்பதில் வல்லவர்கள் எனவும், வெகு வேகமாக நாட்டை அபிவிருத்தி செய்து தந்து விடுவார்கள் எனவும் கூறி சமாதானப் படுத்தினார்.

சீனத் தொழிலாளர்களது புதுமையும் ஆரம்பமாகியது. அவர்கள் நிர்மாணித்த நெடுஞ்சாலைகள், வைத்தியசாலைக் கட்டடங்கள், பாடசாலைக் கட்டடங்கள் ஆகியன வேலைகள் நிறைவுற்ற மிகக் குறுகிய காலத்திலேயே இடிந்தும், சிதைந்தும் பழுதுற்றன. சீனர்களால் நிர்மாணிக்கப்பட்ட அங்கோலாவின் பெரியாஸ்பத்திரி திறக்கப்பட்டு சில நாள்களிலேயே உடைந்து சேதமுற்றதால் மூடிவிட நேர்ந்தது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள் மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. அதே வேளை டொஸ் சான்டொஸ்ஸின் குடும்பத்தவர், அரசின் அமைச்சர்கள், உயர் அதிகாரிகளின் பெயரில் பெருந் தொகை சீனயுவான் நாணயம், அமெரிக்க டொலர்களாகி சுவிஸ் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டன. அபிவிருத்தித் திட்டங்களில் ஏற்பட்ட முறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்ட போது, ஆட்சி அதிகார தரப்பினரின் சுவிஸ் வங்கிக் கணக்கில் மென்மேலும் பெரும்தொகைப் பணம் வைப்பில் இடப்பட்டது.

காலப்போக்கில் சீனா, அங்கோலாவுக்குள் ஊடுருவிய விதம் அங்கோலா மக்களுக்கு தெட்டத் தெளிவாகப் புலனாகியது. இத்தகைய நிலையிலேயே 'அராபிய வசந்தம்' அங்கோலாவிலும் தலை தூக்கியது. தனது பதவிக்கு மிக விரைவில் ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்தே, டொஸ் சான்டொஸ், ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் பூரணமாக கணக்கிட்டு முடிக்கப்படும் முன்னரே தாமே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்துள்ளார்.


இதே விதத்தில் தான் லிபியாவில் 'அராபிய வசந்தம்' வீசத் தொடங்கியபோது 'நாங்கள் லிபியத் தலைவர் கடாபியை நிச்சயம் பாதுகாப்போம்; ஆதரவு அளிப்போம்' என சீனா கூறியது. கடாபிக்கு எதிரான 'அராபிய வசந்தம்' சூறாவளியாக மாறத் தொடங்கியதும், கடாபி பதவியில் இருக்கும் போதே அமெரிக்க மத்தியஸ்தத்துடன் நியமிக்கப்பட்ட இடைக்கால அரசின் தலைவரை சீனாவுக்கு விஜயம் செய்யுமாறு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

இது சீனாவின் வழமையான பாணி. ஜனாதிபதி மஹிந்தவின் அரசுக்கு இவை நல்ல பாடங்கள். அங்கோலாவுக்கு கையசைத்த விதத்திலேயே சீனா இன்று மஹிந்தவின் அரசையும் கையசைத்து வரவேற்றிருக்கிறது. மஹிந்தவின் அரசும் அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளின் நட்பை உதறித் தள்ளிவிட்டு சீனாவை இறுகப் பற்றியுள்ளது. சீனா இந்த நாட்டில் பல வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இதற்காக பெருமளவிலான சீனத் தொழிலாளர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையம் அடிக்கடி செயலிழந்து போகிறது. கொழும்பில் இடம்பெற்ற இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணக் கண்காட்சியில் சீனப் பிரஜை ஒருவர் பாதுகாப்புத் தரப்பினரின் கண்களில் மண்தூவி வைரக்கல் ஒன்றைக் களவாடியுள்ளார். இந்த நிலை தொடருமானால் யார் எவருடைய கண்களில் மண்ணைத் தூவியாவது சீனா, இந்து சமுத்திரத்தின் முத்து என்ற இலங்கையை விழுங்கிவிடக் கூடும். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கான விலைகள்.....



இன்று தியாகி திலீபன் உண்ணா விரதமிருந்து 25 ஆம் ஆண்டு நினைவு தினத்தின் ஏழாம் நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் உலகத்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. தியாகி திலீபன் ஈகச் சாவைத் தழுவிக் கொண்ட காலப்பகுதியை இன்றைய நாளில் ஒருமுறை திரும்பிப் பார்க்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

வெள்ளையரின் ஆட்சியில் இந்தியா இருந்தபோது அகிம்சை வழியில் போராடி இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த தாதக்கூறப்படும் காந்தியின் வழிவந்த பேரன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற போர்வையில் இந்தியப்படைகளை அமைதிப் படைகளாய் எமது மண்ணிற்கு அனுப்பி வைத்தார். அமைதிப் படையினிடம் மக்களின் விடுதலைக்காகத் தூக்கிய ஆயுதங்களை விடுதலைப்புலிகள் ஒப்படைத்தனர். விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைந்த பின் காணாமல் போதல்களும் கைதுகளும் நிலப்பறிப்புக்களும் தொடர்கதையாகின. சிறைச்சாலையில் உள்ள இளைஞர்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை. அமைதியை எதிர்பார்த்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே பரிசாகக் கிடைத்தது. நாளும் கண்ணீர்க் கதைகளே அரங்கேறின. இந்த நிலையில் காந்தியப்படைகளுக்கு அகிம்சை வழி புரியும் என நினைத்து அண்ணல் திலீபன் அகிம்சை வழியில் போர் தொடுத்தான்.

பன்னிரு தினங்கள் மக்கள் கதறக்கதற மெழுகுவர்த்தியாய் திலீபனின் உயிர் உருகி உருகிப் போக காந்தியப்படைகள் பார்த்திருந்தன. கடைசியில் காந்தியப்படைகளே திலீபனின் சாவுக்குக் காரணமாய் போயின. எங்கள் மண்ணைப் பொறுத்தவரை அமைதிக்காலங்கள்தான் அழிவுக்குக் காரணமாய் இருந்திருக்கின்றது என்பதை யாருமே மறந்து விட முடியாது.

சந்திரிகா நடத்திய சமாதானத்துக்கான போராயினும் சரி, ரணில் நடத்திய புரிந்துணர்வு உடன்படிக்கையின் சமாதானப் பேச்சுக் காலமாயினும் சரி, மஹிந்த நடத்திய மக்களை மீட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கான போராயினும் சரி அமைதிக் காலங்களிலெல்லாம் இங்கே விலைகளாகிப் போனது அப்பாவி மக்களினது எண்ணிலடங்கா உயிர்கள்.

இந்த உயிர்களின் பெறுமதியை உணர்ந்து தமிழ் மக்களுக்கு எப்போது விடிவு கிடைக்கப் போகிறது. எங்கள் மக்களின் மனதில் எப்போது சமாதானம் மலரப் போகின்றது...?

உலகமெல்லாம் இன்றைய நாளை சமாதான தினமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த உலகில் எல்லோரும் இணைந்து தமிழர்களுக்கு ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தித் தரவில்லை என்பதுதான் பலரது ஆதங்கம். எனினும் உலக சமாதான தினம் எப்படி உருவானதெனப் பார்ப்போம். 1981இல் இருந்து ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் மாதத்தில் வரும் மூன்றாம் செவ்வாய்க் கிழமையிலேயே கொண்டாடப்பட்டு வந்தது. 2002 ஆம் ஆண்டில் இருந்து இத்தினம் செப்ரெம்பர் 21இல் கொண்டாடப்படுகிறது. அமைதி என்பதற்குப் பல பொருள்கள் தமிழில் உள்ளன. குறிப்பாக யுத்தம், பகைமை, வன்முறை என்பவற்றுக்கு எதிர்ச் சொல்லாகவே இது பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலப் பயன்பாட்டில் அமைதி என்பது, பகைமை இல்லாத ஒரு நிலையைக் குறிக்கும் ஒரு கருத்துருவாகும். சர்வதேச ரீதியில் இது போர் இல்லாத நிலையையும் குறிக்கும். மகாத்மா காந்தியின் கூற்றுப்படி, ஒடுக்கப்பட்ட சமூகம் ஒன்றில் வன்முறைகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், சமூக நீதி இன்மை காரணமாக அங்கே அமைதி இருப்பதாகக் கூறமுடியாது. காந்தி, அமைதி குறித்த ஒரு நோக்கைக் கொண்டிருந்தார். நீதி என்பது அமைதிக்கு அடிப்படையானதும் கட்டாயமானதுமான அம்சம் என்று அவர் கருதினார். இதன்படி, அமைதிக்கு வன்முறை இல்லாமை மட்டுமன்றி, நீதி இருக்கவேண்டியதும் அவசியம்.

உலகின் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது சமாதானமாகும். வரலாற்றில் பல யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. 20ஆம் நூற்றாண்டின் இரு பெரும் உலக மகா யுத்தங்கள் கோடிக் கணக்கான உயிர்களையும் சொத்துக்களையும் பழி கொண்டுள்ளன. 2ஆம் உலக மகா யுத்தத்தின் பின் உலக சமாதானத்திற்காக 1945 இல் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலக நாடுகளிடையே பூசல்களையும், போர்களையும் தடுக்க உயரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும் கூட துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் ஓய்வு கொடுக்க முடியவில்லை. உலகின் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் பெரிய பணி யுனெஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலக சமாதான முயற்சியொன்றின் போது ஐ.நாவின் பொதுச் செயலாளர் ஹாமர்சீல்ட் விமான விபத்தில் உயிர் துறந்தமை 1961 வரலாற்றுச் சுவடாகும். அவர் உயிர் துறந்தது செப்ரெம்பர் மூன்றாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமையிலாகும்.

யுனெஸ்கோவின் முகவுரை வாசகம் மனித உள்ளங்களில் தான் போர் தோன்றுவதனால் மனித உள்ளங்களில் தான் அமைதிக்கான அரண்களும் அமைக்கப் பெறல் வேண்டும் என்பதாகும். விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் படைகொண்டு அமைதியை ஏற்படுத்த முடியாது. நல்லுணர்வால் தான் அதனைப் பெற முடியும் என்றார். இந்நோக்கத்தில் யுனெஸ்கோவின் பொறுப்பும் பணியும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். யுனெஸ்கோவின் சட்டயாப்பின் முதலாவது உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது. உலக மக்களை இனம், பால், மொழி, அல்லது சமய பேதமின்றி ஐ.நா சாசனத்தின் உறுதி செய்யப்படுகின்ற நீதிக்கும் சட்ட ஆட்சிக்கும் மனித உரிமைகளுக்கும், அடிப்படை சுதந்திரங்களுக்கும், உலகளாவிய நன்மதிப்பை வளர்ப்பதற்கென கல்வி, அறிவியல், பண்பாடு மூலமாக நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தி சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பாடுபடுவதே இந்த அமைப்பின் நோக்கமாகும். அதாவது யுனெஸ்கோவின் பணி, கல்வி, அறிவியல், பண்பாட்டுத் தொடர்களின் வழியாக உலக சமாதானம், மனித இனத்தின் பொது நலன் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும். ஐ.நா. அமையமும், ஐ.நா. சாசனமும் இக் குறிக்கோள்களின் பேரிலேயே நிறுவப் பெற்றுள்ளது.

மனித உரிமைகளையும், கடமைகளையும் செயற்படுத்துவதற்கு இன்றியமையாது தேவைப்படுவது சமாதானமாகும். அதாவது குடிமக்கள் அனைவரும் முதன்மை பெறும், ஒருங்கிணைந்து வாழும், இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் சுதந்திரமான, நியாயமான சட்ட ஆட்சியுடைய சமத்துவம், ஒருமைப்பாடு என்பது தான் சமாதானம் ஆகும். சமாதானம், மேம்பாடு, ஜனநாயகம் போன்ற மூன்றும் ஒன்றுக்கொன்று உறுதுணைபுரியும் முக்கோணங்களாகும். அவை ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன.

கடந்த ஐந்து தசாப்தங்களாக பயங்கரவாதம் என்ற போர்வையிலும் அமைதிக்கான அச்சுறுத்தல்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. சமாதானம் கோட்பாடு மட்டுமல்ல, அது செயற்பாடு. செயல்பட்டால்தான் சமாதானம் அர்த்தமுள்ளதாகும். அறிஞர் கார்லோஸ் பியூண்டஸ் கூறுவது போலச் சமாதானம் என்பது மாறுபாடுகளின் சேர்க்கை. கலாசாரங்களின் இனக்கலப்பு. அது அருவக்கோட்பாடு அல்ல. மாறாக, பண்பாட்டு அரசியல் சமூக, பொருளாதார சூழல்களில் ஆழ வேரூன்றிய ஒன்றாகும்.

இன்று தகவல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். விரல் நுனியின் சிறு அசைவினால் எண்ணற்ற தகவல்களைப் பெற்று பெருமிதம் அடைகிறோம். ஆனால், இந்த முன்னேற்றம் கோடிக் கணக்கான இளைஞர்களின் உயிர்களைப் பலிகொண்டு அப்பாவி மக்களின் வாழ்வை அழித்தொழிக்கும் போர்களுக்கு மாற்றீடாக அமையவில்லை என்பதுதான் உண்மை.

***தற்கால சூழ்நிலையில் உறவுகளை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை நினைப்பதன் மூலம் சமாதானத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. அத்துடன் போர் விளைவில் உடல், உள, பொருளாதார நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் குறிப்பாக பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் எண்ணும்போது சமாதானத்தின் அவசியம் உணரப்படுகின்றது.***

# சமாதானம் மனங்களில் மலர வேண்டும்

சி.நற்குணலிங்கம்,
அகில இலங்கை சமாதான
நீதிவான். நெல்லியடி.

உலக சர்வதேச சமாதான தினம் புரட்டாதி 21 ஆம் திகதியாகும். ஒவ்வொரு வருடமும் புரட்டாதி 21 ஆம் நாளிலே சமாதான தினம் கொண்டாடப்படுகின்றது. இதன் மூலம் சமாதான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுகின்றது. இன்றைய சூழ்நிலையில் சமாதானம் என்பது முக்கியத்துவமான ஒன்றாகும்.

வாழ்க்கையை முழுமை பெறச் செய்வது நல்ல மனநிலை தான். எனவே முரண்பாடுகளற்ற நல்ல மனநிலை ஏற்படுவதன் மூலம் நல்லொழுக்கத்துடன் கூடிய மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த வாழ்வு எமக்குக் கிட்டும். இது சிறு வயது முதலே ஏற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஒற்றுமையின் உச்சப் பயனே சமாதானத்தின் ஊன்று கோலாகும்.

நாம் சமாதானமாக வாழ்வதுடன் நல்ல அயலவர்களாகவும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கான பாதை சிறு வயதிலேயே வகுக்கப்பட வேண்டும். சிறுவர்களிடையே காணப்படும் வேற்றுமைகள், பிரிவினைகளை களைவதன் மூலம் சமாதானம், நிலையான ஒற்றுமை உருவாகும். சமாதானம் என்பது வன்முறையற்ற வழிகளில் உருவாக்கப்படுவதே விரும்பத்தக்கது.

அடிப்படையில் மனித இனம் நல்லது. சூழ்நிலைதான் அதைக் கெடுக்கின்றது. எனவே பொருத்தமற்ற சூழ்நிலைக்குள் அகப்படாது நேர்ப் பாங்கான மனதுடன் வாழ்வோமாயின் அதுதான் ஆரோக்கியமான சமாதானத்துக்கு வழிவகுக்கும்.

தற்கால சூழ்நிலையில் உறவுகளை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை நினைப்பதன் மூலம் சமாதானத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. அத்துடன் போர் விளைவில் உடல், உள, பொருளாதார நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் குறிப்பாக பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் எண்ணும்போது சமாதானத்தின் அவசியம் உணரப்படுகின்றது.

மிகச் சிறிய வயதிலேயே சமாதானத்துக்கான அறிவு புகட்டப்பட வேண்டும். பாடசாலைகளிலும் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டு வடிவம் கொடுக்கப்பட வேண்டும். சமயங்களிலும் விஞ்ஞானத்திலும் சொல்லப்படுவதுபோல மனம்தான் எல்லாவற்றுக்கும் முன்னோடி. எனவே மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

அத்துடன் எந்த வித்தியாசம் நமக்கிடையே இருப்பினும் அடிப்படையில் நாம் மனிதகுலத்தினரே எனப் போதிக்கப்படுவதே சமாதானத்துக்குரிய முதற்படி என்பதை கருத்தில் கொண்டு செயற்படுவோமாயின் ஆரோக்கியமான நிலையான சமாதானம் உருவாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கில் அடங்காத கருணை வேகம்

பயணம் செய்கிற போது வேகத்தை எப்படிக் கணக்குப் போடுவார்கள்? மணிக்கு 100 கி.மீ வேகம் என்பார்கள். பழைய காலத்தில் மைல் கணக்கு இருந்திருக்கும். வேகத்தின் கடுமையை விளக்க இலக்கிய இதிகாசப் புலவர்கள் மனோவேகம், வாயு வேகம் என்று மிகைப்படுத்துவது வழக்கம்.

மனம் வாயுவால் ஆனது. ஆனால் வாயுவைவிட வேகமானது. எப்படி? சென்னையில் இருந்து லண்டன் செல்லும் பிரிட்டன் ஏர்வேஸ் விமானம் சில ஆயிரம் மைல்களை எட்டுமணி நேரத்தில் சென்றடைகிறது. ஆனால் லண்டனில் இருக்கும் நண்பரை இலங்கையில் இருந்து மனம் நினைக்கும் போது, அடுத்த விநாடியே சென்று சேர்ந்து விடுகிறது. எனவே மனோவேகத்தை விஞ்சும் வேகமே உலகில் கிடையாது.

ஆனால் மனோ வேகத்தையும் விஞ்சிய வேகம் ஒன்று உண்டு. அது கடவுளின் கருணை வேகம் என்று ஸ்வாமி ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளினார். இறைவன் உயிர்களைக் காக்க ஓடி வருகிற வேகம் மிக மிக அதிகம். அது மனோவேகம், வாயுவேகத்தை விஞ்சிய காருண்யாவேகம் என்று அருளினார். இது உண்மையும் கூட.

ஆந்திர தேசத்தில் போதனா என்ற புலவர் - பரமபக்தர் இந்தக் கதையைச் சொல்லும் போது அதிகநயத்துடன் சொன்னார். அவசரமாக வெளியில் ஓடுகிற ஆண்கள் அவசரத்திலும் அங்க வஸ்திரம் என்கிற மேல்துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு போவது வழக்கம். பெருமாள் அப்படிப் புறப்பட்ட அவசரத்தில் லஷ்மிதேவியின் மேலாடையை உருவி தன்மீது போட்டுக் கொண்டு புறப்பட்டார் என்று கற்பனை செய்தார். முதலை காலைக் கௌவியதால் ஏற்பட்ட வலியில் துடித்துக் கொண்டிருந்த கஜேந்திரன், திருமால் மீது Mrs.திருமால் மேலாடையைப் பார்த்ததும் வலியை மறந்து, சின்னக் கண்களை இடுக்கிக் கொண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தான் என்று எழுதினார்.என்ன கேலித்தனம்.


அவசரமாக இரவு நேரத்தில் டாக்டர் வீட்டுக் கதவைத் தட்டினால், மனைவியின் பாவாடையுடன் டாக்டர் வெளியில் வந்தால் எவ்வளவு வலியிலும் நோயாளி சிரிக்கமாட்டாரா என்ன? பகவானிடத்தில் என்ன உரிமை! என்ன கேலி! பக்தனைக் காக்கும் பதைபதைப்பு எப்படிச் சித்திரிக்கப்படுகிறது பார்த்தீர்களா? ஆந்திரதேசத்தில் போதனா இந்தக்காட்சியைப் பாடி விளக்கிய போது அங்கிருந்த அரண்மனைப் புலவர் ஆட்சேபம் செய்வித்தார்.

''பகவான் இப்படியெல்லாம் வரமாட்டார்; அவர் அந்தஸ்து என்ன!கௌரவம் என்ன! கிரீடம், குண்டலம், சங்கு சக்கரம், வஸ்திரம், தனது சேனை, தொண்டர் குழாத்துடன் கௌரமாக வந்தார் என்று தான் பாட வேண்டும். இதோ பாருங்கள் அரண்மனைப் புலவராகிய நானே எப்படி பொன், பட்டு, பீதாம்பரத்துடன் என் சீடர் புடைசூழ வந்திருக்கிறேன். எங்கு போனாலும் இப்படித்தான் போவேன் . எனவே பகவானும் அப்படித்தான் வருவார். நீர் எழுதியது தவறு'' என்று சொல்லிவிட்டு எழுந்து போய் விட்டார்.கூட்டம் கலைந்தது. போதனா முகம் வாடிவிட்டது.

மறுநாள் காலை போதனா அரண்மனைப்புலவர் வீட்டிற்குப் போனார். அவர் கௌபீனம் (கோவணம்) மட்டும் கட்டியபடியே எந்த ஆடை ஆபரணமும் இல்லாமல் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். அவசரத்துடன் அவரைப் பார்த்து போதனா பரபரப்பாக, ''உங்கள் பேரக் குழந்தை தெருக் கோடியில் உள்ள கிணற்றில் விழுந்து விட்டது. யாராலும் காப்பாற்ற முடியவில்லை'' என்று அழுதார்.

அடுத்தகணம், பெருத்த 'தொந்தி' தொப்பையுடன் சதைசதை என்ற எண்ணெய் பூசிய உடம்புடன் வெறும் கௌபீனத்துடன் அரண்மனைப் பண்டிதர் வீதியில் இறங்கி ஓடினார். புறப்படும் போது கால் எண்ணெய் தரையில் படாமல் இருக்க தரையில் போட்டிருந்த துண்டுத்துணியை மேலே போட்டபடி மூச்சிரைக்க, ஓடிவந்து கிணற்றை எட்டிப்பார்த்து குய்யோ முறையோ என்று கதறினார். சிறிது நேரத்தில் போதனா, புலவரின் அழகுப் பேரனைக் கையிலேந்தியபடி அங்கு வந்தார். ''ஏன் பொய் சொன்னீர்?'' என்று புலவர் கோபித்தார்.

போதனா சிரித்தபடி ''எப்போதும் எங்கு போனாலும் பட்டு பீதாம்பரம், கங்கணம், மடாணி அணிந்து சீடர் புடைசூழ போகும் தாங்கள் இப்போது அப்படி வரவில்லையே! மேலே கரித்துண்டும் இடுப்பில் கௌபீனமும் கட்டிக்கொண்டல்லவா ஓடிவந்தீர்கள்! பேரனுக்கு துன்பம் என்றவுடன் ஓடிவருகிற போது பட்டுப் பீதாம்பரம்,குண்டலம் அணியாமல் கௌபீனத்துடன் அரண் மனைப்புலவர் வருவார் என்றால், பக்தனுக்கு துன்பம் என்றால் பகவான் லஷ்மியின் மேலாடையுடன் வந்தார் என்று நான் சொன்னது மட்டும் எப்படித் தவறாகும்? இதைப் புரிந்து கொண்டால் சரி'' என்று பேரனை பாட்டனாரிடம் கொடுத்துவிட்டு நடையைக் கட்டினார்.



புலவரின் கண்கலங்கியது. கர்வம் ஒடுங்கியது உண்மையில் கருணையின் வேகம் கணக்கிட முடியாதது! போதனாவின் கவிதை அரங்கேற்றத்தைத் தடைசெய்த தன் கர்வம் தவறானது என்று வருந்தினார். கடவுளின் காருண்ய வேகம் எத்தனை மகத்தானது என்று திகைத்தார்.

சு.கி.சிவம்



# விரும்பியபடி அமர்ந்து நல்லருள் பாலிக்கும் நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர்



ஞானி

பாரம் ஏற்றி இறக்குவதற்கும், பயணம் செய்வதற்கும் மாட்டு வண்டில்களை மட்டும் பயன்படுத்திய காலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் இருந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்கு மாட்டு வண்டில்களில் சென்று நெல் மற்றும் தானியங்கள் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருவது வழமை. பணப் புழக்கம் இல்லாத பண்டமாற்று பொருளாதாரக் கட்டமைப்பு நிலவிய காலப் பகுதியில் வர்த்தக ரீதியிலும், சுய தேவையின் நிமித்தமும் மாட்டு வண்டில் பயணங்கள் இரவு பகலாக நிகழ்வதுண்டு.

பெருந்தெருக்கள், வீதி அமைப்புக்கள் பொருத்தமான கட்டமைப்பில் இல்லாத அந்தக் காலப் பகுதியில், பயணத் தூரத்தைக் குறைப்பதற்கு ஏற்றவகையில் குறுக்கு வழியாகவும், மாட்டு வண்டில்கள் செல்லக்கூடிய உள்ளூர்ப் பாதைகள் மூலமும் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதும், குறிப்பிட்ட இடங்களில் பயணிகள் இளைப்பாறி மாடுகளுக்கு உணவூட்டுவதும் தங்கியிருந்து தாமும் சமைத்துச் சாப்பிட்டு ஆயாசம் தீர்த்து பயணத்தைத் தொடர்வதும் வழமை. இந்த வகையில் கைதடியில் இருந்து நீர்வேலி தரவை வழியாக வலிகாமம் கிழக்கு பிரதேசத்துக்குள்ளே நுழைபவர்கள் நீர்வேலியில் தங்கி ஆறிச் செல்வது ''மூத்த நயினார்'' என்ற பெயர்கொண்ட காணியில் ஆகும். இலுப்பை, தென்னை நிழல் பரப்பும் இந்த சோலைக் காணியில் நீர் பெறுவதற்கு கிணறு, குளம் என்பனவும் அமைந்திருந்தன.

குப்பிளான் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் வன்னிக்குச் சென்றிருந்த போது வயல்வெளியில் எதிர்பாராத வகையில் கிடைத்த பிள்ளையார் விக்கிரகத்தைக் கண்டெடுத்து தமது ஊரில் வைத்து வழிபடுவோம் என்ற எண்ணத்தோடு நெல் மூடையில் வைத்துக் கொண்டு குப்பிளானுக்குத் திரும்பினர். அப்போது வழமை போல நீர்வேலியில் தங்கி இருந்து ஆயாசம் தீர்த்து செல்லும் போது, இறக்கி வைத்த பிள்ளையார் விக்கிரகம் கொண்ட நெல்மூடையைத் தூக்க முடியவில்லை. பயணம் செய்த எல்லோரும் முயன்றும் தூக்க முடியாத நெல் மூடையை ''எல்லாம் அவன் செயல்'' எனத் தேறி அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர்.

இந்த அற்புத தகவல் ஊர் எல்லாம் பரவியது. இதனை அறிந்த மூத்த நயினார் காணி உரிமையாளர் சுப்பிரமணியக் குருநாதர், நீர்வேலி குருக்கள் குடியைச் சேர்ந்த சிவசுவாமிக் குருக்கள், முத்துச்சாமிக் குருக்களை அணுகி ஆலோசனை கேட்டதோடு, விநாயகப் பெருமானுக்கு தனது காணியிலேயே கோயில் அமைத்து அதில் விக்கிரகத்தை வைத்து வழிபாடு செய்து வந்தார். பின்னர் அசைவுள்ள கோயில் தளபாடங்கள், காணிகள், வயல்கள் முதலியவற்றை கோயிலுக்கு தரும தானம் செய்து நித்திய நைமித்திய கிரியைகளைச் செய்யும் ''அதிகார தத்துவ நன்கொடைச் சாட்டுதல் உறுதியை'' முடித்து சிவசுவாமிக் குருக்கள், முத்துச்சாமிக் குருக்களிடம் கையளித்தார்.

மூத்த விநாயகர் தான் விரும்பிய விதத்தில் விரும்பிய இடத்தில் கோயில் கொண்ட விதம் வன்னியில் இருந்து நெல் மூடையில் எடுத்து வந்த போது நீர் வேலியில் இருந்து அருள் செய்ய திருவுள்ளம் கொண்டமை, நம்பியவர் எண்ணத்தை விக்கினங்கள் தீர்த்து கைகூடச் செய்யும் அருள் வியாபகம் மற்றும் அற்புதங்கள் அடியவர்களை ஆலயத்தின் பக்கம் ஈர்க்கச் செய்தது. எப்பொழுதும் அடியவர் கூடி அருள் பெற்று உய்தனர். அந்த வகையில் ஆலயத்தின் புகழ் அடியவர்களால் வியந்து போற்றப்படுகின்றது. இன்று வலி கிழக்கில் உள்ள ஆலயங்களில் சிறந்த புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்குவதோடு பெரும் பொருள் செலவில் ஆடம்பரமான திருவிழாக்கள் நடைபெறும் ஆலயங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

''வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் விநாயகர் வழிபாட்டு மரபுகள் பெரும்பாலும் வன்னிப் பிரதேசத்தில் இருந்து தென்மராட்சி கடல் நீரேரிப் பரப்பின் ஊடாக எடுத்து வரப்பட்டவையாக காணப்படுகின்றன'' என தொல்பொருள் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

''வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் காணப் படும் விநாயகர் வழிபாட்டு மரபுகள் பெரும்பாலும் வன்னிப் பிரதேசத்தில் இருந்து தென்மராட்சி கடல் நீரேரிப் பரப்பின் ஊடாக எடுத்து வரப்பட்டவையாக காணப்படுகின்றன'' என தொல்பொருள் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றன

நீர்வேலிக் கிராமத்தில் ஈசான திக்கில் இந்த ஆலயம் அமைந்திருப்பதால், வேண்டி வழிபடும் அடியவர்களுக்கு யாவும் கிடைக்கும் நற்பேறு அடைவார்கள் என்பது நம்பிக்கை. இதனை ஆகம வாக்கியங்களும் வலியுறுத்துவதாக கூறப்படுகின்றது. இந்த வகையில் இட விசேடத்தாலும், மூர்த்தி விசேடத்தாலும் சிறப்புப் பெற்ற தலமாக விளங்குகின்றது.

அரி அரி வட்டரின் ஆன்மிகப் புலமை பற்றியும் மந்திர வலிமை பற்றியும் நீர்வேலிப் பகுதியில் பெருமையாக பேசிக்கொள்ளப்படுவதுண்டு. மந்திர சக்தி உடைய இவர், தேவதைகளை வசப்படுத்தி தான் நினைத்தவற்றை நினைத்தவாறு நிறைவேற்றும் வல்லமை உடையவர். நீர்வேலிப் பகுதியில் பேதி நோய் ஏற்பட்ட வேளையில் அரி அரி வட்டர், பிள்ளையார் மீது வசந்தன் பாட்டுப் பாடி வழிபாடு செய்ததாகவும், அதை அடுத்து நீர்வேலிப் பகுதியில் நிலவிய பேதி நோய்க் கொடுமை முற்றாக நீங்கி மக்கள் சுகவாழ்வு வாழ்ந்ததாகவும் கூறுவர். தற்பொழுதும் வசந்தன் பாட்டுப் பாடி வழிபாடு செய்யும் மரபு வன்னிப் பகுதியில் காணப்படுகின்றது.

சுப்பிரமணியர் குருக்களின் காலத்தில் மாரிமழை பொய்த்தமையால் குருக்கள் மழை வேண்டி ஆசாரமாக மோதகம், கொழுக்கட்டை செய்து நிவேதனம் செய்ததும் மழை சொரிந்ததாகவும், வேட்டைத் திருவிழாவுக்கு பிள்ளையார் ஆரோகணிக்கும் பெரிய குதிரை வாகனம் வேறு கோயிலிலிருந்து இரவலாக பெற்றுப் பயன்படுத்திய வேளை மீண்டும் அதனை உரியவர்களிடம் திருப்பி கையளிப்பதற்கு தூக்கிய வேளை தூக்க முடியாத அளவு பாரமாக இருந்தது. அதனால் பிள்ளையாருக்கே அதனை உபயம் செய்ததாகவும், ஒரு தடவை சில திருடர்கள் இணைந்து பிள்ளையாரின் காண்டாமணியைத் திருடிச் சென்ற வேளையில் அதன் பாரத்தைப் பிள்ளையார் அதிகரிக்கச் செய்ததோடு, ஊரவர்களுக்கு அறியச் செய்து திருடர்கள் பிடிக்கப்பட்டதாகவும், பிள்ளையாரின் அற்புதங்களை வியந்து பேசுவர். இன்றும் அடியவர்கள் பிள்ளையார் மீது வேண்டுதல் செய்து மோதகம் செய்து நிவேதனம் செய்வித்து பிரார்த்தனை செய்து தாம் நினைத்த காரியத்தில் அனுகூலம் பெறுகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக அந்தணர்களால் பரிபாலனம் செய்யப்பட்டு வரும் ஆலயத்துக்கு அடியவர்கள் சகல வகையிலும் பூரண ஒத்துழைப்பை வழங்கி திருப்பணிகளை நிறைவு செய்வதற்கும் ஆலயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தங்களால் இயன்ற அளவுக்கு உதவி செய்து நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்தவிநாயகரின் அருள் பெற்று வாழ்கின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் பதவி கிடைக்காதது ஏன்?

## விளக்குகிறார் பிள்ளையான்



முதலமைச்சர் பதவி வகித்து பல பணிகளை முன்னெடுத்த நான், பின்னர் புதிய மாகாண அமைச்சரவையில் இருப்பது என்பது நடை முறைக்கு சாத்தியமற்றது.

மட்டக்களப்பு,செப்.21

கிழக்கு மாகாண முதலமைச்சராக மீண்டும் தான் வரமுடியாது என்பதை தேர்தல் முடிவுகள் மூலம் தன்னால் உணர்ந்து கொள்ள முடிந்ததாக முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சராக நஜீப் ஏ மஜீத் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாகவே நஜீப் ஏ மஜீத்தை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று சிவனேசதுரை சந்திரகாந்தன் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதனை விட விருப்பு வாக்குகளில் மிகக் கூடுதலான வாக்குகளை முதலமைச்சர் பதவிக்குரியவர் பெற்றிருக்க வேண்டும் அல்லது தமது கட்சி ஆகக் குறைந்தது 3 ஆசனங்களாவது பெற்றிருக்க வேண்டும் .


அதில் ஒன்று கூட சாத்தியப்படாததன் காரணமாகவே தன்னால் முதலமைச்சர் பதவியைப் பெற முடியாது போனது.

ஏற்கனவே முதலமைச்சர் பதவி வகித்து பல பணிகளை முன்னெடுத்த நான், பின்னர் மாகாண அமைச்சரவையில் இருப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. மேலும் அமைச்சர்கள் ஒதுக்கீடு தொடர்பாக அரசிலும் சில பிரச்சினைகள் இருந்தன. இதன் காரணமாகவேதான் அமைச்சரவைப் பதவியைப் பெற விரும்பவில்லை.

அமைச்சரவையில் இந்த முறை நான் இடம்பெறாத காரணத்தினால் தமிழர்கள் எவரும் முதலமைச்சராக வருவதற்குரிய வாய்ப்புகள் கைநழுவிப்போனது. இதனால் மாகாண சபை உறுப்பினராக இருக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கிறது. மாகாண சபை உறுப்பினர் பதவியுடன் ஜனாதிபதியின் ஆலோசகர் பதவி மூலம், தன்னால் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பேன்.- என்றார். (ச)

## தடைசெய்யப்பட்டுள்ள உபகரணங்களுடன் மீன்பிடி

### புல்மோட்டையில் அதிகரிப்பு என்கிறார் கடற்றொழில் அமைச்சர்



திருகோணமலை,செப்.21

திருகோணமலை, புல்மோட்டை பகுதியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அதிகரித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்று கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன குறிப்பிட்டார். இந்த விடயம் குறித்து பாதுகாப்புச் செயலாளருடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் கூறினார்.

தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் மீன்பிடி அமைப்புக்களின் தலைவர்கள் தமக்கு அறிவித்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## சமூக தொடர்பாடல் நியமனத்தில் அநீதி

### ஊவா ஆளுநருக்கு மனு

நுவரெலியா,செப்.21

பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர்கள் என்ற நியமனம் அதன் இலக்கை அடையவில்லை. எனவே, அதில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்துமாறு ஊவா மாகாணசபை உறுப்பினர் அ.அரவிந்குமார், ஊவா மாகாண ஆளுநர் சீ.நந்தா மெத்திவ்விடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மலையகப் பகுதிகளிலுள்ள அரச அலுவலகங்களில் தமிழ் மக்கள் தமது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தே வருகின்றனர்.

தமிழ்மொழி புரியாத அரச ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்போது மொழிப் பிரச்சினை ஒரு விரிசலை ஏற்படுத்துகின்றது. இந்த நிலையில் மலையகத்தைச் சேர்ந்த சுமார் 650 இளைஞர், யுவதிகளுக்கு குறித்த நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் மாவட்ட செய லாளர் அலுவலகங்கள் , பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபை போன்ற முக்கிய இடங்களில் சேவைக்கு அமர்த்தப்பட்டனர்.

இவர்களின் பிரதான பணியாக அலுவலகத்துக்கு வரும் தமிழ்பேசும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுதல், அரச அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் பெருந்தோட்ட தமிழ் மக்களுக்கு அறிவுறுத்துதல் போன்றவையாகும்.

இவ்வாறு நியமனம் பெற்ற 650 பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியாளர்களில் தற்போது சுமார் 200 இற்கும் அதிகமானோர் ஆசிரிய நியமனங்களைப் பெற்று கல்விச்சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவ் வாறு இவர்களை வேறு பணிகளில் அமர்த்துவது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

எனவே அரச நிறுவனங்களில் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர்கள் என்ற நியமனங்களைப் பெற்றவர்களை முழுமையான மக்கள் சேவைக்கு ஈடுபடுத்த சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவு வழங்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## மணல் 'சூறை' நால்வர் கைது

கிரிந்தி ஓயாவில் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குழுவினரை வன ஜீவராசி அதிகாரிகள் கைது செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான வனஜீவராசிகள் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

லுணுகம்வெஹர வனப் பகுதியின் எல்லையிலுள்ள கிரிந்திஓயாவில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மணலைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று உழவு இயந்திரங்களும் டிப்பர் வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

## நேரம் போகிறது ... வருமா தண்ணீர்?



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் வறட்சி காரணமாக படுவான்கரை பிரதேசத்தில் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றனர். பட்டிப்பளை பிரதேசத்தில் பிரதேசசபையினால் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் காத்திருக்கின்றனர். (ச-31)

## பொலிஸாரின் மனு தள்ளுபடி

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று கண்டி நகரில் நடத்திவரும் சத்தியாக்கிரகத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பிக் குமாறு கோரி கண்டி பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை தாக்கல் செய்த மனுவை கண்டி பிரதான நீதிவான் ரவீந்திர பிரேமரத்ன தள்ளுபடி செய்தார். கண்டி நகரில் பொதுமக்களுக்கு பாதிப்பாக இவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதனால் அவர்களை இந்த இடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு உத்தரவு ஒன்றைப்பிறப்பிக்குமாறு கோரியே பொலிஸார் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த பிரதான நீதிவான் ரவீந்திர பிரேமரத்ன, மாணவர்களது சத்தியாக்கிரகத்தினால் பொது மக்களுக்கு பாதிப்பு எதுவும் இல்லை என்பதால் அவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றத் தேவையில்லை என்று கூறி பொலிஸாரின் மனுவை தள்ளுபடி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## சமூக சிந்தனை கொண்ட மாணவரை உருவாக்க வேண்டும் ஆசிரியர்கள்

### மட்டக்களப்பு விழாவில் கிழக்குத் துணைவேந்தர்

தெளிவான சிந்தனையும், ஆளுமையும் ஓர் ஆசிரியரிடம் இருக்க வேண்டும்.

எருவில்,செப்.21

நாட்டுப்பற்றும், சமூக சிந்தனையும் உள்ள மாணவ சமூகத்தை உருவாக்குகின்ற நல்ல பணியைச் செய்கின்றவர்களாக ஆசிரியர்கள் மாற வேண்டும் என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.எம்.முஹம்மத் இஸ்மாயில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை மற்றும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெளிவான சிந்தனையும், ஆளுமையும் ஓர் ஆசிரியரிடம் இருக்கவேண்டும். இவர்கள் மாணவர்களை வெற்றியின் பக்கம் அழைத்துச் செல்ல வேண்டும். ஆசிரியர்கள் நல்ல உயர்வான பண்புகளை வளர்க்கின்ற பணியைச் சுமப்பவர்களாக இருக்கவேண்டும்.

பூகோளமயப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப உலகின் அடிப்படைத் தேவையாகக் காணப்படுவது கல்வியாகும். உலகில் காணப்படுகின்ற அனைத்து வளங்களையும் விட மனித வளத்துடன் கல்வி என்கின்ற பெறுமானம் சேர்க்கப்படுகின்றபோது, அது உலகிலேயே மிகவும் பெறுமானம்மிக்க வளமாக நோக்கப்படுகின்றது.

ஓர் ஆசிரியரின் சிறந்த மூலதனம் அறிவாகும். அந்த அறிவைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் சாதாரண மனிதர்களைவிட சிறப்புத் தேர்ச்சிபெற்றவர்களாக இருக்கவேண்டும்.

கல்வியைப் போதிக்கின்றவர் கல்விச் சமூகத்துக்காகப் பல தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் செய்பவராக இருக்கவேண்டும். தனது அறிவை முதலீடாகப் பயன்படுத்தி [illegible]ள்ள ஒரு [illegible] வடிவமைக்க வேண்டும் - என்றார்.(ச-31)

## குப்பைகளைச் சேகரிக்க கூடைகள் விநியோகம்



திருகோணமலை,செப்.21

கிண்ணியா பிரதேசத்தில் பொதுமக்களின் அன்றாட பிரச்சினையான குப்பைகளைச் சேகரிப்பதற்கான குப்பைக் கூடைகள் வழங்கப்பட்டன. நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கிண்ணியா நகர சபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது கூடைகள் வழங்கப்பட்டன. கிண்ணியா பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள், பள்ளிவாசல்கள் மற்றும் பொது இடங்களுக்கு வைப்பதற்காகவே இந்தக் குப்பை சேகரிக்கும் கூடைகள் விநியோகிக்கப்பட்டன.

கிண்ணியா நகர சபையின் கோரிக்கைக்கு இணங்க இந்தத் திட்டத்துக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தி நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எந்தச் செயலையும் நிதானமுடன் யோசித்துச் செய்வது நற்பலன் பெற உதவும். நண்பர்களில் சிலர் உங்கள்மீது அதிருப்தி அடைய வாய்ப்பு உள்ளது. பணப்பரிவர்த்தனையில், பாதுகாப்பு நடைமுறை அவசியம். நேரம் தவறி உணவு உண்பதால் உடல் நலக்குறைவு ஏற்படலாம்.

**இடபம்:** மனதில் உற்சாகம், செயலில் தனித் திறமை வெளிப்படும். முக்கிய பணிகளை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து நிறைவேற்றுவீர்கள். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். சராசரி பணவரவுடன் உபரி பணவருமானமும் கிடைக்கும்.

**மிதுனம்:** கடந்தகாலங்களில் உங்களுக்கு எதிராகச் செயற்பட்டவர் இடம் மாறிப்போகிற புதிய சூழ்நிலை உண்டு. பணிகளில் கூடுதல் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் சிறக்க உகந்த சூழ்நிலை உருவாகும். பணவரவில் திருப்திகர நிலை உண்டு. உடல்நல ஆரோக்கியம் பலம்பெறும்.

**கடகம்:** அடுத்தவர் விவகாரங்களில் உங்கள் கருத்து நல்லது என்றாலும் சொல்ல வேண்டாம். பணிகள் நிறைவேறுவதில் பல்வேறு சிரமம் குறுக்கிடலாம். தொழில், வியாபாரத்தில் முழுக்கவனம் மட்டுமே வளர்ச்சி நிலையைத் தரும். பணவரவை விட புதிய செலவுகள் அதிகரிக்கும். ஆபத்தான இடங்களில் பிரவேசிக்க கூடாது.

**சிங்கம்:** உங்கள் செயல்களில் சிலர் குறை காண முயற்சிப்பார்கள். கூடுதல் பொறுப்புடன் செயற்படுவதால் நன்மை பெறலாம். பணவரவு பெறுவதில் காத்திருக்கும் நிலை உண்டு. உடல் நலக் குறைவால் மருத்துவச் செலவு ஏற்படலாம். திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் இருக்கும்.

**கன்னி:** உங்கள் நண்பர், உறவினர்களுக்காக சில விடயங்களில் பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில் வளம் சிறந்து சாதனை இலக்கை எட்டுவீர்கள். புதியசொத்து சேர்க்கை உண்டாகும்.

## நாளை

புரட்டாதி - 06 சனிக்கிழமை 22.09.2012
திதி: ஸப்தமி மாலை. 05.44 வரை
நட்சத்திரம்: கேட்டை மாலை. 06.43 வரை
சுபநேரம்: 03.02- 04.32 வரை
ராகுகாலம்: 09.02- 10.32 வரை

**துலாம்:** உங்கள் உடல் நலம் சீராக அதிக கவனம் கொள்வீர்கள். புதிய பணிகள் உருவாகி மனதில் பதற்றம் தரும். பணவரவுக்கும், செலவுக்கும் சரியான விகிதம் இருக்கும். அறிமுகம் இல்லாதவர் தரும் உணவு உண்பதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் புதிய உற்சாகம் பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் சிறக்கும் அனுகூலகாரணி பலம் பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**தனுசு:** உங்கள் முயற்சிகளில் தடுமாற்றமும், அதனால் பணி நிறைவேறுவதில் தாமதமும் இருக்கும். பணவரவை விட செலவு கூடும். சிலரது ஆலோசனைப்படி செயற்படுவதால் சிரமம் வரலாம். கவனம் தேவை. சீரான ஓய்வு உடல்நலம் காக்கும்.

**மகரம்:** நடைபெறும் நிகழ்வுகள் உங்களை மனம் மகிழச்செய்யும். எந்தப் பணியிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் சிறக்க திறமையும், உழைப்பும் துணை நிற்கும். இயன்ற அளவில் அறப்பணி செய்வீர்கள்.

**கும்பம்:** உங்கள் செயல் ஒவ்வொன்றும் எதிர்கால நலனில் அக்கறை கொண்டதாக இருக்கும். நல்லவர்களின் உதவி தாமாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். பணியாளர்கள் பதவி உயர்வு, சலுகைப்பயன் பெறுவர்.

**மீனம்:** உங்கள் ஒவ்வொரு செயலிலும் கூடுதல் முன்யோசனை அவசியமாகும். சுற்றி இருப்பவர், உங்கள் சிரமங்களைக் கண்டு கேலிசெய்யும் வாய்ப்பு உள்ளது. சக தொழில் சார்ந்த எவருடனும் சச்சரவைத் தவிர்க்கவும். பணவரவு குறைவதால் சிறுஅளவில் பணக்கடன் பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 6 | 4 | 9 | | | 5 | |
| | | | | | 7 | 1 | 3 | 4 |
| | 2 | 3 | | | 1 | | | 9 |
| | | | | | 4 | | 1 | 6 |
| 3 | | 7 | | | | 9 | | 2 |
| 1 | 9 | | 3 | | | | | |
| 5 | | | 2 | | | 8 | 9 | |
| 2 | 3 | 9 | 7 | | | | | |
| | 7 | | | 5 | 9 | 4 | 2 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 1 | 3 | 9 | 2 | 6 | 8 | 7 |
| 6 | 9 | 8 | 5 | 7 | 4 | 2 | 1 | 3 |
| 7 | 2 | 3 | 1 | 8 | 6 | 5 | 4 | 9 |
| 9 | 4 | 5 | 6 | 2 | 7 | 1 | 3 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 1 | 5 | 7 | 9 | 2 |
| 2 | 1 | 7 | 9 | 3 | 8 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 9 | 2 | 4 | 3 | 8 | 7 | 1 |
| 1 | 7 | 2 | 8 | 6 | 9 | 3 | 5 | 4 |
| 3 | 8 | 4 | 7 | 5 | 1 | 9 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்துதல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
28★03★1950

உதிர்வு
06★08★2012

### அமரர் குணரட்ணம் தெய்வேந்திரம்

(இளைப்பாறிய மின்சார சபை ஊழியர்)

கடந்த (06.08.2012) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் குணரட்ணம் தெய்வேந்திரம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.09.2012) வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் மற்றும் அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றி ஆறுதல் தெரிவித்தவர்கள், வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்கள் மற்றும் உதவிகள் பல செய்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"கஜபவனம்"
கரவெட்டி மேற்கு, கரவெட்டி,
021 3210 795

குடும்பத்தினர்.
(23605)(6.7.45)



## SEP. 22,23 Saturday & Sunday

# BBC சிறார்களின் MEGA கல்வி, கலை கண்காட்சி

அனுமதி இலவசம்

யாழ் குடாநாட்டில் 10 வளாகங்களைக் கொண்டு இயங்கிவரும் பிரபல தனியார் ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையும், விசேட ஆங்கிலக் கல்விக்கான வகுப்புக்களை நடாத்தி வரும் BBC இன் கல்வி, கலை கண்காட்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : Rajathurai Block, யாழ் மத்திய கல்லூரி
திகதி : 22.09.2012 சனிக்கிழமை
23.09.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 முதல் - மாலை 4.30 வரை

எமது சிறார்களின் கல்விச் செயற்பாடுகளைப் பார்வையிட்டு நீங்களும் பயன் பெறுங்கள்.

BRITISH BUSINESS COLLEGE
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055
Where Students Come First

(அ/3422)(6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதர் அப்துல் ஹமீத் அப்துல் பதா கே அல்முல்லா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கடந்த செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# ஒக்.1 முதல் அதிகரிக்கிறது குடிதண்ணீர்க் கட்டணமும்

கொழும்பு,செப்.21

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் குடிதண்ணீருக்கான கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் லால் பிரேம்நாத் தெரிவித்தார்.

வீட்டுப்பாவனைக்கான நீர்க்கட்டணத்தை எத்தனை சதவீதத்தால் அதிகரிப்பதென்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

ஆனால் வீடுகளின் நீர்ப்பாவனை முறைக்கேற்ப பல்வேறு அடுக்குகளாக கட்டணம் விதிக்கப்படும் என்று அவர் கூறினார்.

வர்த்தக நோக்கங்களுக்கான நீர்ப்பாவனைக் கட்டணம் 15 சதவீதத்தாலும் சிறிய கைத்தொழில்களுக்கான தண்ணீர்க் கட்டணம் 20 சதவீதத்தாலும் அதிகரிக்கப்படும் என்று அவர் கூறினார். சமய மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான குடிதண்ணீர் கட்டணத்தில் மாற்றமிருக்காது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தேர்தல் வரும் காலத்தில் மக்களை ஏமாற்றுவதே அரசின் கொள்கை

## ஹர்ஷ டி சில்வா காட்டம்

கொழும்பு,செப்.21



தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றுவதுதான் இந்த அரசின் அடிப்படை நோக்கமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் நெருங்கும் போது அரசு பண்டங்களின் விலையைக் குறைக்கின்றது. குறிப்பாக அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின் போதும் அரசு விலை குறைப்பைச் செய்தது. ஆனால், தேர்தல் முடிவடைந்தகையோடு நேற்றுமுன்தினம் டின்மீனின் விலை மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது. மிளகாய் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றுவதே இந்த அரசின் பிரதான நோக்கமாகும். இதன் ஓர் அங்கமே தேர்தல் காலத்து விலை குறைப்பாகும். மாறாக உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பது அல்ல இவர்களின் நோக்கம்.

அதேவேளை, ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்காமல் அரசு ஒரு வருடம் வரை காலத்தை இழுத்தடித்து வருகின்றது. அரசிடம் பதிலிருந்தாலும், அதைக் கூறினால், தனது செயல் வெளிச்சத்துக்கு வந்துவிடும் என்பதற்காகவே இன்னும் பதில் வழங்காமல் உள்ளது. இந்தவிடயம் தொடர்பில் நான் ஐந்தாவது தடவையாகக் கேள்வி எழுப்பியுள்ளேன்.

குறிப்பாக, பங்குச் சந்தையில் கடந்த ஒரு வருட காலத்துக்குள் அதன் இரண்டு தலைவர்கள் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளனர். அண்மையில் பதவி விலகிய தலைவர், பங்குச் சந்தையில் அரசியல் தலையீடு உள்ளது என்று பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார் - என்றார்.

அதேவேளை, இந்த வாதத்தில் உரையாற்றிய சர்வதேச நிதி ஒத்துழைப்புக்கான சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, உற்பத்தியாளர்களை பாதுகாக்கின்ற அதேவேளை, நுகர்வோர்களின் நன்மை குறித்தும் அரசு கவனம் செலுத்துகின்றது. இரு தரப்புக்கும் நன்மை பயக்கும் வகையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்று குறிப்பிட்டார். (ச-சி)

# வாகன வரி திடீர் அதிகரிப்பு இந்தியாவைப் பழிவாங்கவா?

## நாடாளுமன்றில் யோகராஜன் எம்.பி.



கொழும்பு,செப்.21

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்பட்டதால் அந்த நாட்டைப் பழிவாங்கும் நோக்கில், இலங்கை அரசு அங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் வானங்களுக்கான வரியை அதிகரித்துள்ளது என கருத்துகள் வெளியாகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் தெரிவித்தார்.

சாதாரண மக்கள் பாவிக்கும் வாகனங்களுக்கு இறக்குமதி வரியை அரசு அதிகரித்துள்ளது. குறிப்பாக, இந்தியாவிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் வாகனங்களின் விலையும் அதிகமாகவுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரி விதிப்பு மோசமான முறையில் விதிக்கப்படுகின்றது. சாதாரண மக்கள் பாவிக்கும் வாகனங்களுக்கு இறக்குமதி வரியை அரசு அதிகரித்துள்ளது. குறிப்பாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலையும் அதிகமாகவுள்ளது.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்பட்டதால் அந்த நாட்டைப் பழிவாங்குவதற்கே அரசு இவ்வாறு செயற்படுகின்றது எனப் பேசப்படுகின்றது. ஆனால் இந்தியா பொருளாதாரத்தில் பலம் மிக்க நாடாகவுள்ளது.

திரவப் பாலை அரசு 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 120 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது. ஏன் 20 ரூபா லாபம் வைத்து 70 ரூபாவுக்கு விற்பனை செய்யலாம்தானே? இந்தியாவில் பாலின் விலை மிகவும் குறைவாகவுள்ளது.

அதேவேளை, சீனியின் விலையும் அதிகரிக்கப் படுகின்றது. இனிப்பின் சுவை இவர்களுக்கு எங்கே புரியப் போகின்றது. இலங்கையில் சோறுதான் சாப்பிடவேண்டும் என இவர்கள் சட்டம் போடப் பார்க்கின்றனர். மலையக மக்கள் தொழில் நிமித்தம் ரொட்டி சாப்பிடுகின்றனர். இந்தநிலையில் மாவின் விலையையும் அரசு அதிகரிக்கின்றது- என்றார்.(ச-சி)

# ஏன் இந்த அழுத்தம்?

## பொலிஸார் குறித்து முறையிடுவோம் என்கிறார் ஆசிரிய ஒன்றிய செயலர்

கொழும்பு,செப்.21

எமக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். பொலிஸார் தம்மீது தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-


ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

கல்வி அமைச்சரின் உத்தரவுக்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் விசாரணையை ஆரம்பித்திருந்தனர். இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகவில்லை என்று பொலிஸார் அறிவித்திருந்தனர். பரீட்சை வினாத்தாள் எவ்வாறு வெளியானது என்பதை விசாரிக்காமல் அது தொடர்பிலான தகவல்களை மக்களுக்கு அம்பலப்படுத்திய தம்மை நெருக்கடிக்கு உள்ளாக்கி விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை- என்றார். (ச)

# சர்வதேசத்தை வால் பிடிக்கும் ஐ.தே.க.

## சபையில் அமைச்சர் ஜோன்ஸ்டன்

கொழும்பு,செப்.21



அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதில் குறியாக உள்ள ஐக்கிய தேசியக் கட்சி, சர்வதேசத்தை நம்பியே வாழ்கின்றது என்று கூட்டுறவு வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான விவாதத்தில் அரச தரப்பில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரி அறவிடாமல் எந்தவோர் அரசாலும் நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது. வரி அறவிடாமல் ஆட்சியை முன்னெடுக்கும் எந்தவொரு நாடும் இவ்வுலகில் இல்லை.

தேர்தல் காலத்தில் வாக்கு கொள்ளப்பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பலகோணங்களில் கதைகளைக் கூறிவந்தது. அக்கட்சியின் தலைவர் வறட்சியை வைத்து பிரசாரம் செய்தார். அதுமாத்திரமின்றி, புத்தரின் புனித தாதுவைக் கூட அவர் விட்டுவைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்துக்குச் சென்று இனவாதம் பேசினார். தமிழர் வாழும் பகுதிகளுக்குச் சென்று தமிழர் ஒருவர்தான் முதல்வராக வரவேண்டும் என்றும், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று முஸ்லிம் ஒருவர்தான் முதல்வராக வரவேண்டும் என்றும், சிங்களவர்கள் வாழும் பிரதேசத்துக்குச் சென்று சிங்களவரொருவர்தான் கிழக்கு மாகாணத்துக்கு முதல்வராக வரவேண்டும் என்றும் கூறினார். ஆனால், அவர்கள் கூறிய அனைத்தையும் மக்கள் நிராகரித்தனர்.

### டின்மீன் விலை

அதேவேளை, சிறிய வகை மீன்களின் விலை தற்போது குறைந்துள்ளது. எனவே, மீனவர்களைப் பாதுகாக்கத்தான் நாம் டின்மீன் விலையை அதிகரித்தோம். இது இவர்களுக்கு புரியவில்லை.

அரசுக்கு எதிராக அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் செயற்படவேண்டும் என்ற விடயத்தில் ஐ.தே.கவினர் குறியாக இருக்கின்றனர். இதற்காக அவர்கள் வளைவால்பிடித்துக்கொண்டு திரிகின்றனர்.

அதுமட்டுமின்றி, டொலர்களுக்கு அடிபணிந்து நாட்டைக் காட்டிக்கொடுக்கின்றனர். சர்வதேசத்தை நம்பியே அக்கட்சி இருக்கின்றது. இதனால்தான் அக்கட்சிக்கு வாக்குகள்கூட கிடைப்பதில்லை- என்றார். (ச-சி)

# தொடர்பாடல் கருவியை திருடிய நால்வர் கைது

கொழும்பு,செப்.21

கொழும்பு முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தில் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த படகொன்றிலிருந்து 10 மில்லியன் ரூபா பெறுமதியான தொடர்பாடல் கருவியைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் 3 கடற் படையினர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் சட்டவிரோத குடியேற்றவாசிகளைக் கொண்டு செல்லும் படகுகளைக் கடற்படையினர் தடுத்துவைக்கும் போது, படகிலிருந்து இந்தக் கருவிகளை குறித்த சந்தேக நபர்கள் திருடிவந்துள்ளனர்.

தொடர்பாடல் கருவி காணாமல் போயுள்ளதாக ரங்கல கடற்படை முகாமிலிருந்து கிடைத்த முறைப்பாட்டையடுத்து, கொழும்பு துறைமுகப் பொலிஸாரினால் இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு, கோட்டை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவதின விழா

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு காளி அம்பாளின் விசே நவதின ஸ்நபநா அபிடேகமும் பத்தாம் நாள் அஸ்டோத்திர சதசங்காபிசேகமும் சாந்தீகப் பெருவிழாவும் இன்று விசேட ஸ்நபன அபிடேகத்துடன் ஆரம்பமாகி 10 ஆம் நாள் 30 ஆம் திகதி அஸ்டோத்தரசத சங்காபிடேகம் நடைபெற்று மாலை நவசக்தி அர்ச்சனையுடன் அம்பாள் முத் துச் சம்பரத்தில் வீதி உலாவருவார்.

(16-253)

THE HALO TRUST

## சாரதிக்கான பதவி வெற்றிடம்

**ஹலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கிறது.**

**ஹலோ ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளான, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித்தளத்திற்கு நகர்த்திச் செல்வது அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதும் ஆகும்.**

**அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.**

ஆர்வமுள்ளவர்கள்
உங்களுடையசுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களுடன்,
அனுபவமுள்ளவர்கள் தங்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**ஹலோ ரஸ்ட், 430, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

**அனைத்து விண்ணப்பங்களும் 23 செப்ரெம்பர் 2012 ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.**

(19322)(6.7.8)

advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்கு

ஏழாலை வடக்கில்
5 அறைகொண்ட மேல் மாடி
வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 021 3216 346

(23021) (45.6.7)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், மாதகல் அந்தோனியார் ஒழுங்கையில் அமைதியான சூழலில் அழகான சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

குறிப்பு: பண்டசாலை (Stores), நிறுவனங்கள் (Companies), காரியாலயம் (Office) சாலச் சிறந்தது. வாகன தரிப்பிட வசதி உண்டு.

தொடர்பு: 077 7404 680, 071 6326 601

(23074) (45.6.7)

## அறிவித்தல்

*19.09.2012 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிர சுரம் செய்யப்பட்ட "வீடு உடன் தேவை" என்ற விளம்பரம் தொடர்பாக ரூபா 15000/= அல்லது அதற்கு குறைவான மாத வாடகையை பெறவிரும்பும் வீட்டு உரிமையாளர்கள் 27.09.2012 ஆம் திகதி தேசிய வீடமைப்பு அதிகாரசபை (N.H.D.A) பங்களா விடுதிக்கு காலை 9 மணிக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தேசிய வீடமைப்பு அதிகாரசபை
பருத்தித்துறை.

(23607) (45.6.7)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No. 1 புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
விலை 70/= மட்டுமே, பதிவுகளை மேற்கொள்ளவும்.

* றாஜீவ், நவாலி வீதி,
ஆனைக் கோட்டை.

(23056)(6.8)

## மணி விழா அழைப்பு



### தீவக வலயக்கல்விப்பணிப்பாளர்

உயர்திரு.G.V.இராதாகிருஸ்ணன்
அவர்களின் மணிவிழா

தலைமை
திரு.ஐ.புவனேந்திரன்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர் - நிர்வாகம், தீவகக்கல்வி வலயம்)

இடம்
யா/வேலணை மத்திய கல்லூரி
சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி ஒன்றுகூடல் மண்டபம்)

காலம்
22.09.2012 சனிக்கிழமை காலை 8.30மணி

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழாக்குழுவினர்
தீவகக்கல்வி வலயம்

(பி/3462) (6.7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி
### சிவசம்பு கனகம்மா

மண்டைதீவில் 24.08.2012 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப ஒளி விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.09.2012) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 23.09.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது மண்டைதீவு இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியைக் கேட்டு நேரிலும் தொலைபேசியிலும், தந்தி மூலமும் எமக்கு ஆறுதல் தெரிவித்தோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் மரணச் சடங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்தோருக்கும்,சகல வழிகளிலும் உதவி புரிந்து ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*ஆதி வைரவர் வீதி,*
*06ஆம் வட்டாரம், மண்டைதீவு.*

குடும்பத்தினர்.

(23068)(5-6-7)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## தவிப்பினில் கழிந்திட்ட மூன்றாண்டுகள்



தோற்றம்
15★04★1949

மறைவு
24★09★2009

திதி 21.09.2012

அமரர்
### கந்தசாமி தங்கராசா
(பத்தர்)

கண்ணீரில் கரைந்ததப்பா ஆண்டுகள் மூன்று
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே அப்பா சென்றீர்கள்
நினைக்க நினைக்க மனம் வலிக்குதப்பா
அப்பா உங்களை நினைக்காத நாளில்லை
எப்ப அப்பா எங்களிடம் வரப் போகிறீங்கள்
உங்களைப் பார்க்க ஆசையாக இருக்குதப்பா
இவ் உலகில் நல்லவர் வாழ்வதெல்லாம்
குறுகிய காலம் என்ற உண்மைதனை
உணர்த்திச் சென்றீர்களோ அப்பா.

555, கே.கே.எஸ் வீதி,
மதவடிலேன்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(23075) (6.7.10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "யாரொடு நோவேன்...?"

**கோப்பாய் சண்முகம்**
கதையோடு செய்தி

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மணியிருக்கும். வையப் வைய ஊரடங்கும் இரவுப்பொழுதில் சனநடமாட்டம் குறைந்து கொண்டிருக்கிறது. யாழ். நகரை அண்டிய பகுதியொன்றின் காளி கோயிலுக்கு முன்னால் இளைஞர்கள் சிலர் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களுடைய பிரதேசம். அதனால் இரவில் குறிப்பிட்ட நேரம் அங்கு கூடி கதைப்பது வழக்கம். அன்றும் அப்படித்தான் அந்த கோயிலின் முன்னால் இருந்து கதைத்துக்கொண்டு இருக்கிறார்கள்...

அப்பொழுது திடீரென ஒரு யுவதியின் அவலக்குரல் அந்தப் பகுதியை உலுப்பியது. என்ன ஏது என்று தெரியாத அந்த இளைஞர்கள் சத்தம் வரும் பக்கம் பார்க்கிறார்கள். அவர்களுக்கு தெரிந்த ஒரு வீட்டில் இருந்து யுவதியின் அவலக் குரல் வருவதை அறிந்துகொள்கிறார்கள். அந்த வீட்டில் யுவதி இல்லை, ஆனால் அங்கே இருந்து யுவதியின் அவலக்குரல் கேட்பதால் ஏதோ விபரீதம் இடம்பெறுவதாக இளைஞர்கள் தங்களுக்குள் முடிவெடுத்துக்கொள்கிறார்கள்.

அந்தப் பிரதேசத்தில் யுவதியின் அவலச் சத்தம் எல்லா வீட்டிலுள்ளவர்களையும் எழுப்பியது. ஒவ்வொரு வீட்டுக்காரரும் வெளியே வராமல் தமது வீட்டினுள்ளே இருந்தவாறே வீதியைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வீதியால் செல்பவர்களில் சிலர் "என்ன சத்தம்?" என்று அந்த இளைஞர்களை வினவிவிட்டு நகர்கிறார்கள். இளைஞர்கள் ஒன்றுமே செய்ய முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். முடிவு எடுத்துக்கொள்ள முடியாத சூழலில் அந்த யுவதியின் அவலச் சத்தத்தை உற்றுநோக்குகிறார்கள்...

தன்னை காப்பாற்றுமாறு தொடர்ந்து கத்திக்கொண்டு நிற்கிறாள். ஏதாவது ஒன்று செய்யவேண்டும் என்ற உந்துதலின் முதலில் அந்தப் பகுதி கிராமசேவகரின் வீட்டுக்கு ஓடிச்செல்கிறார்கள். யுவதியின் அவலக்குரல் விடயத்தை கிராமசேவகரிடம் சொல்கிறார்கள். அந்தப் பகுதி கிராம சேவகர் ஒரு பெண்ணாக இருந்தும் இரவு என்று பாராமல் அந்த இளைஞர்களுடன் அவலக் குரல் வரும் யுவதியின் வீட்டுக்குச் செல்ல முடிவெடுக்கிறார்.

அந்தப் பகுதி கிராமசேவகர் துணிந்து வருவதைப் பார்த்ததும் இளைஞர்கள் உற்சாகத்துடன் செயற்பட்டனர். கிராம சேவகர் யுவதியின் அவலக்குரல் வரும் அந்த வீட்டுக்குள் நுழைகிறார். இளைஞர்களோ வீட்டு வாசலில் நிற்கிறார்கள். வீட்டாரை வெளியே கூப்பிட்டு என்ன சத்தம் என்று அவர்களிடம் கிராமசேவகர் வினவுகிறார். வீட்டுக்குள் இருந்து தாய், தகப்பன், இரு மகன்கள் உட்பட அவலக்குரலை ஏற்படுத்திய அந்த யுவதியும் வெளியே வருகிறார்கள். கிராமசேவகரும், அந்த இளைஞர்களும் உற்றுப்பார்க்கிறார்கள். அந்த வீட்டில் புதிதாக ஒரு யுவதி இருப்பதை அறிந்துகொள்கிறார்கள். கிராமசேவகரோ விட்டபாடில்லை. "யார் இந்த யுவதி"? என்று அந்த வீட்டுக்காரரைக் கேட்கிறார். வீட்டுக்காரரோ "எங்கள் உறவினர்" என்று பதில் சொல்கிறார்கள். வாக்குவாதம் தொடர்கிறது.

கடைசியில் யுவதியே "இது எங்கள் குடும்பப்பிரச்சினை நீங்கள் தலையிட வேண்டாம் முதலில் வெளியே போங்கள்" என்று கடும் தொனியில் சொன்னாள். அந்த யுவதிக்காக வந்த கிராம சேவகரும் இளைஞர்களும் தலைகுனிந்து வெளியேறுகிறார்கள். கிராம சேவகர் தனது வீட்டுக்கும், இளைஞர்கள் தாம் கூடும் கோயிலின் முன்றலிலும் போய் நிற்கிறார்கள்.

அந்த வீட்டில் புதிதாக வந்திருக்கும் யுவதி பற்றி ஒன்றுமே தெரியாத இளைஞர்கள் தங்களுக்குள் அறிந்தவற்றை கதைத்துக்கொண்டு நிற்கிறார்கள். யுவதியின் தலைமுடி குலைந்திருப்பதையும், அவளின் முகம் சிவந்திருப்பதையும் பார்த்த இளைஞர்கள் அந்த யுவதி மீது துன்புறுத்தல் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்திக்கொள்கிறார்கள். ஆனாலும் யுவதியே முன்வந்து ஒன்றுமே நடக்கவில்லை, இது எங்கள் வீட்டுப் பிரச்சினை என்று சொன்னதால் இளைஞர்கள் ஒரு குழப்ப நிலையில் நிற்கிறார்கள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த அந்தப் பிரதேசம் மீண்டும் அந்த யுவதியின் அவலக்குரலில் கண் விழித்தது. என்ன செய்ய இளைஞர்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்கிறார்கள். அந்த யுவதியே பிரச்சினை ஒன்றும் இல்லை என்று சொல்லும் போது எப்படி உதவமுடியும். யுவதியின் அவலக்குரல் கூடிக் கொண்டே செல்கிறது. பொறுமையிழந்த அந்த இளைஞர்கள் யுவதியின் அவலக் குரலை உற்று நோக்குகிறார்கள். அவளோ பணத்தைத் தந்தால் தான் சென்றுவிடுவேன் என்று சொல்வது அந்த இளைஞர்களின் காதில் கேட்கிறது. உடனே இளைஞர்கள் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர எண்ணி வீட்டுக்குள் இறங்குகிறார்கள். வீட்டாரை வெளியே அழைத்து மறுபடியும் வாக்குவாதம் காரசாரமாக இடம்பெறுகிறது.

இதற்கிடையில் அந்த யுவதியும் அந்த வீட்டு இளைஞனும் காரில் எங்கோ பறக்கிறார்கள். தப்பித்து ஓடுகிறார்களோ என்று ஒன்றுமே தெரியாமல் அந்த இடத்திலேயே நின்ற இளைஞர்களுக்கு ஆபத்து நெருங்கியது. காரில் சென்ற யுவதியும், இளைஞனும் பொலிஸாரைக் கூட்டிக்கொண்டு வந்தனர். பொலிஸார் வந்த வேகத்தில் யுவதிக்கு அந்த இளைஞர்கள் பிரச்சினை கொடுப்பதாக யுவதி சொன்ன வாக்கு மூலத்தை அடுத்து அந்த இளைஞர்களை கைது செய்து கொண்டுசென்றனர். உதவி செய்யப்போய் கைதாகிய இளைஞர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த இளைஞர்கள் சொல்வதை அங்கே வந்த பொலிஸாரும் காதில் வாங்க மறுத்தனர். அந்த யுவதி சொன்னதே சரியென்று ஒருதரப்பு வாக்கு மூலத்தை வைத்துக் கொண்டு பொலிஸ் செயற்பட்டது அந்த இளைஞர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

மறுநாள் கிராமசேவகரும், ஊர்ப்பெரியவர்களும் நடந்த சம்பவத்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தி அந்த இளைஞர்களை மீட்டு வந்தனர். பின்புதான் அந்த யுவதி பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவள் என்பது தெரியவந்தது. அந்த இளைஞர்களின் பெற்றோர்கள் துடிதுடித்துப் போனார்கள். தமது பிள்ளைகளைப் பற்றி அந்த பெற்றோருக்கு மட்டுமல்ல அந்த ஊருக்கே தெரியும். தண்டிக்கப்பட வேண்டியவர்கள் நிரபராதிகளாகவும், குற்றமிழைக்காதவர்கள் தண்டிக்கப்படுவதும் இந்த மண்ணில் புதிதான செய்தியல்ல.


பிரச்சினை இடம்பெறுகின்ற இடத்தில் வாய்பார்த்து நிற்காதே என்று பெற்றோர் சொல்வது சரிதான். ஆனால் அந்தப் பிரச்சினையில் பங்கெடுக்காமல் போனால் அதை விடக் கூடுதலான பிரச்சினைகள் இந்த மண்ணில் மையம்கொள்ளும்.

இதே பகுதியில் இதேபோன்ற இரு சம்பவங்கள் அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து இதே பகுதியில் தங்கியிருந்த குடும்பஸ்தர் ஒருவரால் யுவதி ஒருவர் பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. மேலும் இதே பகுதியில் வசிக்கும் ஒரு தகப்பனும், மகனும் சேர்ந்து ஒரு யுவதியை பிரச்சினைக்கு உள்ளாக்கிய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட நாளில் இருந்து யாழில் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன எமது மக்களுக்கான பாதுகாப்பு எவர் கையிலும் இல்லாத நிலையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டு போகுமே ஒளிய குறைய வாய்ப்பில்லை. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் "பூவா தலையா" என்ற பயம் இருந்ததால் எமது சமூகம் பண்பாட்டின் உயர் நிலையில் இருந்தது. இன்று அது சீரழிக்கப்படுகிறது. இது வேதனை தரும் விடயமாகும்.

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் சுந்தரலிங்கம்



காரைநகர், நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும், பழைய கண்டி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று (20.09.2012) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதமலரின் (தேவி) பாசமிகு கணவரும், திருமதி தனலட்சுமி (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி சரஸ்வதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் (பெரியதம்பி) மற்றும் திருமதி அன்னலட்சுமி (பேபி), சொர்ணலிங்கம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருமதி ராஜேஸ்வரி (லண்டன்), புவனேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஷ்வரி மற்றும் யோகநாதன் (யோகா டிரான்ஸ்போட் கொழும்பு - யாழ்.), திருமதி புஷ்பவதி, காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் நாகரத்தினம்(J.P), நடராசா, பிரேம்குமார், திருமதி கிருபா, திருமதி பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சுரேஸ்குமார் (லண்டன்), தனுஷா (லண்டன்), நந்தினி (லண்டன்), சுகன்யா, செல்வராணி, காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் உதயநாதன், பாஸ்கரன், கலா ஆகியோரின் சிறியதந்தையும், புஷ்பலிங்கம், நிமலன் (கிங் பெஷன் புடைவையகம் யாழ்.) ஆகியோரின் பெரியதந்தையும், பரம்சோதி (யூனியன் அசூரன்ஸ் யாழ். காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்), சாந்தகுமார், உமா, பிரியா, பிரசாத் (மருத்துவ பீடமாணவன், யாழ். பல்கலைக்கழகம்), சிவரூபன் (கனடா), கவிதா (கொழும்பு), கீரோஷ், சந்தோஷ், (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (23.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பழைய கண்டி,
காரைநகர்.

(23067) (45.6.7)

தகவல்:
திருமதி புனிதமலர் சுந்தரலிங்கம்
மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Asha 311



கைப்பேசி உற்பத்திகளில் கதாநாயகனாகத் திகழும் நொக்கியா நிறுவனத்தின் புதிய வெளியீட்டில் Asha 311 எனும் கைப்பேசியானது தற்போது புதிதாக இணைந்துள்ளது.

கோர்னிங் கொரில்லா கிளாஸ் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதும், 3 அங்குல அளவைக் கொண்டதுமான முழுமையான தொடுதிரைவசதியுடன் கூடிய இந்தக்கைப்பேசியானது GSM, GPRS, EDGE ஆகிய வலையமைப்புக்களில் செயற்படக்கூடியதாகக் காணப்படுவதுடன் HSDPA 3G சமிக்ஞைகளை 14.4Mbps வேகத்தில் உள்வாங்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 1GHz வேகம் கொண்ட CPU, 128MB அளவுடைய RAM ஆகியவற்றோடு, 140MB வரையிலான உள்ளக மெமரியையும் உள்ளடக்கியுள்ளதுடன் microSD கார்ட் மூலம் நினைவக வசதியை 32 GB வரை அதிகரிக்க முடியும்.



## எப்சன் களமிறக்கும் புதிய கண்ணாடி

பிரிண்டர்களைத் தயாரித்து வழங்குவதில் பிரபலமாக இருக்கும் எப்சன் நிறுவனம் அன்ட்ராய்டு தொழில் நுட்பத்தில் அமைந்த மூக்குக் கண்ணாடிகளை இந்தியாவில் களமிறக்கி இருக்கிறது. இந்தக் கண்ணாடிகளுக்கு மூவரியோ பிடி-100 என்று பெயர் சூட்டியிருக்கிறது.

முற்றிலும் புதிய தொழில் நுட்பத்தில் வந்திருக்கும் இந்த கண்ணாடிகள் வழியாக 5 மீற்றருக்கும் அதிகமான தொலைவில் இருப்பவற்றைக்கூட 80 இன்ச் அளவிற்குப் பார்க்க முடியும். இந்த மூக்குக் கண்ணாடிகள் அன்ட்ரொய்டு 2.2 இயங்குதளத்தில் இயங்குகின்றன. மேலும் இவை எப்சனின் எல்சிடி தொழில் நுட்பத்தையும் கொண்டிருக்கின்றன. மேலும் இந்த கண்ணாடிகள் 6 மணி நேர இயங்கு நேரத்தையும் கொண்டிருக்கின்றன.



யுடியூப் வீடியோக்களை இந்த கண்ணாடிகளில் நேரடியாகப் பார்க்கலாம். இதில் உள்ள மைக்ரோ எஸ்டி கார்டு 32GB மெமரியை சப்போர்ட் செய்யும். மேலும் இந்த கண்ணாடிகள் டோல்பி மொபைல் சரவுண்ட் ச்வுண்ட், டச் ட்ராக் பேட் மற்றும் 3D வசதிகள் போன்றவற்றையும் சப்போர்ட் செய்யும்.

## eBay க்கு புதிய லோகோ

கடந்த பதினேழு வருட காலமாக எளிமையானதும், விரைவானதுமான இணையம் மூலமான வியாபார சேவையை வழங்கிவரும் eBay ஆனது தற்போது முதன் முறையாக புதிய லோகோவினை அறிமுகப்படுத்தியுள்ளது.

வழமையான வர்ணங்களை மீண்டும் பயன்படுத்தியுள்ளதுடன் இப்புதிய லோகோ வெளியிடப்பட்ட நாளிலேயே சுமார் 100 மில்லியன் வரையான தடவைகள் குறித்த லோகோ அதன் பயனர்களால் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளதாக eBay நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் இந்நிறுவனமானது உலகெங்கிலும் 100 மில்லியன் பயனர்களையும், 25 மில்லியன் வரையான விற்பனையாளர்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





## iOS சாதனங்களுக்கு யூ டியூப் புதிய மென்பொருள்

இதுவரை காலமும் அனைத்து விதமான iOS சாதனங்களிலும் யூடியூப்பினை இலகுவாகப் பயன்படுத்தக்கூடியவாறு விசேட அப்பிளிக்கேசனை அப்பிள் நிறுவனம் தனது இயங்குதளத்துடனேயே வெளியிட்டு வந்தது.

ஆனால் தற்போது அறிமுகமாகும் iOS 6 பதிப்பில் குறித்த யூடியூப் அப்பிளிக்கேசனை தவிர்க்க அப்பிள் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதனால் iOS சாதனங்களின் ஊடாக யூடியூப். தளத்தைப் பயன்படுத்துபவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

எனவே இப்பிரச்சினைக்கு தீர்வாக யூடியூப். தனது பயனர்களுக்கென iPad, iPhone போன்ற அனைத்து விதமான iOS சாதனங்களிலும் நிறுவிப் பயன்படுத்தக்கூடிய வகையில் பிரத்தியேகமான அப்பிளிக்கேசன் ஒன்றினை வெளியிடத் தீர்மானித்துள்ளது.



## C.D தயாரிப்பை நிறுத்துகிறது சொனி

வயர்லெஸ் நெட்புக், டேப்ளட் பிசிக்கள் பெருகி வருவதால் சீடி, டிவிடி மற்றும் ப்ளூரே ட்ரைவ் தயாரிப்பை அடுத்த ஆண்டு தொடக்கம் முதல் நிறுத்தி விட ஜப்பான் சொனி நிறுவனம் முடிவெடுத்துள்ளது.

இவற்றுக்குப் பதிலாக ஸ்மார்ட் போன், ரேப்லெட் மற்றும் நெட்புக் கணினிகளைத் தயாரிக்கும் பணியில் சொனி ஈடுபடும். இந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் 420 தொழிலாளர்கள், வேறு பிரிவுக்கு மாற்றப்படுவார்கள். சொனி ஒப்டியார்க் என்ற தனிப்பிரிவு நிறுவனம் மூலம் சொனி இவற்றை இதுவரை தயாரித்து விற்பனை செய்து வந்தது.

அண்மைக் காலங்களில் ட்ரைவ் எதுவும் இல்லாத ஸ்மார்ட் போன்கள் மற்றும் ரேப்லெட்கள் அதிகம் புழக்கத்தில் இருப்பதால், சீடி, டிவிடி மற்றும் இவற்றிற்கான ட்ரைவ்கள் விற்பனை தொடர்ந்து குறைந்து வந்தது. மேலும் சிறிய நிறுவனங்கள் கூட இந்த ட்ரைவ்களைத் தயாரித்து விற்பனை செய்திடலாம் என்ற நிலை வந்ததனால் சொனி இந்த முடிவை எடுத்துள்ளது.


டிவிடி மற்றும் ஹை டெபனிஷன் டிவிடிக்களுக்குப் போட்டியாக, சொனி நிறுவனம் ப்ளூரே வகை தொழில் நுட்பத்தினைக் கொண்டு வந்து வெற்றி பெற்றது. 2006ஆம் ஆண்டில் அழித்து எழுதக்கூடிய ப்ளூரே ட்ரைவினைக் கொண்டு வந்தபோது, சொனியுடன் போட்டிபோட எந்த நிறுவனமும் இல்லாத நிலை இருந்தது.

ஆனால் ப்ளூ ரே ட்ரைவ் மக்களால் அவ்வளவாக விரும்பப்படாத நிலை ஏற்பட்டதாலும், டிவிடி ட்ரைவ் விலை 50 டொலருக்கும் குறைவாக இறங்கியதாலும், சொனி இந்தப் பிரிவில் இருந்து முற்றிலுமாக தன்னை விலக்கிக் கொள்ளும் முடிவை எடுத்துள்ளது. ஆனாலும் ஓடியோ சாதனங்களுக்கான ஆப்டிகல் ட்ரைவினைத் தொடர்ந்து சொனி தயாரிக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

## பூப்பறிக்கும் ரோபோ

மனிதனின் எந்தவொரு நடவடிக்கையையும் இலகுவாக்கி, எளிதான முறையில் செய்வதற்காகக் கண்டறியப்பட்ட ரோபோக்கள் இன்று ஒவ்வொரு துறையிலும் பல புதிய பரிணாமங்களுடன் வளர்ச்சி கண்டு வருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாகத் தற்போது மென்மையான பூக்களையும் இலகுவாகவும், எவ்விதமான சேதமின்றியும் பறிப்பதற்காக விசேடமான ரோபோக் கைகளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். மென்மையான தன்மை கொண்ட இக்கைகள் மீள்தன்மை கொண்டவையாகவும் காணப்படுவதனாலேயே பூக்களுக்கு சேதம் விளைவிக்காது அவற்றை மென்மையாகப் பற்றியவாறு பறிக்கின்றன.



## கீரையில் இருந்தும் இனி மின்சாரம்

உணவாக மட்டும் கருதப்பட்ட கீரையிலிருந்து தற்போது உயிரியல் கலப்பு (Bio & Hybrid) சோலர் செல்கள் தயாரிக்க முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள வென்டர்பில்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், பசளிக் கீரையில் ஒளிச்சேர்க்கைக்கு உதவும் புரதம் சூரிய ஒளியை மின் வேதியியல் ஆற்றலாக மாற்றும் தன்மை கொண்டது எனவும், இதை சிலிக்கனுடன் சேர்த்து சோலார் செல்களை தயாரிக்கலாம் என்றும் தெரிய வந்துள்ளது.

புவியில் ஒட்சிசனுக்கு அடுத்து அதிகம் காணப்படும் கனிமங்களில் சிலிக்கானும் ஒன்று. இது ஒரு அல்லுலோகம். குறை மின் கடத்தி கருவிகளில் இது பயன்படுகிறது. போட்டோ சிஸ்டம் 1 என்ற சிறப்பு புரதம் பசளிக் கீரையில் உள்ளது. இதனை சிலிக்கனுடன் சேர்த்து பயோஹைப்ரிட் என்ற சோலர் செல்லை தயாரித்தனர். இது மற்ற எலக்ட்ரோனிக்ஸ் பொருள்கள் தயாரிப்பதை விட குறைந்த செலவே ஆகும். மேலும் சில தாவரங்கள் கீரைக்கு ஒப்பான புரதங்களைப் பெற்றுள்ளதால், பயோ ஹைப்ரிட் சோலர் செல்கள் தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்களையும் எளிதில் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.21

வடமாகாணத்தைச் சேர்ந்த வெளிமாவட்ட தனியார் பஸ் உரிமை யாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி பழைய வைத்தியசாலை முன்பாகவுள்ள நாமல் ராஜபக்ஷ இணைப்புக் காரியாலத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் அனைத்து வெளிமாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-14)

## இலாபத்தில் இயங்கும் நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வடமராட்சி, செப்.21

நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 6 மாதங்களாக இலாபத்தில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருட ஆரம்பத்தில் புதிய இயக்குநர் சபை சங்க நிர்வாகத்தைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து சங்கத்தின் பொதுமுகாமையாளர், கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வழங்கி வரும் ஒத்துழைப்பினால் சங்கம் இலாபத்துடன் இயங்கி வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் மாதாந்த இலாபமாக 3 அல்லது 4 லட்சம் ரூபா கிடைத்து வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (3-8)

# பௌத்த நிலையத்துக்கு அடிக்கல் நட என்ன அருகதையுள்ளது மஹிந்தவுக்கு?

### இப்படிக் கேட்கிறார் தொல் திருமாவளவன்



பௌத்த கல்வி நிலையத்தை அமைப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அருகதையில்லை-என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மத்திய பிரதேச மாநிலத்தில் சாஞ்சி அருகே பௌத்த கல்வி மையம் ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல் நடும் விழாவில் பங்கேற்பதற்காக இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு வரவுள்ளார்.

தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலையை அரங்கேற்றி, இலட்சக் கணக்கில் தமிழர்களைக் கொன்று குவித்த போர்க் குற்றவாளி இலங்கை ஜனாதிபதிக்கு எந்த உயிருக்கும் சிறு தீங்கும் இழைக்கக் கூடாது என்று சொன்ன புத்தர் பெயரிலான கல்வி மையத்திற்கு அடிக்கல்நடும் விழாவில் பங்கேற்க எந்த அருகதையும் இல்லை.

ராஜபக்ஷவின் வருகைக்கு எதிராக அனைத்து இயக்கங்க ளும் போராடி வருகிற நிலையில், ஒட்டுமொத்தத் தமிழினத்தின் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் விதமாக சேலத்தில் விஜயராஜ் என்ற இளைஞர் தீக் குளித்து தன் உயிரைப் போக்கியுள்ளார். இந்தநிலையில் ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைத்த பாரதிய ஜனதா கட்சியையும், அனுமதியளித்த காங்கிரஸ் அரசையும் கண்டித்தும், ராஜபக்ஷவின் வருகைக்கு இந்திய அரசுதடை விதிக்க வேண்டும் என்பதை வலி யுறுத்தியும், ராஜபக்ஷ வருகை தரும் இன்று காலை 10 மணியளவில் சென்னையில் இலங்கைத் தூதரகத்தை விடுதலைச் சிறுத் தைகள் முற்றுகையிடும் போராட்டம் எனது தலைமையில் நடை பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனஅந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# சங்கானையில் மதுவெறிக் கூட்டம் நாளாந்தம் பெரும் தொல்லை

### தேர் முட்டி மண்டபத்திலும் அட்டகாசம்

சங்கானைப் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

ஆலயங்கள் என்றும் பாராமல் இரவு 7 மணிமுதல் 9மணிவரை மது அருந்தும் இவர்களால் பாதசாரிகள் உட்பட அயலில் உள்ளவர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள். சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தின் தேர்முட்டி மண்டபத்தில் தினமும் இரவு நேரத்தில் மது அருந்துவது மட்டுமல்லாமல், குடித்துவிட்டு வெற்றுப் போத்தல்களை உடைத்து வீசிவிட்டு செல்கின்றனர். இதனைத் தட்டிக் கேட்ட ஆலயக் குருக்களை அச்சுறுத்துவதும், தரக் குறைவான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதும் தொடர்ந்து நடைபெற்று வருவதால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக ஆலயக் குருக்கள் தெரிவிக்கின்றனர். இடையிடையே இந்தப் பகுதியில் உள்ள மதுபான நிலையச் சுற்றாடலில் மானிப்பாய் பொலிஸார் சிவில் உடையில் திடீர் நடவடிக்கை எடுத்து சிலரைப் பிடித்துச் செல்கின்றனர். ஆனாலும் இவர்களின் தொல்லை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இதேவேளை, சங்கானையில் அமைந்துள்ள ஒரு கோழிப்பண்ணையில் கடந்த திங்கட்கிழமை பகல் 2.30 மணியளவில் நண்பர்களுடன் கூடி மது அருந்திய வர்கள் அந்தப்பண்ணை அமைந்த வீதியில் செல்வோரைக் கெட்ட வார்த்தைகளால் தூற்றியதோடு அவர்களுக்குள் அடிபட்டு காயங்களையும் ஏற்படுத்திக் கொண்டனர். பண்ணை யைச் சுற்றி உள்ள குடும்பங்கள் இதனால் பல அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டிய நிலைக்கு ஆளாகினர். இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (3-29)




ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கும் எதிராக ஜாதிக ஹெல உறுமயவினால் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## கர்மத்தைப் போக்க தர்மம் செய்வோம்

கர்மத்தைப் போக்க தர்மம் ஒன்றே உகந்தவழி. ஆதலால் இயன்றளவு முடியுமானவரை மனிதன் தர்மம் செய்து வாழப்பழகிக் கொள்ளவேண்டும். பஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டு அதனைப் பாவமன்னிப்பு மூலம் போக்க முடியுமா?

நாம் செய்த வினைகளை நாமே அனுபவித்தாக வேண்டும். இதைத்தான் இந்து சமயம் உறுதியாகக் கூறுகின்றது. வினை விதைத்தவன் வினைதான் அறுக்க முடியும். தினை அறுக்க முடியாது. இவைகளில் இருந்து விடுபட நன்மையான காரியங்களை நாடுங்கள். தான தர்மங்கள் செய்வதில் தாமதி யாதீர்கள். தர்மம் தக்க சமயத் தில் வந்து தலை காக்கும். தர்ம காரியங்களை இன்றே, அதை நன்றே செய்வோம்.

இறந்தபின் வரப் போகும் புகழுக்கு ஆசைப்பட்டு அலையாதே. நீ இறந்தபின் உன்னைப்பற்றி யார் என்ன சொன்னாலும் உனக்கு என்ன? உன் காதுக்கு அது எட்டாது.

நன்றி: ஞானச்சுடர்

ஞானக்கதிர்

# சமையல் போட்டி முடிவுகள்

உதயன் அனுசரணையுடன் யாழ். போதனா வைத்திய சாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் நடத்திய மாபெரும் சமையல் போட்டி கடந்த 15 ஆம் திகதி யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

300 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

சைவஉணவு- முதலாம் இடம்- உரைப்படை- தாரிணி ஜானகிராமன், இரண்டாம் இடம்-பயற்றம் ரொட்டி- துவாரகா சிவனேசன், மூன்றாம் இடம்- பயற்றம் புரியாணி- கிருபனா பிரேமகுமார்,

அசைவ உணவு- முதலாம் இடம்- முட்டைக் கலவைத் தோசை- ஜனார்த்தனி கேசவன், இரண்டாம் இடம்- இறைச்சித் துவையல்-சிவானந்தராணி துரைசிங்கம், மூன்றாம் இடம்- மசாலா ரொட்டி- கோமதி சந்திரகுமார்,

பானம்- முதலாம் இடம்- பழப்பால் பானம்- திவ்வியா சத்திய சீலன், இரண்டாம் இடம்- சோயாக்கூழ்- ஆனந்தரூபி பௌற் விமலதாஸ், மூன்றாம் இடம்- புரத மரக்கறி கூழ்-திரோஜினி ரவீந்திரன்,

உலர் உணவு- முதலாம் இடம் -புரத பிஸ்கட்- கஜானி தேவதாஸ், இரண்டாம் இடம்- கலப்பு புரத உருண்டை- சறோஜினி சண்முகநாதன், மூன்றாம் இடம் - தானியரம்- கோமதி சிவதாஸ்,

சிற்றுண்டி சைவம் - முதலாம் இடம்- புரத அடை டொலறோசா ஞானப்பிரகாசம், இரண்டாம் இடம்- முருங்கையிலை கட்லட்- கம்சாயினி கணேசலிங்கம், பொலரோசா ஞானப் பிர காசம், மூன்றாம் இடம்- யமகா சிற்றம்பலம் சிவஞானராஜா,

சிற்றுண்டி அசைவம்- முதலாம் இடம்- துவரை இறால் கூழ்- ரத்தினசபாபதி கேசவன், இரண்டாம் இடம்- கதம்ப இறைச்சி, மூன்றாம் இடம் -மீன் கிச்சடி- ஜனார்த்தனி கேசவன்,

இந்தப் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்ட உணவுகள் காபோவைதரேற்று குறைந்த, இனிப்பு வகைகள் சேர்க்காத, பொரிக்காத ஆரோக்கியமான உணவுகளாகும். இவை உடல் எடை அதிகரித்தவர்களுக்கும், நீரிழிவு நோயாளர்களுக்கும், குருதி அமுக்கம், இதயநோய் உடையவர்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் சிறுவர்களுக்கும் என யாவருக்கும் பொருத்தமான உணவுகளாகும்.

மேற்படி போட்டியில் முந்நூறுக்கும் அதிகமானோர் ஈடுபட்டு நூற்றி இருபத்தேழு உணவு வகைகளைத் தயார் செய்தனர். பொதுமக்களாலும் நடுவர்களாலும் வழங்கப்பட்ட 2400 ற்கும் அதிகமான வாக்குகளின் அடிப்படையில் வெற்றி யாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு 180 000 ரூபா பெறுமதியான பரிசில் பகிர்ந்தளிக்கப்படும். அத்துடன் 109 பேருக்கு தலா 2000 ரூபா பெறுமதியான பரிசிலும் சான்றிதழும் வழங்கப் படும். முதல் ஆறு இடங்களைப் பெற்ற போட்டியாளர்களின் உணவுக் குறிப்புகள் புத்தமாக அச்சிட்டு வெளியிடப்படும். புத்த வெளி யீடும் பரிசில் வழங்கும் நிகழ்வும் விரைவில் நடத்தப்படும்.

இந்தப் போட்டியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இது வரையில் பாவனையில் இல்லாத அதி உச்ச ஊட்டச் சத்துள்ள பாது காப்பான இந்த உணவு வகைகள் எமது பிரதேசத்தின் சுகாதார நிலை யில் பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்துமென எதிர்ப்பார்க் கப்படு கிறது. புதிதாக அறிமுகப்படுத்தப்படும் இந்த 36 உணவு களையும் நாளாந்த உணவில் சேர்த்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம். (3)

# வைத்தியசாலைகளில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களைப் பொறுப்பேற்க விருப்பம் தெரிவிப்பு

### முஸ்லிம் இறுதிக் கிரியைகள் சேவைத்தாபனம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

அரச வைத்தியசாலைகளில் உயிரிழக்கும் அடையாளம் காணப்பட்ட முஸ்லிம்களின் சடலங்களை பொறுப்பேற்பதற்கு உறவினர்கள் முன்வராத சந்தர்ப்பங்களில் அந்த உடல்களுடைய இறுதிக் கிரியைகளைத் தாமதம் இன்றிச் செய்வதற்கு இலங்கை முஸ்லிம் இறுதிக் கிரியைகள் சேவைத்தாபனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை மத்திய சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி பாலித்த மகிபால பொதுச் சுற்றறிக்கை மூலம் சகல அரச வைத்தியசாலைகளின் நிறுவனத் தலைவர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

மேலும் அரச வைத்தியசாலைகளில் மகப் பேற்றுக்காக அனுமதிக்கப்படும் முஸ்லிம் தாய்மார்களுக்கு குழந்தை பிறக்கும்போது இறந்தால் இறுதிக் கிரியைகள் செய்வதற் காகவும் மேற்படி குறித்த தகவலை இலங்கை முஸ்லிம் இறுதிக்கிரியைகள் சேவைத் தாபனத்தின் தலை வர் தேசகீர்த்தி அல்ஹாஜ் எம்.எம்.எம். முஸ்தி, இல 765/174, டனிஸ்ரர் த சில்வா மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (வ-50)

## முன்னால் சென்ற வாகனத்தை மோதியது டிப்பர்

வேகமாக வந்த டிப்பர் வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த மற்றொரு வாகனத்தை மோதித் தள்ளியது. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை எழுதுமட்டுவாழ் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

விபத்தில் இரண்டு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன. தெய்வாதீனமாக வாகனங்களில் பயணித்தவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. (ம-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் உறுதியோடு...





வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தால் நடத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் முதல் முறையாக இந்த வருடம் விசேட தேவையுடையோருக்கிடையேயான போட்டிகளும் நடத்தப்பட்டன. ஓட்டப் போட்டி, குண்டெறிதல், முச்சக்கரவண்டி ஓட்டம் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்தப் போட்டிகளில் ஆர்வத்துடன் விசேட தேவையுடைய பலர் கலந்து கொண்டனர். சமூகத்தில் இருந்து விசேடதேவையுடையோரை ஒதுக்கி வைக்காமல், அவர்களையும் சமூகத்தின் பிரதான கூறுகளாக இணைக்க இத்தகைய முயற்சிகள் துணைபுரியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(ங-23)

# சிநேகபூர்வக் கிரிக்கெட்டில் ஒலிம்பிக்ஸ் அபார வெற்றி

திருகோணமலை, செப்.21

திருகோணமலை யங் ஒலிம்பிக்ஸ் கழகத்துக்கும் வேல்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான 40 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வேல்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த கிரிக்கெட் ஆட்டத்தில், யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 39.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் டிரோன் 27 ஓட்டங்களையும், நரேஷ்குமார் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வேலு விஜயானந்த் 37 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், செ.பிரசாத் 31 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத்துடுப் பெடுத்தாடிய வேல்ஸ் விளையாட்டுக்கழகம், வெற்றி இலக்கை நம்பிக்கையுடன் துரத்தத் தொடங்கியது. எனினும் ஒலிம்பிக்ஸ் அணியின் ஹொகானும், டிலானும் கூட்டணி அமைத்து பந்து வீச்சில் பதிலடி கொடுத்தனர். இதனால் இலக்குகளை வேல்ஸ் அணி அடுத்தடுத்து பறிகொடுத்தது. இறுதியில் 39.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்த வேல்ஸ் அணி 180 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. இதனால் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. வேல்ஸ் அணியின் சார்பில் வ.சந்துரு 34 ஓட்டங்களையும், எஸ்.தீபன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஒலிம்பிக்ஸ் அணியின் டி.ரொஹான் 14 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் ஆர்.டிலான் 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றி வெற்றிக்கு வழிசமைத்தனர். (ங)

## அசத்தியது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், செப். 21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற பரபரப்பான இந்த ஆட்டத்தில், தனது முழுத்திறமையையும் வெளிப்படுத்தியது சென். அன்ரனிஸ் அணி. பதிலடி கொடுத்த சென். மைக்கல் அணி இறுதி நேரத்தில் தன் போராட்டத்தை கைவிட்டதால், சென். அன்ரனிஸ் அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு -

பி.ப. 4 மணி

கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

* * *

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், ஏ.சி.ஏ.பி. திட்டத்தின் ஊடாக சேவாலங்கா மன்றத்தின் அனுசரணையுடன், மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் நெறிப்படுத்தலுடன், மன்னார் பெரியபண்டிவிரிச்சான் 'முத்துக்கள் மூன்று' புகழ் வள்ளுவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. ஆரம்ப நிகழ்வுகள் வள்ளுவர் விளையாட்டுக்கழக மைதானத்திலும், மரிய கொறற்றி விளையாட்டுகழக மைதானத்திலும் இடம் பெறவுள்ளன.

மேற்படி சுற்றுப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 45 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ங-23)

## வள்ளுவர் வி.க.வை வீழ்த்தி ஞானம்ஸ் அரையிறுதியில்

வடமாகாண ரீதியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டத்தில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

நேற்று முன்தினம் புதன்கிழமை தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த அரையிறுதிப்போட்டியில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியும், வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் விளையாட்டுக் கழக அணி அதிரடியாக ஆடியபோதும் இலக்குகளை சீரான இடைவெளியில் இழந்தது.இதனால் அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களையே பெற்றது.

வள்ளுவர் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் பிரகாசித்த ஜெசி 22 ஓட்டங்களையும், சுபா 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஞானம்ஸ் வீரர் குணசீலன் மூன்று இலக்குகளைக் கைப்பற்றினார்.

35 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி. அந்த அணியின் வீரர்கள் வள்ளுவர் அணியின் பந்துகளை சிதறடித்து,அதிரடியாக ஆடினர். இதனால் 7.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அந்த அணி 2 இலக்குகளை மட்டும் இழந்து 68 ஓட்டங்களைப்பெற்று 5 இலக்குகளால் வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் ஞானம்ஸ் அணியின் ரமேஸ் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்துவீச்சில் வள்ளுவர் அணியைச் சேர்ந்த சதீஸ், சாந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை சரித்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஞானம்ஸ் அணி, குறித்த மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றது. (ங-23)

### பிரான்ஸிஸ் வெற்றிக்கிண்ண உதைபந்து

# பரபரப்பான இறுதிப் போட்டி இன்று

**பாஷையூர் சென். அன்ரனிஸுடன் மோதுகிறது மயிலங்காடு ஞானமுருகன்**







யாழ்ப்பாணம், செப்.21

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பல் 3.30 மணியளவில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்டத் தொடர்களில் குறித்த இரு அணிகளும் தங்களது பலத்தை நிரூபித்திருந்தன. மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திய தொடரில் மயிலங்காடு ஞானமுருகனும், புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்துத் தொடரில் பாஷையூர் சென். அன்ரனிஸும் வெற்றிக்கிண்ணங்களை தமதாக்கியிருந்தன. [illegible] வதால் போட்டியில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது என்று ரசிகர்கள் தெரிவிக்கின்றனர்.

இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக இளவாலை மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருள்தாஸ், கௌரவ விருந்தினர்களாக இளவாலை வடமேற்கு கிராமசேவகர் அன்ரனி றோய், பூநகரி பிரதேச சபை நிர்வாக உத்தி [illegible] சிவலிங்கம் [illegible] கலந்து கொள்ளவுள்ளனர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஆட்ட நாயகன் கலிஸ்

# வென்றது தென்னாபிரிக்கா வெளியேறியது சிம்பாப்வே



சிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இலகுவாக 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியைத் தழுவிய சிம்பாப்வே அணி தொடரிலிருந்து வெளியேறியது.

நான்காவது உலகக் கிண்ண 'ரி-20' கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகின்றது. இதில் அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆபிரிக்க கண்டத்தின் தென்னாபிரிக்க அணி மற்றும் சிம்பாப்வே அணிகள் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இலங்கையுடனான முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்த சிம்பாப்வே அணி நேற்றைய ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

தென்னாபிரிக்க அணியின் முதலாவது பந்துப் பரிமாற்றத்தை ஸ்ரெய்ன் வீசித் தொடக்கி வைத்தார். ஒரு வாறு சமாளித்த சிம்பாப்வே அணியால் ஆட முடியவில்லை. அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே சிம்பாப்வேயின் ஆட்டம் தடுமாறத் தொடங்கியது. மோர்னி மோர்கல் தனது அடுத்தடுத்த பந்துப் பரிமாற்றங்களில் தொடர்ந்து இரண்டு இலக்குகளைச் சாய்க்க சிமப்பாப்வே அணி ஆரம்பத்திலேயே முன்வரிசையை இழந்தது.

முதல் மூன்று துடுப்பாட்ட வீரர்களையும் 16 ஓட்டங்களுக்குள் இழந்த நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணிக்கு எர்வின், மர்ஷிகனேரி இணை சிறப்பான ஆட்டத்தை வழங்கியது. எர்வினின் அதிரடி ஆட்டம் ஓரளவு சிம்பாப்வேக்கு கைகொடுத்தது. இவர்களது இணைப்பு சிம்பாப்வே அணியை கௌரவமான இலக்கை நோக்கி நகர்த்திச் சென்றது.

இந்த இணை தம்மை ஸ்திரப்படுத்தி அதிரடியாக ஆட முற்படுகையில் கலிஸின் வேகம் பிரித்து வைத்தது இவர்களை. 35 ஓட்டங்கள் அதிகபட்ச இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டது. மர்ஷிகனேரி வெளியேற தொடர்ந்து நுழைந்த சிக்கம்புரா முதலாவது பந்தில் ஆட்டமிழக்க 'ஹற்றிக்' வாய்ப்பு கலிஸுக்கு கிடைத்தது. இருந்தும் அடுத்த பந்தில் இலக்குச் சரிக்கப்படவில்லை.

அதன் பின்னர் எர்வின் சுமாரான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இறுதிக் கட்டத்தில் எர்வினும் ஆட்டமிழக்க சிம்பாப்வேயின் நிலைமை மோசமானது. இறுதியில் சிம்பாப்வே அணி தட்டுத்தடுமாறி 93 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. தென்னாபிரிக்க அணியின் சகல பந்து வீச்சாளர்களும் அசத்தலாகப் பந்து வீசியிருந்தனர்.

பதிலுக்கு மிகச் சுலபமான இலச்க்கை விரட்டத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்தில் அம்லா அதிரடியாக ஆடினார். அதன் பின்னர் லெவி தனது வழமையான பாணியில் அதிரடியாக ஆடத் தொடங்க தென்னாபிரிக்காவின் வெற்றி உறுதியானது. இறுதி வரையில் இலக்கு எதனையும் பறிகொடுக்காமல் அதிரடியாக ஆடிய தென்னாபிரிக்க அணி வெற்றியிலக்கை 13 பந்துப் பரிமாற்றங்களிலேயே எட்டியது.

சிறப்பாக அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய லெவி 43 பந்துகளில் தனது இரண்டாவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். மிக இலகுவான வெற்றியை தென்னாபிரிக்க அணி பெற்றுக் கொள்ள , சிம்பாப்வே அணி தான் விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது. ஆட்டநாயகனாக பந்து வீச்சில் அசத்திய கலிஸ் தெரிவானார்.

சிம்பாப்வே தொடரிலிருந்து வெளியேறியதன் மூலம் இலங்கை அடுத்த சுப்பர் - 8 சுற்றுக்கு தகுதி பெற்றது. (5)

## 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

சிம்பாப்வே எதிர் தென்னாபிரிக்கா நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா
முடிவு: தென்னாபிரிக்கா 10 இலக்குகளால் வெற்றி ஆட்டநாயகன்: கலிஸ்

சிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மஷகஷ்டா | c லெவி b அல்பி மோர்கல் | 06 | 17 | 1 | 0 |
| சிபண்டா | b மோர்னி மோர்கல் | 00 | 03 | 0 | 0 |
| ரெயிலர் | c டீ வில்லியர்ஸ் b மோர்னி மோர்கல் | 04 | 04 | 0 | 0 |
| எர்வின் | c டீ வில்லியர்ஸ் b கலிஸ் | 37 | 40 | 4 | 0 |
| மர்ஷிகனேரி | c பீற்றர்ஸன் b கலிஸ் | 11 | 18 | 0 | 0 |
| சிக்கும்புரா | lbw b கலிஸ் | 00 | 01 | 0 | 0 |
| கீறிமர் | c டீ வில்லியர்ஸ் b கலிஸ் | 06 | 11 | 0 | 0 |
| உத்சேயா | c டீ வில்லியர்ஸ் b ஸ்ரெய்ன் | 05 | 09 | 0 | 0 |
| பிரைஸ் | ஆட்டமிழக்கவில்லை | 07 | 06 | 1 | 0 |
| ஜார்விஸ் | ஆட்டமிழக்கவில்லை | 09 | 11 | 0 | 0 |
| விற்றோரி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | | 08 | · | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெய்ன் | 4 | 09 | 1 | 0 |
| மோர்னி மோர்கல் | 4 | 16 | 2 | 0 |
| அல்பி மோர்கல் | 4 | 26 | 1 | 0 |
| போத்தா | 3 | 16 | 0 | 0 |
| பீற்றர்ஸன் | 1 | 08 | 0 | 0 |
| கலிஸ் | 4 | 15 | 4 | 0 |

TOTAL - 93/8 (20)

1-2 (சிபண்டா), 2-6 (ரெயிலர்), 3-16 (மஷகஷ்டா), 4-51 (மர்ஷிகனேரி), 5-51 (சிக்கம்புரா), 6-60 (கீறிமர்), 7-75 (உத்சேயா), 8-87 (எர்வின்)

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| லெவி | ஆட்டமிழக்கவில்லை | 50 | 43 | 6 | 0 |
| அம்லா | ஆட்டமிழக்கவில்லை | 32 | 33 | 3 | 0 |
| கலிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| டீவில்லியர்ஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| டுமினி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பெகர்டின் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அல்பி மோர்கல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பீற்றர்ஸன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| போத்தா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்ரெய்ன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மோர்னி மோர்கல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | | 12 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஜார்விஸ் | 3 | 20 | 0 | 0 |
| விற்றோரி | 2 | 21 | 0 | 0 |
| பிரைஸ் | 3 | 19 | 0 | 0 |
| உத்சேயா | 2 | 13 | 0 | 0 |
| கிறீமர் | 2 | 10 | 0 | 0 |
| மர்ஷிகனேரி | 0.4 | 03 | 0 | 0 |

TOTAL - 94/0 (12.4)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்




# நாங்கள் திறமையாக விளையாடவில்லை

## உண்மையை ஒப்புக் கொள்ளும் டோனி

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி ஓரளவான திறமையை வெளிப்படுத்திய போதிலும், இது மிகச்சிறப்பான திறமை வெளிப்பாடு அல்ல என்று இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்த போதிலும் ஆட்டத்தில் எதிர்பார்த்தளவு ஆதிக்கத்தை எங்களால் வெளிப்படுத்த ஆப்கானிஸ்தான் சந்தர்பம் வழங்கவில்லை. துடுப்பாட்டத்தில் ஆரம்ப இலக்குகளை இழந்த அந்த அணி, பந்துவீச்சிலும் போதிய அழுத்தத்தை வழங்கியிருக்கவில்லை. இந்த ஆட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, 'ரி-20' சர்வதேசப் போட்டியில் எதிரணியின் ஒரு பந்துவீச்சாளர் அல்லது துடுப்பாட்ட வீரர் சிறப்பான திறமையை வெளிப்படுத்தினாலேயே போட்டியின் முடிவு மாற்றமடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்தார்.

எங்களது திறமை வெளிப்பாடு சிறப்பானது என்ற போதிலும் மிகச்சிறப்பானதல்ல எனவும் தெரிவித்தார். ஏராளமான முன்னேற்றங்கள் அணியில் தேவைப்படுவதாகத் தெரிவித்த டோனி, 4 பந்துவீச்சாளர்களுடன் விளையாடினாலென்ன, 5 பந்துவீச்சாளர்களுடன் விளையாடினாலென்ன குறித்த நாளில் அவர்கள் [illegible] எனத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் [illegible] அவ்வப்போது சிறப்பான துடுப்பாட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் முக்கியமான பிடியெடுப்புக்களைத் தவறவிட்டதன் காரணமாக அவ்வணி அழுத்தத்திற்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது . (5)

# உதயன்

## தினம் ஒரு பரிசு

### கேள்வி –4

நடப்பு 'ரி–20' உலகக் கிண்ணத் தொடரில் முதலாவது அரைச்சதம் அடித்த வீரர் யார்?

..........................................

..........................................

பெயர்–..........................................

முகவரி–..........................................

..........................................

உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 22.09.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி. சாவகச்சேரி, கரடிப்போக்குச் சந்தி. வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை. சிவசாந்தி தேநீர்ச்சாலை- தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில்-கூப்பனை இடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேதனையான காலங்களைக் கடந்துவிட்டேன்

**தனது சக வீரர்கள் போட்டியில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் போது அதைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கும் போது மிகுந்த கடினமாக இருக்கும்**

எனது வாழ்வில் கடந்த சில மாதங்கள் வேதனையான காலப் பகுதியாக இருந்தது. இன்று அவற்றைக் கடந்து புதிய உலக சாதனையை படைத்ததையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறு இலங்கையின் மாஜாயால சுழற் பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸ் தெரிவித்தார்.

கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றியிருக்காத இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸ், சிம்பாப்வே அணிக்கெதிராக அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஆட்டத்தில் மிகச்சிறப்பான திறமை வெளிப்பாட்டை மேற்கொண்டிருந்தார். அந்த ஆட்டத்தில் 8 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.

இந்த நிலையில் தனது திறமை வெளிப்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அஜந்த மென்டிஸ், அது குறித்து மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

ஆட்டங்களில் பங்குபற்ற முடியாத கடந்த காலங்கள் மிகுந்த வேதனையாக அமைந்திருந்ததாகத் தெரிவித்த அஜந்த மென்டிஸ், தனது சக வீரர்கள் போட்டியில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் போது அதைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கும் போது மிகுந்த கடினமாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

போட்டியில் பங்குபற்றியிருக்காத 9 மாதங்களில் பெரும்பாலான மாதங்களில் தான் கிரிக்கெட் பந்தைத் தொட்டிருக்கும் வாய்ப்பே கிடைத்திருக்கவில்லை எனத் தெரிவித்த அஜந்த மென்டிஸ், எனினும் அந்தக் காலத்தில் ஏனைய பயிற்சிகளையும், வீடியோக்களையும் பார்த்தோடு, சில கிரிக்கெட் சம்பந்தமான பகுப்பாய்வுகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

தனது பந்துவீச்சு முறை காரணமாகவே தனது முதுகு உபாதைகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக தனது பந்து வீச்சு முறையை மாற்ற வேண்டியிருந்ததாகவும் தெரிவித்த அஜந்த மென்டிஸ், முதலாவது ஆட்டத்தில் தனது பெறுபேறுகள் குறித்துத் திருப்தியடைவதாகவும் தெரிவித்தார். (5)


FREE **Training**
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP
(சி/3463)

IIS CITY CAMPUS இல் இணைந்து புத்தம் புதிய TOSHIBA i3 LAPTOP கணனி ஒன்றினை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்.
இச்சலுகை OCTOBER 15 வரை மட்டுமே





edexcel BTEC
HND in COMPUTING in CIVIL ENGINEERING in QUANTITY SURVEYING in BUSINESS MANAGEMENT
2012 September பிரிவில் மேற்குறிப்பிட்ட HND கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் TOSHIBA i3 Laptop கணனி ஒன்றினை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்
மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900
(சி/3467)
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

## பரிசளிப்பு விழாவும் சிரேஷ்ட ஆசிரியர் கௌரவிப்பும்
இடம் : றோயல் அக்கடமி, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
காலம் : 22.09.2012 சனிக்கிழமை பி.ப 2.30 மணி
தனியார் கல்வி நிறுவனங்களில் நீண்டகாலமாக கற்பித்தல் பணிபுரிந்து யாழ். மாவட்ட மாணவர்கள் மாவட்ட, தேசிய மட்டங்களில் சாதனைகள் பல புரிய வழிகாட்டியவர்களும் தற்போது எமது நிறுவனத்தில் கற்பித்துக் கொண்டிருப்பவர்களுமான ஆசிரியப் பெருந்தகைகள்





மேற்படி ஆசியிரார்களிடம் கல்வி கற்ற பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
றோயல் அக்கடமி யாழ் – நல்லூர்
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்


## மரண அறிவித்தல்

### மாசிலாமணி மரியாம்பிள்ளை (சுதி மரியான்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி மரியாம்பிள்ளை (சுதி மரியான்) கடந்த (18.09.2012) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

(22.09.2012) சனிக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு புனித, கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மாசிலாமணி சேவியர் மாஸ்ரர்

(23110)(8.14)


## மணமகன் தேவை
1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(3.6.7)

CIMA கல்வி @ CAPSTONE
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.

THE SCIENCE CORNER
Clock Tower lane, Jaffna.
PHYSICS DAY CLASS
By: K.Selvan B.Sc. (Hons)
ஆரம்பம்: 22.09.2012 சனி
சனி, ஞாயிறு 7.00 - 9.00am

கணினி மலிவு விற்பனை
Intel Dual Core Full Set
(200GB, 2GB Ram, 19" LED Monitor, DVDwr)
Free: WebCam/ 4GB Pendrive/ Head Phone
3 வருட உத்தரவாதம்
42,500/=





St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
2224865 / 0750698608
(சத்திர சந்திக்கு அருகில்)
HP i3, i5, Loptop Available
(14 வருட சேவையில்)
(சி/3471)(3.14)

ஆஸ்திரேலியா 5 வருட விசா ஆலோசனை
குடும்பவிசா, 2 வருடங்களில் PR பெறலாம்.
சட்டரீதியான ஆலோசனைகளிற்கு
(புதன்கிழமைகளில் திறக்கப்படமாட்டாது)
திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
37, சிவகுருநாதர் வீதி, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
0212219016
(தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் இடம் பெறமாட்டா)
(23071)(3.6.14)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
புதிய வகுப்புக்கள் Batch I - 17.9.2012 Batch II - 19.9.2012 Batch III - 22.9.2012
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(சி/3396)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org